# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

மே - 2017
பருவம் 3 புனல் 32

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20



## குலதெய்வ-நாட்டார் தெய்வ எதிர்ப்பிதழ்



# குலதெய்வ வழிபாடுகள் அழியாமல் அகமணமுறை அழியாது!

**வினா - விடை**

**அகமணமுறை என்றால் என்ன?**

பல தலைமுறைகளாக, பரம்பரை பரம்பரையாக ஒரே ஜாதிக்குள்ளேயே திருமணம் செய்துக் கொண்டு வரும் முறைதான் அகமணமுறை எனப் படும்.

**குலதெய்வ வழிபாட்டுக்கும் அகமணமுறைக்கும் என்ன தொடர்பு?**

தாழ்த்தப்பட்டவர்களோ, பிற்படுத்தப்பட்டவர்களோ, பார்ப்பனர்களோ - எந்த ஜாதியாக இருந்தாலும், எந்த இனமாக இருந்தாலும் ஒரு ஜாதிக்குள் திருமணம் என்று முடிவுசெய்து விட்டால், அந்தத் திருமணத்தில் மாமன், மச்சான் முறை - பங்காளி முறை என அடையாளம் பார்ப்பதற்கு அடிப்படையாக இருப்பது குல தெய்வங்கள்தான். குலதெய்வம் என்ன? என்னசாமி கும்பிடுவீங்க? என்ன கோயில் கும்பிடுவீங்க? என்று கேட்டுத் தெரிந்து, உறுதி செய்த பிறகு, அதன் அடிப்படையில் தான் உறவுமுறையை உறுதிசெய்து திருமணங்கள் நடைபெறுகின்றன.

**கருப்புச்சாமி, கருப்பணசாமி இவையெல்லாம் நமது தெய்வங்கள் தானே? இந்தத் தெய்வங்கள் எல்லோரும் நமது குடும்பங்களின் முன்னோர்கள் தானே? இவை பார்ப்பன, ஆரிய தெய்வங்கள் இல்லையே?**

கருப்புச்சாமியோ, கருப்பணசாமி, அய்யனாரோ, பட்டத்தரசியோ, காமாட்சியோ எந்தக் குல தெய்வமாக இருந்தாலும், அவை எல்லாம் கி.பி. 4 ஆம் நூற்றாண்டிலிருந்தே பார்ப்பனக் கடவுள்களான சிவன், விஷ்ணு, பார்வதி இவர்களோடு கலந்துவிட்டன. இந்தக் குலதெய்வங்களின் கதை என்று யாரிடம் வேண்டுமானாலும் கேட்டுப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும்.

## மூத்த சங்கராச்சாரியார் பார்வையில் குலதெய்வ வழிபாடு

“நம் முன்னோர்கள் வணங்கிய தெய்வம்தான் நம் குலதெய்வம். முன்னோர்கள் என்றால், நம் தந்தை வழி முன்னோர்களையே நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ‘கோத்திரம்’ என்னும் ரிஷியின் வழிவழிப்பாதை இதுவே. பெரும்பாலும் நம் பாட்டிகள் வேறு கோத்திரத்தில் இருந்துதான் வந்திருப்பார்கள். அதனால் ஆண்வழியாகவே குலதெய்வம் அறியப் படுகிறது. இந்த ரிஷி பரம்பரை ஒரு சங்கிலித் தொடர் போல அறுபடாமல் இருக்கும். குலதெய்வத்தை வணங்கும்போது மற்ற எல்லா கோயில்களுக்குச் சென்று வழிபட்டும் கிடைக்காத பலன்கள் கிட்டும்.”

– இரா.செந்தில் குமார், www.vikatan.com

இதுதான் பார்ப்பனர் வழிபாட்டுமுறைகளுக்கு எதிரானதாகச் சொல்லப்படும் குலதெய்வ வழிபாட்டின் நிலை

**குலதெய்வங்களுக்கும் பெருந்தெய்வங்களுக்கும் என்ன தொடர்பு கூறப்படுகிறது?**

சிவனே அய்யனாரை மகனாக ஏற்றுக் கொண்டார் என்று திருஞானசம்பந்தர் தேவாரத்தி லேயே பதிகம் பாடப்பட்டுள்ளது. சிவன், விஷ்ணு, பார்வதி இவர்களின் காவல்தெய்வங்கள் தான் இந்த அய்யனார், கருப்புச்சாமி, சோனையா, சங்கையா, முனியாண்டி போன்ற குலதெய்வங்கள் என்றும் அனைத்துத் தெய்வங்களின் புராணங்களும் கூறகின்றன.

இந்திரனின் மகள்களான பூரணை, புட்கலை இருவரையும் அய்யனார் திருமணம் செய்து கொண்டார் என்று கூறி அய்யனாருக்கு இருபுறமும் இரு மனைவியரின் சிலைகளையும் சேர்த்து வைத்து வழிபடும் பழக்கம் பலநூற்றாண்டுகளாக நம்மிடம் உள்ளது.

**பார்ப்பனர்கள் எப்படிக் கதை கட்டினாலும் அந்தத் தெய்வங்கள் நமது முன்னோர்கள் தானே?**

இருக்கலாம். இந்த நமது என்பது யார் யாரையெல்லாம் குறிக்கும். யார் யாரெல்லாம் இதில் அடங்குவார்கள் என்பதில்தான் ஜாதி ஒளிந்திருக் கிறது. எந்தக் குலதெய்வமாக இருந்தாலும் அந்தக் குலதெய்வத்தை ஏதோ ஒரு குறிப்பிட்ட ஜாதியின் ஒரு குறிப்பிட்ட உட்பிரிவுதான் வணங்குகிறது. நமது முன்னோர் என்றால், நமது ஜாதியில் இருந்த முன்னோர் என்பது தான் பொருள். ஜாதியின் அடிப்படையில்தான் நமது முன்னோர் வழிபாடுகள் இருக்கின்றன.

-இதன் தொடர்ச்சி பின் அட்டை உள்பக்கம்

காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

**களஆய்வுக்குழு:**
திருப்பூர் வேணி
தாராபுரம் பூங்கொடி
செம்பட்டி தேவகி
ஆத்தூர் விஜயலட்சுமி
பல்லடம் தீபா
பல்லடம் நாராயணமுர்த்தி
பல்லடம் வடிவேல்
பல்லடம் விமல்ராஜ்
பல்லடம் மதன்
அரசூர் அ.ப.சிவா
பெரியகுளம் குமரேசன்
பெரியகுளம் த. இராவணன்
திருப்பூர் சி.இராவணன்
ஒட்டன்சத்திரம் பெரியார்நம்பி
திருப்பூர் பிரசாத்
உடுமலை மலரினியன்
ஆத்தூர் வின்சென்ட்

**பொறுப்பாசிரியர்**
சி.இராவணன்
97868 89325

**ஆசிரியர், வெளியீட்டாளர்**
சி.விஜயராகவன்
99762 56821

**வடிவமைப்பு**
முகிழ் மீடியா
97873 20044

**அச்சு**
க்ரியேட்டிவ் க்ராஃபிக்ஸ்

**ஆண்டுக்கட்டணத்தொடர்பு**
திருப்பூர் கிருஸ்ணவேணி
77084 58086

**நன்கொடை**
பெரியகுளம் குமரேசன்
99943 65133




# குலதெய்வ-நாட்டார் தெய்வ எதிர்ப்பிதழ்

தமிழர் தொன்மங்களை மீட்போம் என்றும், தமிழர் பண்பாடு - பாரம்பரியங்களைக் காப்போம் என்றும் தமிழ்த்தேசிய அமைப்புகளைச் சேர்ந்த பலரும், பலகாலமாகப் பேசி வருவதைப் பார்த்திருப்போம். அண்மைக் காலமாக அந்தக்குரல் கொஞ்சம் அதிகமாகி வருகிறது. இவர்கள் காப்பாற்ற முயற்சிப்பதெல்லாம் தமிழர் பண்பாடுகள் அல்ல. முழுக்க முழுக்க ஆரியப் பார்ப்பனப் பண்பாடுகளே.

வடஇந்தியாவில், ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் அதன் முன்னணி அமைப்புகளும் கடந்த 20 ஆண்டுகளாக இந்தத் தொன்மங்களைக் மீட்கும் பணியைத்தான் செய்து வந்தன. வடமாநிலங்களில் உள்ள ஒவ்வொரு ஜாதியிலும் இருக்கும் பழைய தெய்வங்களையும், குலதெய்வங்களையும், கிராம தெய்வங்களையும் தங்களது ஆயுதங்களாகக் கையிலெடுத்தன.

குலதெய்வக்கோவில்களும், கிராமக்கோவில்களும் விஸ்வ ஹிந்து பரிஷத்தின் பெரும் நிதி உதவியுடன் புனரமைத்தது. ஒவ்வொரு ஜாதியிலும் வாழ்ந்து மறைந்த ஜாதித்தலைவர்களின் சிலைகளையும், சின்னங்களையும் பெரும் பொருட்செலவில் புதுப்பித்து, அவற்றுக்கு விழாக்களை ஏற்படுத்தினர். கிராமக் கோவில்களின் பூசாரிகளை அர்ச்சகர் பயிற்சி என்ற பெயரில், தங்கள் கட்டுப்பட்டுக்குள் கொண்டு வந்தனர். அதன் வழியே அந்த கிராமங்களையே தன்வசப்படுத்தினர். அந்த அடிப்படையில் நாட்டையே பிடித்தனர்.

வடமாநிலங்களில் மட்டும் அந்த இரகசியத்திட்டம் செயல் பட்டது என முடிவு செய்ய வேண்டாம். இந்த இரகசியத்திட்டம் தமிழ்நாட்டிலும் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக எந்தப் பரபரப்பும் காட்டாமல், சத்தமில்லாமல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமக் கோவில்கள், குலதெய்வக்கோவில்களைப் பார்ப்பனக் கட்டுப்பாட்டிலும், ஆர்.எஸ்.எஸ் ஆதிக்கத்திலும் அடங்கத் தொடங்கி பல வருடங்கள் முடிந்துவிட்டன. இவை யெல்லாம் அரசியல் தளத்தில், பண்பாட்டுத்தளத்தில் அண்மைக் காலமாக நடந்துவரும் மாற்றங்கள்.

ஆனால், ஆர்.எஸ்.எஸ் -ன் இந்த பண்பாட்டுப் படையெடுப்பு வெற்றிபெற்று வருவதற்கு முக்கியக்காரணம் அந்தத் தெய்வங்களின் வழிபாட்டில் ஏற்கனவே ஆதிக்கம் செலுத்தியிருந்த - இந்து, பார்ப்பனப் பண்பாட்டு அடையாளங்கள்தான்.

கி.பி.4 ஆம் நூற்றாண்டிலிருந்தே இந்தத் தெய்வங்கள் பார்ப்பனியத்தால் விழுங்கப்பட்டுவிட்டன. எல்லாம் முடிந்து பல நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. இப்போது போய் அவற்றை மீட்போம், காப்போம் எனப் பேசுவது யாருக்குப் பயன்படும் என்பதை முற்போக்கு அமைப்புகளில் பணியாற்றும் தோழர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் முந்தைய ஆட்சிக்காலங்களைவிட இப்போது முழுவீச்சில் இந்தப்பணி நடைபெற்று வருகிறது. பிற்படுத்தப் பட்டோர் வசிக்கும் பகுதிகளில் மட்டு மல்லாமல், தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் பகுதிகளிலும் தனிக்கோவில்களைக் கட்டுவதற்கும், அவற்றுக்குக் குடமுழுக்கு நடத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. பறையர்களின் தெய்வமான ‘சாம்பான்’ பார்ப்பனர்களால் ‘சாம்பசிவனாக’ அவதாரம் எடுத்துக் கொண்டே வருகிறார்.

ஊர் - சேரி எனும் இரட்டைவாழ்விட முறையை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியுள்ள இக் காலத்தில் அந்த இரட்டை வாழ்விடங்களை உறுதிப் படுத்தும் முயற்சிகளாக இந்தத் தனிக்கோவில் களும், குலதெய்வ வழிபாடுகளும் முன்னிற்கின்றன.

வேதங்களுக்கு எதிராகவும், பார்ப்பனர்களுக்கு எதிராகவும் புத்தருக்கும் முன்பே பல தலைவர்கள் இந்தியப் பகுதிகளில் வாழ்ந்தார்கள். கபிலர், கணாதர் போன்ற பரிவிராஜகர்கள் (நாடோடிகள்) பலரையும், அவர்கள் உருவாக்கிய பார்ப்பன எதிர்ப்புத் தத்துவங் களையும் வரலாற்றில் காணலாம். புத்தர் உட்பட அவர் களிடம் இருந்த சின்னச்சின்ன சறுக்கல்கள் பார்ப்பனியம் அவர்களை விழுங்குவதற்குக் காரணமாக இருந்தன.

12 ஆம் நூற்றாண்டிலும் அதற்குப்பிறகும், சுல்தான்கள் - முகலாயர்கள் ஆட்சிக் காலத்திலும் பார்ப்பனப் பண்பாட்டு எதிர்ப்புப் புரட்சி கிளம்பியது. நாமதேவர், திருலோச்சன், சத்னா, பேனி, இராமாநந்தர், பீபா, தன்னா, செயின், கபீர், இரவிதாசர், குருநானக், வள்ளலார், இராமாநுஜர் எனப் பலரும் ஆரியப் பார்ப்பனர்களுக்கு எதிராகவும், இந்து வேத, சாஸ்திர, சம்பிரதாயங்களுக்கு எதிராகவும் தீவிரமானப் பணிகளைச் செய்து வந்தனர். இவர்கள் பின்னால் இலட்சக்கணக்கான மக்களும் இருந்தனர். சில காலங்களில் அரசுகளும் ஒத்துழைப்புக் கொடுத்தன. அப்படி இருந்தும் இவர்களும் பார்ப்பனர்களால் செரிமானம் செய்யப்பட்டனர்.

இந்துமதம் எனும் நிறுவனம் மிகவும் இறுக்கமான சாஸ்திர, சம்பிரதாயங்களையும், ஆகம விதிகளையும் மட்டும் நம்பி இயங்கும் நிறுவனம் அல்ல. தேவையான காலங்களில், தேவையான அனைத்து வகையான மாற்றங்களையும் அனுமதித்து, பிறகு முற்றிலும் உள்வாங்கிக்கொள்ளும் தன்மை படைத்தது. புத்த மதத்தின் புலால் மறுப்பு போன்ற பல பண்பாடுகளை தனதாக் கியதைப் போன்ற பல சான்றுகளை நாம் அறிந்திருப்போம்.

ஒன்றுக்கொன்று வெட்டிக்கொண்டும், குத்திக் கொண்டும் இருந்த பல்வேறு சைவ மதப் பிரிவுகளையும், வைணவ மதங்களையும் ஒன்றாக்கி ஒரே இந்து மதமாக்கியது அந்த நிறுவனம்தான். சைவ, வைணவக் கடவுளர்களின் ஒற்றுமையின் அடையாளங்களாகவும், அதன் நீட்சியாகவும் இயங்குபவைதான் குலதெய்வ, நாட்டார் தெய்வ வழிபாடுகள். கதைகளிலும், புராணங் களிலும், வரலாறுகளிலும், தெய்வங்களின் வழிபாட்டு நடைமுறைகளிலும் அதற்கான சான்று ஏராளமாக உள்ளன. அவற்றில் சில சான்றுகளை இந்த இதழில் பதிவு செய்துள்ளோம்.

குலதெய்வங்கள், சிறுதெய்வங்கள், நாட்டார் தெய்வங்கள் ஆகியவைகளைக் கடுமையாக எதிர்த்து, தோழர் பெரியார் பேசிய, எழுதியவைகளைப் படித்திருந் தாலும், அவற்றை முற்று முழுதாக அப்படியே ஏற்காமல், களத்தில் என்ன நிலை உள்ளது என்பதையும் அறிய விரும்பினோம். களஆய்வுகளை நடத்தினோம். அடித் தட்டு மக்களிடம் படிக்கச் சென்றோம்.

நாங்கள் கற்றதை உங்களுக்கு அப்படியே தருகிறோம். நாட்டார் தெய்வங்களும், சிறு, குலதெய்வங் களும் ஆரிய - இந்து - பார்ப்பனியத்தால் - பார்ப்பனர் களால் உட்செரிக்கப்பட்டு, கிரகிக்கப்பட்டு, விழுங்கப் பட்டு, அழிக்கப்பட்டு, கழிவாக வெளியேற்றப்பட்டவை என்பதை அறிந்து வந்துள்ளோம். இவற்றைக் காப்பாற்ற நினைப்பதும், மீட்க நினைப்பதும் தமிழர்களின் விடுதலைக்கு மிக, மிகக் கடுமையான ஆபத்தை விளைவிக்கும்.

இச்சூழலில், முற்போக்கு அமைப்புகளில் பணி யாற்றும் தோழர்கள் பலரது மனநிலையும், கொள்கைச் செயல்பாட்டு நிலையும் இன்னும் கூடுதல் கவலையை அளிக்கின்றது. பெரியாரிய, அம்பேத்கரிய, மார்க்சிய இயக்கங்களில் பணியாற்றும் தோழர்களிடம்கூட இவை குறித்து ஒரு மயக்கநிலை காணப்படுகிறது.

முற்போக்கு அமைப்புகளின் தோழர்கள் பலர் தமிழர் உரிமைகளுக்காகப் போராடுவார்கள், தீண்டாமை ஒழிப்புக்காகப் போராடுவார்கள், ஏன் ஜாதி ஒழிப்புக் காகவும் களமாடுவார்கள், பன்னாட்டு நிறுவனங்களையும், சர்வதேசச் சக்திகளையும்கூட எதிர்த்து நிற்பார்கள். ஆனால் தன் குழந்தைக்குத் தன் ஜாதியின் குலதெய்வக் கோவிலில் மொட்டை அடித்து, காதுகுத்து விழாவை நடத்துவார்கள்.

தன் பிள்ளைகளுக்கு சொந்த ஜாதியில், குல தெய்வத்தின் அடிப்படையில் திருமண உறவுகளை மேற்க் கொள்வார்கள். ஜாதி மறுப்புத் திருமணத்தைக்கூடச் செய்து விடுவார்கள். ஆனால், குலதெய்வ வழிபாடுகளைத் தவிர்க்கமாட்டார்கள். குலதெய்வக் கோவிலுக்குக் கொடுக்க வேண்டிய தலக்கட்டு வரியைக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். கிடாவெட்டு, நோன்பி போன்ற பெயர்களில் ஜாதிச் சொந்தங்கள் நடத்தும் ஜாதிய விழாக் களுக்குத் தவறாமல் சென்று வருவார்கள். கிராமங்களில் நடக்கும் திருவிழாக்களுக்குச் சென்று வருவார்கள் அல்லது நன்கொடையை மட்டும் வழங்குவார்கள்.

இப்படிப்பட்ட புரட்சியாளர்கள் பலருக்கு அண்மைக்காலமாக இந்தத் தொன்மம், செம்மாந்தம், பண்பாடு, பாரம்பரியம் பற்றியெல்லாம் பெரும் அக்கறை

உருவாகி வருகிறது. கல்வியாளர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ்த்தேசியர்கள் எனப்பலரும் இவ்வகைப் புரட்சியாளர்களுக்கு மென் மேலும் போதையை ஏற்றி வருகிறார்கள். பண்பாட்டு, பாரம்பரிய, தொன்மப் போதைகளிலிருந்து தோழர் களையும், மக்களையும் மீட்கவே இந்த குலதெய்வ-நாட்டார் தெய்வ எதிர்ப்பிதழ்.

பல்வேறு ஜாதிகளின் குலதெய்வங்களைப் பற்றி அந்தந்தக் குலதெய்வங்களின் பூசாரிகளிடமே நேரடியாகத் தகவல்களைப் பெற்றோம். வழிபடும் மக்களிடமும் அனுபவங்களைக் கேட்டு அறிந்தோம். அவர்களிடம் பெற்ற தகவல்களை அப்படியே அச்சில் ஏற்றியுள்ளோம். அவற்றில் கூறப்பட்டுள்ள கதைகளிலும், புராணங்களிலும், வழிபாட்டு நடைமுறைகளிலும் நமக்கு நம்பிக்கை இல்லை. ஆனால், அந்தக் கதைகளும், வழிபாட்டு நடைமுறைகளும் பெரும்பாலும் அனைத்து ஜாதியினரின் வழிபாட்டிலும் உள்ள பல ஒற்றுமைகளை உணர்த்துகின்றன.

சிவன், விஷ்ணு, பார்வதி இந்த மூன்று பெருந்தெய்வங் களோடு தொடர்பில்லாத கதைகளே இல்லை.

ஜாதியை, ஜாதி முறையை நியாயப்படுத்தி, பலப் படுத்தாத தெய்வங்களே இல்லை.

ஆணாதிக்கத்தை வலியுறுத்தாத தெய்வங்களே இல்லை.

பார்ப்பனர்களை விலக்கிய வழிபாடுகள் எதுவும் இல்லை. பார்ப்பனிய ஆதிக்கம் அல்லாத தெய்வங்களே இல்லை. இவைதான் நாங்கள் உணர்ந்த ஒற்றுமைகள்.

மனுசாஸ்திரத்திலும், வேதங்களிலும் கூறப்பட்டுள்ள ஜாதிமுறையைப் பயிற்றுவிக்கும் களங்களாகவே இந்த வழிபாடுகள் உள்ளன என்பதையும் நேரடியாகக் கண்டோம்.

ஊர்க்கூட்டம் போடுவது, திருவிழாவை முடிவு செய்வது, சாமி சாட்டுவது, காப்புக் கட்டுவது, பந்தக்கால் நடுவது, தலக்கட்டுவரி, கிராமக்கோவில்வரி வசூலிப்பது, குதிரை எடுப்புக்குக் குதிரைத் தயார் செய்வது, குடை பிடிப்பது, நிறைமரக்கால் தூக்குதல், குதிரை தூக்குவது, தீப்பந்தம் பிடிப்பது, மாற்றுத்துணி ஏற்பாடு, பொங்கல் வைப்பது, படைப்பது, கிடா வெட்டுவது, முளைப்பாரி எடுப்பது, முதல்மரியாதை பெறுவது, பரிவட்டம் கட்டுவது, திருநீர் பெறுவது, மேளம் அடிப்பது, அலங்காரம் செய்வது, ஊரையும், கோவிலையும் சுத்தம் செய்வது, தெய்வத்தைத் தரிசிக்கும் முறை, தரிசிக்கும் இடம், விழாக்களில் கலை நிகழ்ச்சிகளைக் காணும் இடம், விழாவில் செய்யும் வேலை களுக்குக் கொடுக்கப்படும் சன்மானம் என குலதெய்வ, நாட்டார் தெய்வ வழிபாடுகளின் ஒவ்வொரு அசைவிலும், ஒவ்வொரு அணுவிலும் ஜாதிமுறைதான் கடுமையாகப் பின்பற்றப்படுகிறது.

பலஜாதியினர் ஒரே தெய்வத்தைக் கும்பிடும் கோவில்களும் உள்ளன. மதுரை முனியாண்டி, வத்தலக்குண்டு மூங்கிலணைக் காமாட்சி, சிறுவாச்சூர் மதுரகாளி, கோச்சடை சோனைமுத்தையா இப்படிப் பல கோவில்களும் உண்டு. இவற்றிலும் ஒவ்வொரு ஜாதிக்கும்



ஒவ்வொரு வேலை என அந்தந்த ஜாதிக்கு மனுதர்மத் திலும் சமுதாயத்திலும் என்ன நிலை உள்ளதோ, அதே நிலையில், அதே படிநிலையில் வேலைகள் ஒதுக்கப் படுகின்றன.

ஒரு மனிதன் பிறக்கும் போது ஜாதி, மத உணர்வுகள் இன்றித்தான் பிறப்பான், வளர்வான். வளரும்போது, அவனுக்கு ஜாதி முறையையும், ஆணாதிக்கத்தையும் ஊட்டி வளர்ப்பதும், பயிற்றுவிப்பதும் இந்தத் தெய்வங் களின் வழிபாடுகள்தான். ஒரு பிற்படுத்தப்பட்டவர் தன்னை உயர்ந்தவன் என்று கருதிக் கொள்வதற்கும், ஒரு தாழ்த்தப்பட்டவர் தன்னை அடிமையாக, சேவகம் செய்ப வராகக் கருதிக்கொள்வதற்கும் அடிப்படையான மனநிலை யையும் - சிந்தனையையும் விதைப்பவை இந்தத் தெய்வங் களின் வழிபாடுகளே.

இரட்டைக்குவளையை உடைக்க ஒரு பிற்படுத்தப் பட்டவர் மனதளவில் தயாராகிவிடுவார். தெருக்களில், அலுவலகங்களில், கல்விநிலையங்களில் நிலவும் தீண்டாமைக்கொடுமைகளை எதிர்க்க பிற்படுத்தப் பட்டவர்கள் மனதளவில் தயாராகி விடுவார்கள். தாழ்த்தப் பட்டவர்களும் இக்கொடுமைகளை எதிர்த்துக்கள மிறங்கும் துணிவுடன் இருக்கிறார்கள்.

ஆனால், இத் தீண்டாமைக் கொடுமைகளையும், தீண்டாமைச் சிந்தனைகளைகளையும் இவற்றுக்கு அடிப்படையான ஜாதியக்கருத்தியலையும் விதைக்கும் இடத்தில் உள்ள - பரப்பும் இடத்தில் உள்ள குலதெய்வ, நாட்டார் தெய்வ, பெருந்தெய்வக் கோவில்களையோ, தெய்வங்களையோ எதிர்க்கவேண்டும் என்ற துணிவு இரு தரப்பிலும், யாரிடமும் இல்லை.நச்சு மரத்தின் வேருக்கு நீர் பாய்ச்சிக்கொண்டே அதன் கிளைகளோடு கோபித்துக் கொண்டு, அவை வளர வளர வெட்டிக்கொண்டிருப்பது அறிவுடையவர்கள் செயல் அல்ல.

பிற்படுத்தப்பட்டவருக்கு ஆதிக்கத் திமிரையும், தாழ்த்தப்பட்டவருக்கு அடிமைத்தன்மையையும் செயல் வழிக்கற்றல் போலப் பயிற்றுவிக்கும் குலதெய்வ - நாட்டார் தெய்வ வழிபாடுகளின் அழிவில் தான் தீண்டாமை ஒழிப்புப்பயணம் தொடங்கும்; தொடங்க முடியும். பார்ப்பனக் கோவில்களின் ஆதிக்கங்களையும், இந்து சாஸ்திர, சம்பிரதாயங்களையும், வேதங்கள் உருவாக்கிய பண்பாடுகளையும் அழித்து, தோழர் பெரியாரின் திராவிடர் பண்பாட்டைச் செயல்படுத்துவதன் வழியேதான் ஜாதி ஒழிப்புப் பயணம் வெல்லும்.

களஆய்வுக்குழு சார்பில்
அதி அசுரன்

# புராணங்களை அடிப்படையாகக் கொண்டவையே குலதெய்வங்கள்!



புலவர் **துரை.தில்லான்**
அவர்களின் நேர்காணல்

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டியில் வசிப்பவர் புலவர் துரை.தில்லான். தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் மாநிலத் தேர்வுச் செயலாளராகவும், அந்த அமைப்பின் மாத இதழான 'நமது தமிழாசிரியர்' இதழின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றியவர். தமிழ்நாடு அரசு பாடநூல் கழகம் உருவாக்கிய 9 வகுப்பு, 10 ஆம் வகுப்புகளுக்குரிய தமிழ்ப்பாடத்திட்டக்குழுவிலும் பணியாற்றியவர். இலக்கணத்தடம் - எழுத்து, இலக்கணத்தடம் - சொல்லதிகாரம் என்ற இரண்டு இலக்கணஉரை நூல்களை எழுதியவர். தொடர்ந்து 'இலக்கணத்தடம்' என்ற தலைப்பிலேயே இலக்கணஉரை நூல்களை வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளார். வள்ளலார் குறித்த ஆய்வுக்கட்டுரைகளை எழுதி வருகிறார். அவை நூலாக வெளிவர உள்ளது. பல தமிழாசிரியர்களை உருவாக்கியவர். தமிழ் பயிற்றுவிக்கும் தமிழாசிரியர்களுக்காக நடைபெறும் இலக்கணம் தொடர்பான பயிலரங்குகளில் வகுப்புகளை நடத்தி வருபவர்.

**தமிழ்நாட்டில் குலதெய்வங்களின் அடிப்படையில்தான் திருமண உறவுகள் செயல்படுத்தப் படுகின்றன என்று ஒரு கருத்து உள்ளது. அது உண்மையா? அதைப்பற்றி விளக்குங்கள்.**

தமிழ்நாட்டில் பெரும்பாலும் எல்லாக் குலதெய்வங்களுக்கும் சிவன், பார்வதி, திருமால் இவர்களோடு தொடர்பு உள்ள புராணக்கதைகள் உள்ளன. அந்தக் கதைகளின்படி சிவன், பார்வதி, திருமால் இவர்களின் அவதாரங்களும், இவர்களின் மறுபிறப்புகளும், இவர்களின் காவல்தெய்வங்களும் தான் தமிழர்கள் அனைவருக்கும் குலதெய்வங்களாக உள்ளன. இந்தக் கதைகள் உண்மையா? கற்பனையா? பார்ப்பனர்கள் திணித்ததா? நாமே விரும்பி ஏற்றதா? என்ற விவாதத்திற்குள் நான் வரவில்லை. ஆனால் இந்தக் கதைகளின் அடிப்படையில் தான் குல தெய்வங்கள் உள்ளன.

அந்தக் குலதெய்வங்களை அடிப்படையாக வைத்துத்தான் தமிழர்கள் திருமணங்களில் மாமன், மச்சான், பங்காளி முறைகளை அடையாளம் காண் கிறார்கள். திருமணங்களைச் செய்கிறார்கள். தமிழ் நாட்டில் வாழும் தெலுங்கு பேசும் மக்களும், கன்னடம் பேசும் மக்களும்கூட இந்த அடிப் படையில் தான் திருமண உறவுகளை மேற்கொள் கின்றனர்.

சிவன், பிரம்மா, விஷ்ணு என்ற மூன்று பெரிய தெய்வங்களில் தமிழ்நாட்டைப் பொருத்தவரை சிவவழிபாடும், திருமால்வழிபாடும் உண்டு. குலதெய்வம் என்று இருப்பதெல்லாம் அந்தந்தக் குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து ஏதாவது ஒரு வீரத்தினாலோ அல்லது விபத்தினாலோ முடிவு எய்தவர்கள். அவர்களைத்தான் குலதெய்வம் என்று வைப்பது வழக்கம்.

எங்களுடைய மாமன், மைத்துனர் வகையில் இருப்பவர்களெல்லாம் காமாட்சி அம்மன் என்ற பெயரிலே வைத்துக் கொண்டார்கள். இதில் எல்லாம் பார்வதி தான் அவதாரம் என்றாலும் ஒவ்வொரு குடும்பமும் அவர்களுக்கு மரபுப்படி உறவைக் காட்டுவது போல அமைந்துள்ளது. எங்கள் கிராமத்தில் காமாட்சி அம்மன் கும்பிடுபவர் எங்களுக்கு மாமன் முறைப்பட்ட வகை. அண்மைக்காலத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டி ருக்கிறது.

எங்களுடைய குலதெய்வம் என்பது தில்லாளம்மன், தில்லையம்மன். தில்லையம்மன் என்பது தில்லையில் இருக்கக்கூடிய அம்மன். சிவபெருமானுடைய மனைவி என்பதனால் தில்லை அம்மன் என்று பெயர் வந்தது. தில்லாளம்மன் என்பது அதனுடைய மறுபெயர்தான். தில்லை யம்மன், தில்லாளம்மன், பார்வதி, பகவதியம்மன், காமாட்சி அம்மன் எல்லாம் பார்வதியைக் குறிக்கக் கூடிய பெயர்கள் தான். ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கதைகள்.

தில்லையம்மன் என்பது சிவனை அடைவ தற்காக பிறவி எடுத்து அந்த பெண்ணும் நடனத்தில் சிவனைப் போல சிறந்து விளங்கி காதலால்

இருவரும் திருமணம் முடித்துக் கொண்டவராவார். அங்காள பரமேஸ்வரி தீக்குண்டத்திலிருந்து எழுந்தவள். அவளும் பார்வதிதான். பார்வதியின் அடுத்த பிறவி அங்காள பரமேஸ்வரி. ஆனாலும் அவர்கள் தனி. வீரபுத்திரன், அரியபுத்திரன், அங்காளம்மன், அங்கம்மாள் என்ற பெயரோடு அங்கு ஒரு கோவில் இருந்தது. காமாட்சி அம்மனும் பார்வதியின் அவதாரம்தான். அதேபோல பகவதிஅம்மன் என்பவள் சிவபெருமானை விட்டு அகலாதபடி சிவனுடைய உடலிலேயே பாகம் பெற்றவளனதால் பாகவதி, பகவதி என்ற பெயரோடு இருக்கிறது.

**பிறக்கும் குழந்தைகளுக்குக் குலதெய்வத்தின் அடிப்படையில்தான் பெயர் வைக்கிறார்கள் என்றும் ஒரு கருத்து உள்ளது. அது உண்மையா?**

சிதம்பரத்தினுடைய இன்னொரு பெயர் தில்லைவனம். தில்லைவனத்தில் இருக்கக்கூடிய தெய்வம் தில்லான். தில்லான் என்றால் நடனம், நடராசன் என்று பொருள். நடராசன் என்ற பொருளிலும், தில்லைவனத்தில் இருக்கும் காரணத்தினாலும் தில்லையான் என்ற பெயர் மருவி தில்லான் என்று வந்தது.

சிதம்பரத்திலுள்ள சிவபெருமானைக் குல தெய்வமாகக் கருதியதனால் எங்கள் கிராமத்திலுள்ள 250 வீடுகளில் எங்களுடைய பங்காளியாக இருக்கும் 175 குடும்பங்களுக்கு மேல் ஒவ்வொரு குடும்பத்திலும் மூத்த ஆணுக்கு “தில்லான்” என்றும், மூத்த பெண்ணுக்குத் “தில்லையம்மாள்” என்றும் பெயர் வைக்கவேண்டும் என்று ஒரு மரபாக வந்துள்ளது.

அந்த மரபுப்படி எனக்கு என் குடும்பத்தில் மூத்தவனாக இருப்பதால் “தில்லான்” என்று பெயர் வந்தது. வடஇந்தியாவை பொருத்தவரையிலும், தென்இந்தியாவை பொருத்தவரையிலும் வேறு இடங்களில் இல்லையென்றாலும் அருப்புக் கோட்டை பக்கத்தில் உள்ள திருச்சுழியில் ஒரு கோவிலில் தட்சிணதில்லான் என்ற பெயரில் ஒரு தெய்வம் உண்டு. சிவபெருமான் தெற்கு முகமாக பார்த்திருப்பது தட்சிணாமூர்த்தி என்பார்கள். அந்தத் தட்சிணாமூர்த்தியுடைய சிலைக்குக் கீழ் தட்சிணத்தில்லான் என்ற பெயர் இருப்பது ஒன்று தான் ஆதாரம் கிடைக்கின்றது. வரலாறு கிடைக் கின்றது. மற்றபடி இந்தப் பெயர் மரபுப்படி வந்ததே தவிர நானாக விரும்பி வைத்த பெயர் அன்று.

**குலதெய்வத்தோட பெயரை வீட்டில் இருக்கிற முதல் பையனுக்கோ அல்லது பெண்ணுக்கோ வைக்கிற பழக்கம் குறிப்பிட்ட ஒரு ஜாதியில் மட்டும் இருக்கிறதா? தமிழ் நாட்டில் இருக்கிற அனைத்து ஜாதியிலும் இருக்கிறதா?**

எல்லா ஜாதிகளிலும், எல்லாக் குலதெய்வங் களிலும் இந்த மரபு உண்டு. அய்யன் என்றும், காத்தான் என்றும் காமாட்சி என்றும் பெயரை அந்தந்தக் குலப்பிரிவுக்கு ஏற்ப, பெயர் வைப்பது உண்டு. வைணவ மதத்துக்காரர்களின் பெரிய தெய்வமாக அந்த சிவனைப் போல திருமாலும் இருந்தாலும் - அழகப்பன் என்றும், அழகன் என்றும் வைக்கிறார்கள்.

அழகன், அழகப்பன் என்பது பாடுபடும் இனத்திற்கு அதாவது பள்ளர்கள் வைக்கிறார்கள், வன்னியர்கள் வைக்கிறார்கள். அந்த அளவுதான். மேலிடத்தில் அழகர்சாமி என்று வைப்பார்கள். செட்டியார்கள் அழகர்சாமி என்று வைக்கிறார்கள். நீலமேகம், நீலகண்டன் என்று சொல்லி முன்னேறிய இனத்தவர்கள் வைத்துக் கொண்டார்கள். எல்லாம் ஒருவனே. பல, பல பெயர்கள்.

இராமன் என்றாலே தாழ்த்தப்பட்டவன், ராமசாமி என்றாலே மேல்ஜாதி. ராமசாமி என்ற பெயரை தாழ்த்தப்பட்டவர்னு சொல்றவங்க யாரும் வைத்துக் கொள்வதில்லை. மேல் ஜாதிக்காரர்கள் இராமன் என்று வைத்துக் கொள்வதில்லை. குப்பு சாமி, குப்பன் என பெயர் வேறுபாடு உள்ளது. தாழ்த்தப்பட்டவர் கந்தசாமி என்று வைத்துக் கொண்டாலும் மேல்ஜாதிக்காரர்கள் என்று சொல்லப்படுவர்கள் கந்தன் என்றுதான் கூப்பிடு வார்கள். கந்தன் என்று சொல்வார்களே தவிர கந்தசாமி எனச் சொல்ல மாட்டர்கள். ஆனால் கந்தனும், கந்தசாமியும் பாலசுப்பிரமணியனும் முருகனும் எல்லாமே காக்கும் கடவுள்கள்தான். சிறுதெய்வங்கள்தான். குலத்துக்கு தகுந்தபடி எழுத்தை மாற்றுகிறார்கள். இப்போது இந்த முறையில் சில மாற்றங்கள் வந்துள்ளன.

எங்கள் குடும்பத்தில் மூத்தவனுக்கு ‘தில்லான்’ என்றிருந்தால், இரண்டாவது பையனுக்கு ‘பச்சை’ என்றும் பச்சையப்பன் அது பச்சையப்ப முதலியார் தொடங்கி கி.த. பச்சையப்பன் வரை இரண்டாவது பையனாகத்தான் இருக்கும். அந்தப் பச்சையப்பன் என்பது சிவனையும், பச்சையம்மாள் என்பது பார்வதியையும் குறிக்கும். ஆனால் அந்தப் பழக்கம் மறைந்து வருகிறது.

திருமால் என்றால் அழகன், அழகப்பன் என்ற பெயர் வந்தது. அந்த பெயர்களில் ஊர்கள் உண்டு, அழகம்மாள் என்று பெண் பெயர் வைப்பது உண்டு. அது எல்லாம் திருமாலை அடிப்படையாக வைத்தது. ஆனாலும் ஒவ்வொரு ஜாதியிலும் இந்தப் பெயர் உண்டு. குலப்படி இது வந்து தெய்வ வழிபாடுகளிலிருந்தே அப்படியே வந்து இப்போது மரபாகவே மாறிவிட்டது.

**சிவன், விஷ்ணு, பிரம்மா என மூன்றும் பெரு தெய்வங்கள். இவர்களுடைய அடுத்த பிறவிகள் சிறு தெய்வமாக வருகிறார்களா?**

ஆமாம். அடுத்த அடுத்த பிறவியாக வந்தபோதல்லாம் சிவபெருமான் இடையராக, உழவனாக, உழைப்பாளியாக பிறந்து வருவார். ஒவ்வொரு குலத்துக்கும் கேட்டால் அவர்களு கென்று ஒரு மூலம், பிடித்துக்கொண்டே போனால் அங்கு ஒரு முனிவர் வருவார். அந்த முனிவர் யாருனா தேவலோகத்தில் இருந்த தேவர்கள் தவறு செய்து, சிவபெருமானால் தண்டிக்கப்பட்டு இங்க வந்து பிறக்கிறாங்க.

**திண்டுக்கல் மாவட்டத்தில் இந்துவாக இருந்து, கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்கள் பெண் கொடுத்து பெண் எடுப்பது அந்தந்த இந்துக் குலசாமியை வைத்துத்தானா?**

கிறிஸ்த்துவரா இருந்தாலும் மாரம்பாடி, வெள்ளோடு, சிலுக்குவார்பட்டி, பெருமாள் கோவில்பட்டி, கரிசல்பட்டி ஆகிய சுற்றுப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் போய், பெண் வீடு, மாப்பிள்ளை வீடு, பார்த்து மரபுப்படி பார்ப்பவர்கள் எந்தச் சாமி கும்பிடுறவங்கன்னு கேக்குறாங்க.

கருப்புசாமியா, காமாட்சி அம்மனா என்று கேட்பார்கள். மாரம்பாடியில இருக்கக்கூடியவர்கள் நாங்க மாமுண்டியான் சாமி கும்பிடுறவங்க என்பார்கள். மாமுண்டி என்பது திருமாலுடைய ஒரு அவதாரம். அதைச் சொல்லி பெண் கட்டுவாங்க. ஆனால் அதை வணங்குவது இல்லை. அந்த வரலாறும் தெரியாது.

அதேபோல காங்கேயம் குடும்பம்னு சொல்றாங்க. சிலுக்குவார்பட்டியில மைக்கேல் பாளையம்னு ஒன்று உள்ளது. அந்த ஊர்க்காரங்க ஆனையடியான் பேரைச் சொல்லிக்கிட்டுப் பெண் கேட்கிறார்கள், கட்டுகிறார்கள். அப்படி ஒவ் வொருத்தருக்கும் இங்கு நேரடியாக முறையோடு இருப்பது காமாட்சி அம்மன், கருப்பசாமி தான்.

**சங்க இலக்கியத்துல நடுகல் வழிபாடுன்னு சொல்றாங்க, அந்த நடுகல் வழிபாட்டுக்கும், குல தெய்வ வழிபாட்டுக்கும் என்ன ஒற்றுமை? என்ன வேற்றுமை?**

நடுகல் வழிபாடு என்பதற்கு குலவேறுபாடு இல்லை. மற்ற சிறுதெய்வ வழிபாட்டுக்கு தில்லாளம்மன் கும்பிடுபவர்கள் செட்டிச்சி அம்மனைக் கும்பிடமாட்டாங்க. வீருமல்லம்மாளை இந்த சௌடம்மன் கும்பிடுறவங்க கும்பிட மாட்டாங்க.

ஆனால், சில இடங்களில் மூங்கிலணைக் காமாட்சி அம்மன் கோவில் (திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே உள்ளது) போன்ற இடங்களில் பல ஜாதிகள், பல குலங்கள் ஒரே தெய்வத்தைக் கும்பிடுகின்றனர். இந்தக் கோவிலில் உள்ள காமாட்சி அம்மனை கன்னடம் பேசும் செட்டியார்களும், தெலுங்கு பேசம் நாயக்கர்களும், தமிழ்பேசும் தேவர்களும், வன்னியர்களும் குலதெய்வமாகக் கும்பிடுகின்றனர்.

எல்லா ஜாதிகளிலும் இருக்கும் சிவ வழி பாட்டுக்காரர்களும், பார்வதி வழிபாட்டுக் காரர்களும் ஒருவருக்கொருவர் மாமன், மச்சான் முறையைக் கடைபிடிக்கிறார்கள். அந்தப் புராணக் கதைகளின் அடிப்படையில் காமாட்சி அம்மனைக் குலதெய்வமாகக் கொண்டுள்ள நாயக்கர், தேவாங்கச் செட்டியார், தேவர், வன்னியர் எல்லோரும் ஒரே தெய்வத்தை வணங்கும் நிலை ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால் நடுகல் எல்லோருமே வணங்கு வார்கள். நடுகல் என்பது எல்லோருக்கும் பொது வானது. நடுகல் என்பது வரலாற்றை அடிப்படை யாக வைத்தது. இந்தக் குல தெய்வ வழிபாடு என்பதற்கு எந்த வரலாற்றுச் சான்றுகளும் இல்லை.

சிறுதெய்வ வழிபாடு என்றால், சிறுதெய்வத்தி லேயே மறுபிறவி எடுத்து வந்த பெரியதெய்வம் என ஒவ்வொரு வகை. இடைப்பட்ட வாழ்க்கையில் போனவர்கள் ஒருவகை. மரபு மாறிச் சிறியவர்கள், பெரியவர்கள், சாதியால், பொருளாதாரத்தால் அல்லது குடும்பத்தால் மாறுபட்டதோடு வந்து சிதைந்து போன வாழ்க்கை உடையவர்களை மறக்காமல் கும்பிடுகிறார்கள். அது ஒருவகை,

வீரக்கல், நடுகல் வழிபாடு இருக்குதே இது இப்பொழுது பெரியாரை எப்படி வணங்கு கிறோமோ, அதுபோலவே பிறந்தநாள், நினைவு நாள் என நினைப்பதுபோல நடுகல்லுக்கும். பொங்கல், பூ இதெல்லாம் வேண்டிக்கிறது இல்லை. இராணுவ வீரர்கள் இறந்த நாளை நினைவு நாள்னு வைத்து வணக்கம் செய்வதுதான் நடுகல் வழிபாடு.

**இந்தக் குலதெய்வ வழிபாட்டுமுறை எந்தக் காலத்தில் உருவாகியது?**

குலதெய்வ வழிபாட்டு முறை உருவாகிய காலத்தைக் குறித்துச் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் முருகனையே வெறியாட்டயறுதல் ஒன்று வைத்திருக்கிறார்கள். வெறியாட்டயறுதல் போர்களத்தில் போய் புண்பட்டு வீட்டில் வந்து படுத்து இருக்கும்போது பேய்கள் வந்து தொடாமல் இருக்க வேப்பில்லை வைத்து அடித்தற்கு சான்று இருக்கு. இங்கு அதுவும் ஒரு வழிபாடுதான்.

ஆனால் அப்படி வழிபாடு செய்ததைத் தமிழில் சொல்லி வணங்குகிறார்கள். அதற்கு முன்பு சிலப்பதிகாரத்துல சதுக்கபூதம் என்று வைத்து பொய் பேசினால், உழல் செய்தால் நடுவின்றி மன்றில் போய் சாட்சி சொன்னால் அவர்களை அடித்து தின்றுவிடும் என்று வைத்துக் கொண்டார்கள்.

எங்கள் ஊரிலும் மன்றூர் என்று ஒரு இடம் உண்டு. காளியம்மன் கோவிலுக்கு முன்னால் அந்த அந்த இடத்தில் சாமி கும்பிடும்போது அந்தக்கல்லை வைத்துக் கும்பிடுகிறார்கள். அந்தச் சாமி கும்பிடு வதன் நோக்கம் நடுநிலை தவறமாட்டேன், யோக்கியம் தவறமாட்டேன், ஊழல் செய்ய மாட்டேன் பிறர் உயிரைக் கொல்லமாட்டேன், கொலை, கொள்ளை திருடு செய்ய மாட்டேன் என்று சொல்லி உறுதிமொழி எடுப்பதறகான ஒரு இடம் ‘மன்று’. அதை இப்போது ‘மண்டு’ ன்னு சொல்லி அந்தச் சாமியை மண்டுனு சொல்லி வைத்தார்கள்.

அது இந்திரவிழா நடந்த சாயல் இங்கே தெரிகிறது. ஆயிரம் வருடத்திற்கு முன்னால் இந்த வழிபாடு உண்டு. இரண்டாயிரம் வருடத்திற்கு முன்பு இல்லை. மனிதனுக்கு பயம் இருந்தது. சாமியை வணங்கினான். தமிழில் வணங்கினான் அந்த மரபு ஞான சம்பந்தர் முதல் இன்றைக்கு வரைக்கும் இருந்ததுதான். ஆனால் இந்தமுறை அதிகமான காலம் என்பது நாயக்கர் காலம்தான்.

**குலதெய்வங்களான தில்லையம்மன், கருப்பசாமி, கருப்பணசாமி மற்றும் சிறு தெய்வ வழிபாடு சங்க இலக்கியங்களில் இருந்ததா? அதற்கு எதாவது ஆதாரம் இருக்கிறதா?**

இதே சாமிகள் அப்போ இல்லை. அப்ப இருந்தெதல்லாம் போர்களத்துல இறந்தவனை தெய்வமாக வைத்துக் கும்பிட்டார்கள். அவ்வளவு தான், அதன் பிறகு புராணங்கள் வந்து தமிழ் நாட்டுல அதிக செல்வாக்கு பெற்ற காலத்தில், பரம சிவனுடைய அவதாரம் போல, திருமாலுடைய அவதாரம் போல, பிரம்மா வழியாக படைக்கப் பட்ட முனிவர்கள் போல புராணக்கதைகள் வந்தன.

அதற்குப் பின்னாடிதான் சிறுதெய்வ வழிபாடு. அக்கினியில் தோன்றியவர்கள் வன்னியர்கள் எப்படிப் பிறந்தாங்கன்னா அக்னி குண்டத்துல இருந்து முனிவர் தோன்றி வந்தார்கள் என்பது வன்னிய புராணம். சாதிக்குச் சாதி புராணம். அப்படி வந்த போது சிறுதெய்வ வழிபாடு பெருகியது. சங்க காலத்திற்குப் பின்னால். அதற்கு முன்னால் இருந்த சிறு தெய்வ வழிபாடு என்பது வீரர்களுக்கு செய்ததுதான். இந்த அவாண்டசாவு இன்னும் மற்றதெல்லாம் இருக்கிறதே, தொட்டிச்சி அம்மன் அது இதுன்னு இந்த பெயர்களைப் பார்த்தாலே தெரியும். வீரு மல்லம்மாள், வீரு நாகம்மாள், சௌண்டம்மாள், தொட்டிச்சி அம்மாள் என்ற பெயர்களைப் பார்த்தாலே பிற்காலத்துதான்.

ஏனென்றால் அதற்கு முன்னால் முருகனையே சிறுதெய்வம்னுதான் சொன்னாங்க. முருகன் வழிபாடு உண்டு. எப்ப மனிதனுக்கு மனதில் அச்சம் தோன்றியதோ, காடுகளில் வாழ்ந்த போது விலங்குகள் கிட்ட இருந்து தப்பிக்க வேண்டும் என நினைத்தானோ, இடிக்கு பயந்தானோ, மழைக்கு பயந்தானோ, புயலுக்கு பயந்தானோ அப்பொழுதே முருகனை வணங்குகிறான். புராணம் வந்த பிறகுதான் கல்விக்காக இருப்பது சுவாமிமலை முருகன், திருமணத்துக்காக இருப்பது திருப்பரங்குன்றம் முருகன், தாழ்த்தப்பட்ட பெண்ணை திருமணம் முடித்துக் கொண்டார் என்பதைக் காட்டுவதற்குத் திருத்தணி முருகன் எனப் பிரித்துக் கதைகளை உருவாக்கினார்கள்.

**பார்ப்பனர்களின் கோத்திரத்திற்கும், இந்தக் குலங்களுக்கும் எதாவது தொடர்பு உண்டா?**

பலகுடும்பங்கள் இணைந்தது குலம். பல குலங்கள் இணைந்தது கோத்திரம். தமிழர் களிடையே அப்படி கோத்திரம் என்ற பெயரில் எந்த நடைமுறையும் இல்லை. நாம் குலதெய்வம் பார்த்துத் திருமண முறையை முடிவு செய்வது போல, பார்ப்பன இனத்தில் கோத்திரம் பார்த்து மாமன், மச்சான், பங்காளி முறைகளை முடிவு செய் கிறார்கள். குலம், கோத்திரம் என்று சொற்கள் வேறு வேறாக இருந்தாலும் இரண்டின் தன்மையும் ஒன்றுதான்.

இப்போது எல்லாச் சாதியும் ஒரு முனிவரைப் பிடித்துக் கொண்டார்கள். அப்படி எல்லாம் முனிவர்கள் இருந்ததற்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை. அது அகத்திய முனிவர் வரைக்கும் கூட. அகத்திய முனிவர் கோத்திரம் இந்த அகத்திய முனிவர் இல்லை. இந்த தமிழ் அறத்தை எழுதி வைத்தாரே இவருக்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லை.

**கோத்திரங்கள் என்று வைப்பதற்கும் தமிழர்களுக்கும் சம்பந்தம் இல்லையா?**

இல்லை, பிருகு முனிவர் கோத்திரம், அத்தி முனிவர் கோத்திரம், அகத்திய முனிவர் கோத்திரம், கௌசிக முனிவர் கோத்திரம் எல்லாம் இருக்கும். ஆனால் கோத்திரத்திற்கும் தமிழனுக்கும் சம்பந்தம் இல்லை. புறநானூறு, அகநானுறுக்கும் பிற்பட்டதுல எங்கையாவது சேர்ந்திருக்கும். அதற்கு முன்பு இல்லை. புராணம் வந்துவிட்டால்தான். வரலாற்றில் இல்லை. கல்வெட்டில் இல்லை. கல்வெட்டு தோன்றியதே அதற்குப் பின்புதான்.

சங்க இலக்கிய காலத்துக்கும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான் சங்ககாலம்னு சொல்றான். அது முதல் சங்க காலம்னு ஒன்று இருக்கிறது பாருங்கள் அதுவரை கோத்திரம் கிடையாது. முனிவர் வரலாறு எல்லாம் பிரம்மா, பிரம்மாவுக்கு அடுத்தபடியாகப் படைக்கப்பட்ட முனிவர்கள், முனிவருடைய மகன்கள். எல்லா முனிவர்களின் மகன்களும் தவறான வழியில் பிறந்தவர்கள். எல்லா முனிவர்களும் அப்படித்தான். அதனால்தான் அதுக்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை. வன்னியர்கள்கூட இப்போது, நாங்க ளெல்லாம் சம்பு முனிவர் வழி வந்தவர்கள் என்று ஒரு புராணக்கதையைக் கூறிக்கொள்கிறார்கள். இவையெல்லாம் கற்பனையே.

சங்ககாலத்தில் இந்தக் கோத்திரம் இல்லை. அது உறுதி. பின்னால் வந்தது. இராஜராஜ சோழன் காலத்தில் பார்ப்பனர்கள் இங்கு அதிகமாக வந்ததற்குப் பின்னால், தமிழர்களிடையேயும் கோத்திரங்கள் வந்தன. தெலுங்கர்கள் இங்கு வந்து கலந்தார்கள். அதன் பிறகு இந்தக் கோத்திர முறைகள் பரவலாகிவிட்டன.

> “புத்த மதம் எப்படி பிராமணர்களாலேயே அழிக்கப்பட்டது என்பது புரியவில்லை. இதற்குப் பிரதானமான காரணம் குலதெய்வ வழிபாடு தான்”குலபூஜை முறை ஒழித்துக் கட்டப்பட்டதால் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்த பிராமணர்கள், ஆலோசகர்களாக மட்டுமே இருப்பது என்ற தமது கொள்கையை விட்டுவிட்டு ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர்.
>
> – தோழர் அம்பேத்கர்

## சக்கிலியர்களின் குலதெய்வங்கள்:

# சென்றாயப் பெருமாள் - வீரமாத்தி அம்மன்

**உங்களுடைய பெயர், நீங்கள் எந்த ஊர், எந்த குலத்தைச் சேர்ந்தவர்?**

என்னுடைய பெயர் செல்வி, கணவர் பெயர் கந்தன், எங்கள் ஊர் வடுகபாளையம். என்னுடைய அப்பா தாசர் குலத்தைச் சேர்ந்தவர், கடவுள் கருட பெருமாள். கணவனின் குலதெய்வம் சென்றாயப் பெருமாள் கணவரின் குலம் நாரமுத்துக் குலம் நான் செக்கிங் சென்டரில் வேலை செய்கிறேன்.

**நீங்கள் எத்தனை தலைமுறைகளாக குலதெய்வத்தை வழிபடுகிறீர்கள்-?**

நாங்கள் 5,6தலைமுறைகளாக குலதெய்வத்தை வழிபட்டுக் கொண்டிருக்கிறோம். நாங்கள் சாமிக்கு 16 வகையான பூஜைகள் செய்வோம். 16 வகையான பூ வைத்து வழிபடுவோம். இந்தக் கோவிலுக்கு வானத்தில் இருந்து சங்கு பறந்து வந்து விழுந்திருக் கிறது. நாங்கள் அதை பூக்கூடையில் வைத்து இருக்கிறோம். பூசாரி வீட்டில் இருக்கும். கோவில் விஷேச நாட்களில் மட்டும் சாமியை (சங்கு) வெளியே எடுத்துக் கொண்டு வருவோம்.

**எந்தெந்த நாட்களில் குல தெய்வ கோவில்களில் விஷேசம் இருக்கும்?**

புரட்டாசி மாதம் சனிக்கிழமையும், கார்த்தி கை மாதத்தில் கார்த்திகை தீபநாளிலும் விஷேசமாக இருக்கும். மாசி மாதத்தில் காரமடைக்கு பந்த சேவை எடுப்போம். இந்த மூன்று மாதங்களிலும் மிகவும் சிறப்பாக இருக்கும். மற்ற நாட்களில் அமாவாசை போன்ற தினங்களில் சிறப்பாக பூஜைகள் நடை பெறும். வாரம் வாரம் வெள்ளிக்கிழமை நாட்களில் பூஜைகள் நடக்கும். இந்தக் கோவிலைச் சார்ந்தவர் கள் இடைப்பட்ட நாட்களில் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்துவிட்டு போவார்கள்.

**கோவிலுக்கு பூஜை செய்வது யார்? கோவில் செலவுகளையெல்லாம் யார் ஏற்றுக் கொள்வார்கள்?**

கோவிலுக்கு பூஜை செய்வது எங்களுடைய குலத்தைச் சேர்ந்தவர்கள்தான். நாங்கள் அனைவரும் சேர்ந்து முடிவு எடுத்து பூசாரியைத் தேர்ந்தெடுப் போம். பூசாரியாக இருப்பவர்கள் மிகவும் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். எந்த ஒரு வீடுகளிலும் தண்ணீர் கூட வாங்கிக் குடிக்க மாட்டார்கள். பாயில் படுக்க மாட்டார்கள். அவருக்குப் பின் அவருடைய மகன்கள் பூஜை செய்ய வேண்டும். மகன்கள் பூசாரி பட்டத்தை வேண்டாம் என்று சொல்லும்போது பங்காளிகள் யாராவது பூஜை செய்வார்கள்.

கோவில் செலவுகளையெல்லாம் கோவிலைச் சார்ந்தவர்களிடம் வரி வசூல் செய்வோம். கோவிலுக்கு வரி செலுத்தியும், அன்னதானச் செலவுகளையும் ஏற்றுக் கொள்ள முன்வருவார்கள். ஒவ்வொரு செலவுகளையும் தானாகவே முன்வந்து ஏற்றுக் கொள்ள பலர் வருவார்கள். வேறு சமூகத்தைச் சார்ந்தவர்களும் கோவிலுக்கு நன் கொடையாகவோ, செலவுகளை ஏற்றுக் கொள் வார்கள்.

**பந்த சேவை எடுக்கும் வரலாறு பற்றிச் சொல்லுங்கள்**

கோயம்புத்தூர் மாவட்டம் காரமடை பெருமாள் கோவில் அரங்கநாத சுவாமிக்கு வருடம் ஒருமுறை மாசி மாதத்தில் பௌர்ணமி நாட்களில் பந்த சேவை எடுக்கும் வழக்கம் உள்ளது. இந்தப் பந்த சேவை எடுப்பதன் நோக்கம் என்னவென்றால், இராமயணத்தில் வரும் ஆஞ்சநேயருக்குப் பெருமை சேர்க்கும் விதமாக இராமனும்,சீதையும் செய்யும் வழிபாடு.

இராமயணத்தில் இராவணன், சீதையைத் தூக்கிக் கொண்டு போனதற்குப் பிறகு இராமனும், இலட்சுமணனும் மற்றும் அனுமன் படையும் இலங்கை இராவணனிடம் போர் செய்து, சீதையை

அழைத்து இராமேஸ்வரம் வருகிறார்கள். அங்கு கடற்கரையில் சிவனை வழிபடுவதற்காக ஒரு சிலை தேவைப்படுகிறது. சூரிய உதயத்திற்குள் அந்தச் சிலையை வைத்து வணங்கவேண்டும் என்பது இராமன் மற்றும் சீதையின் நோக்கமாக இருந்தது.

அதற்காக ஒரு சிலை வேண்டும் என்று அனுமானிடம் கூறினார்கள். அனுமான் சிலையைத் தேட செல்கிறார். சிலையைக் கொண்டு வருகிறார். சூரிய உதயம் ஆகிவிட்டது. இராமனும், சீதையும் மணலிலே ஒரு சிலையை செய்து வணங்கிக் கொண்டிருந்தார்கள். அனுமான் கோவத்துடன் “சாமி நான் சிலையைக் கொண்டு வந்துள்ளேன். அதற்குள் நீங்களே சிலையை வைத்து வணங்கு கிறீர்கள். இது நியாயமா” என இராமனிடன் கேட்கிறார்.

இராமன் அனுமானிடம் “சரி இந்தச் சிலையை அகற்றி விட்டு அந்தச் சிலையை வை” எனக் கூறுகிறார். சிலையை தன் வாலால் அகற்ற முயற்சிக் கிறார் அனுமான். வால் அறுந்து விடுகிறது. இராமனிடம் அனுமான் கோபமுடன் பேசுகிறார் “சுவாமி என் வால் அறுந்து விட்டது. எனது கூட்டத்திற்கே இது மிகவும் ஒரு கவலையான செய்தியாக உள்ளது. என்னை இப்படி கொடுமைப் படுத்துவது சரிதானா எனக் கேட்கிறார். அதற்கு இராமன் “கோபப்படாதே.... இந்த வாலை வைத்து மிக முக்கியத்துவம் வாய்ந்த விழாவாக செய்கிறேன்” என்று சொல்லி இராமனும், சீதையும் இணைந்து ஒரு நிகழ்ச்சியை நடத்துகிறார்கள். இராமன் பந்தசேவை எடுக்கிறார். சீதாதேவி நேர்த்திக் கடனுக்காக வீடு வீடாக, தானியங்களை பிச்சை எடுக்கிறாள். இராமனும், சீதையும் இப்படிச் செய்யும் போது அனுமான் மகிழ்ச்சியுடன் ஆடிக் கொண்டி ருக்கிறார்.

இதுதான் பந்த சேவை எடுப்பதன் வரலாறு. இதில் கவாளம் எடுப்பது என்பது ஊருக்குள் அனைவரும் அனுமானுக்குப் பழங்களைத் தருவார்கள். அதை அனுமான் கவாளம் எடுப்பார். திருமணம் ஆகி குழந்தை இல்லாத தம்பதியினர் நேத்திக் கடன் செய்வார்கள். எப்படி என்றால் கவாளம் எடுக்கும் பழங்களை வாயில் எடுத்து, பிள்ளை இல்லாதவர்களுக்கு பிள்ளைவரம் கொடுக்கும் நோக்கத்துடன் தருவார். அது ஒரு நம்பிக்கையாக இன்று வரை வணங்கி வருகிறார்கள்.

**காரமடைக்குப் பந்தசேவை எடுப்பது யார் வேண்டுமானாலும் எடுக்கலாமா? இதை எடுப்பதனால் என்ன நன்மை?**

பந்தசேவை ஆண்கள் அட்டுமே எடுக்க முடியும். அவர்களும் முத்திரை போட்டவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் மட்டுமே சேவை எடுக்க அனுமதி இருக்கிறது. பெண்கள் எடுப்பதற்கு அனுமதி இல்லை. பந்த சேவை எடுப்பதனால் நல்ல மழை பெய்யும், கெட்ட சக்திகள் எதுவும் ஊருக்குள் இருக்காது என்பது ஐதீகம்.

**முத்திரை போடுவது என்றால் என்ன?**

இந்தப் பந்தசேவை எடுப்பதற்கு முழுமையான தகுதி என்னவென்றால் கணவன் இராமவதார முத்திரையும், மனைவி சீதையின் முத்திரையும் பதித்துக்கொள்ளவேண்டும். அந்த முத்திரைப் பதிப்பதற்கென்று காரமடை அரங்கநாத சுவாமி கோவிலுக்குச் சென்று ஜீயர் அய்யர்களிடம் காணிக்கை செலுத்தி,

“நாங்கள் இன்று முதல் இராமக் கடவுளுக்கும், சீதைக்கும், அனுமானுக்கும் நேத்திக்கடன் செலுத்தும் விதமாக மிகவும் கட்டுப்பாடான உணவுமுறை, வாழ்வியல் முறை (சடங்கு, தீட்டு இழவுத்தீட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமல் தள்ளி வாழ்வது) கட்டுப்பாடுடன் வணங்குகிறோம் என்று உறுதி எடுத்து முத்திரையிடுகிறோம்”

என்று ஐயர்களிடம் கூறி வருடவருடம் நடைமுறைப்படுத்துவார்கள். பந்தசேவை எடுக்கும் குடும்பம் அதை தலைமுறை தலைமுறையாக வழி நடத்தவேண்டும். இல்லையெனில் குடும்பத்தில் நீங்கா கஷ்டங்கள் ஏற்படும் என்று ஐயர்கள் கூறு வார்கள்.

அதேபோல முத்திரையிட்ட பின்னர் தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்குப் பந்த சேவை எடுக்கும் பத்து தாசர்களுக்கு நாங்கள் அன்னதான சேவை நடத்தவேண்டும். இது அவரவர் வசதிக் கேற்றார் போல் செலவு செய்வார்கள். இது பெருமாளை வணங்கும் எந்தக் குலத்திற்காரர்கள் வேண்டுமானாலும் முத்திரையிட்டு வழிபடலாம்.

அதுபோல் இந்த முத்திரையிட்டதாசர் இறந்து விட்டால் முத்திரை இறக்குதல் என்ற சடங்கு உள்ளது.அதற்கு 10 தாசர்கள் வரவழைக்கப்பட்டு சடங்குகள் செய்து முத்திரையை இறக்கி மகன் மற்றும் மகன் வழி பேரன்களுக்குப் பந்தசேவை எடுக்கும் வழிபாட்டைத் தருவார்கள். இதற்கு 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை செலவு கூட ஆகும்.

**கோவிலுக்கு முத்திரை போடுவது யார்? யார் வேண்டுமானாலும் போடலாமா? இந்த முத்திரை எங்கே போடுவீர்கள்? யார் போடுவார்கள்? என்ன செலவாகும்?**

பெருமாளுக்கு முத்திரை போடுவது 30 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் போடலாம். ஆனால் மிகவும் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். இந்த முத்திரை காரமடையில் போய் போடுவோம். ஐயர் தான் போட்டு விடுவார். காரமடையில் போட்டால் சாமிக்கு பூ, பழம், தேங்காய், துளசிமாலை, ஐயருக்கு கொடுக்கும் பணம் எல்லாம் சேர்த்து 5000 ரூபாய் ஆகும். நம் வீடுகளில் முத்திரை போட்டால் ஐயரை வீட்டுக்கு அழைத்து வரவேண்டும். அன்னதானம் உள்பட 50,000 ரூபாய் வரை கூட செலவாகும்.

**உங்களுடைய குல தெய்வ கோவில் கட்டுவதற்கு யாரிடமாவது ஆலோசனை செய்வீர்களா?**

முதலில் எங்கள் குலத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பேசி முடிவு எடுப்போம். அதன்பிறகு

பல்லடம் தண்டபாணி கோவிலில் ஐயரிடம் போய்ப் பேசுவோம். அவர் நாள் குறித்துக் கொடுப்பார் அந்த நாளில் கோவில் கட்டுமானப் பணிகளைத் தொடங்குவோம். வேறு எந்த ஒரு விஷேசமாக இருந்தாலும் ஐயர் குறித்துக் கொடுத்த நாளில்தான் நடத்துவோம்.

**கோவில் கும்பாபிகேஷத்தை உங்கள் குலத்து ஆட்களே சேர்ந்து நடத்துவீர்களா?**

இல்லை. முதலில் ஐயர்தான் பூஜை செய்வார். கோவில் கலசத்தில் தண்ணிர் ஊற்றுவதும் அவர்கள்தான். நம்மிடம் கொடுக்க மாட்டார்கள். கும்பாபிஷேகம் முடிந்து 48 நாட்கள் நந்த தீபம் எரியும். அதன் பிறகுதான் எங்கள் குலத்தைச் சார்ந்தவர்களிடம் பொறுப்பைக் கொடுப்பார்கள். 48 நாட்கள் பூஜைக்கும் ஒரு நளைக்கு 500 ரூபாய் பணம் கொடுக்க வேண்டும். மற்றும் தேங்காய், பூ, பழம் போன்றவையும் வாங்கித்தர வேண்டும்.

**வேறு சமூகத்தைச் சார்ந்தவர்கள் உங்கள் குலதெய்வ கோவில்களுக்கு வருவார்களா?**

வருவார்கள். நாயக்கர் சமூகத்தைச் சார்ந்தவர்கள். வருவார்கள். சாமி கும்பிடுவார்கள். எங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்கள். நாங்களும் அவர்களை மதிப்பும் மரியாதையுடனும் நடத்துவோம்.

**நாயக்கர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் உங்கள் குலதெய்வக் கோவிலுக்கு வருவதுபோல் உங்களை அவர்கள் கோவிலுக்குள் அனுமதிப்பார்களா?**

முதலில் அனுமதி இருந்தது. இப்பொழுது இல்லை. வெளியில் நின்றுதான் சாமி கும்பிட வேண்டும். அனுமதி இருந்த காலங்களில் அபிஷேகம் செய்வது, பொங்கல் வைத்து படையல் போட்டு வழிபடுவது என இருந்தது. நாங்கள் கோவிலுக்குள் உள்ளே சென்று வழிபடுவது நாயக்கர் சமூகத்தில் உள்ள ஒரு சிலர் ஏற்றுக் கொள்கிறார்கள். ஒரு சிலர் எதிர்க்கிறார்கள். அதனால் நாங்கள் யாரும் உள்ளே செல்வதில்லை. வெளியே நின்றே தேங்காய் பழம் உடைத்து சாமி கும்பிடுவோம்.

**காடை குல தெய்வம் வீரமாத்தி அம்மன் உங்கள் குலத்தைப் பற்றி சொல்லுங்கள்**

நாங்கள் காடை குலம் எங்களுக்குப் எங்களது மாமன், மச்சான் குலங்கள் என்பது பட்டூகன் குலம், ஓதாலன் குலம் ஆகியவை ஆகும். அந்தக்குலத்தில் தான் பெண் கொடுத்து பெண் எடுப்போம். ஒரே குலத்தைச் சார்ந்தவர்களிடன் திருமண உறவு முறையை வைக்க மாட்டோம். எங்கள் குலத்தைச் சார்ந்தவர்கள் 7, 8 தலைமுறைகளாக வீரமாத்தி அம்மனை வணங்கி வருகிறோம். சுமார் 1500 குடும்பங்கள் இந்தக் குலத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறோம்.

**உங்களுடைய குல தெய்வம் பற்றி சொல்லுங்கள்**

எங்களுடைய குல தெய்வமான வீரமாத்தி அம்மன் பிறந்த இடம் பூளவாடி கிராமம். பட்டூகன் குலத்து ஆணுக்குக் காடை கூட்டத்தைச் சேர்ந்த பெண் வீரமாத்தியைத் திருமணம் செய்ய முடிவு செய்கிறார்கள். பெண் குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே திருமணம் செய்வது அந்தக் காலத்துப் பழக்க வழக்கமாக இருந்தது. வயதுக்கே வராத சிறு குழந்தையான வீரமாத்திக்குத் திருமணம் முடிவு செய்யப்பட்டது.

வீரமாத்தியைப் பெண்பார்த்துவிட்டுச் சென்ற ஆண், திருமணத்திற்கு சில நாட்களே இருந்த சமயத்தில் மாடு மேய்க்கப் போகிறார். போகும்போது காட்டில் பாம்பு கடித்து இறந்து விடுகிறார். அவரைக் கொண்டு போய் எரிக்கிறார்கள். வீரமாத்தி, தானாகவே வந்து எரிகின்ற தீயில் விழுந்து இறந்து போகிறாள். ஏன் இப்படி செய்கிறாள் என்றால், ஊரில் இருப்பவர்கள் இவளைப் பெண் பார்க்கச் சென்றுதான் அவனுக்கு இந்த நிலைமை என்று பேசுவார்கள். மேலும் இவள் ஒரு ராசி இல்லாதவள் என்றும் இவளை பெண் பார்க்கப் போனால் இப்படித்தான் உயிர்ப்பலி ஏற்படும் என்றும் ஊர் பேசும் என்ற பயத்தில் தீயில் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறாள். தீயில் விழுந்து எரிந்தவளை ஊரே தெய்வாக வணங்க ஆரம்பித்து விட்டது. எங்களது முன்னோர்களின் கனவில் வந்து, தான் தெய்வமாக மாறிவிட்டதாகவும் நானே காடை குலத்தைக் காக்கும் கடவுள் என்றும் அனைவரும் என்னை வணங்க வேண்டும் என்றும் கூறியதாகவும் அதிலிருந்து காடை குலத்தைச் சார்ந்தவர்கள் குல தெய்வமாக வணங்குகிறோம்.

**ஒரே குலத்தைச் சார்ந்தவர்கள் திருமணம் செய்து கொண்டால் தவறா? அப்படி திருமணம் செய்பவர்களை நீங்கள் என்ன செய்வீர்கள்?**

ஒரே குலத்தைச் சார்ந்தவர்கள் திருமணம் செய்யக்கூடாது. ஏனென்றால் அவர்கள் அண்ணன் தங்கை உறவு முறையாக இருப்பார்கள். அப்படியும் கட்டுப்பாட்டை மீறித் திருமணம் செய்து கொண்டவர்களை எங்கள் குலத்திலிருந்து விலக்கி எங்களுடைய ஜாதியிலும் நாடோடிக் கூட்டங் களான தொம்பன் குலம் மற்றம் கத்தி முழுங்கும் குலம் அதாவது வீதிகளில் தெருக்களில் கத்தியை முழுங்கி வித்தை காட்டம் கூட்டத்தோடு அனுப்பி விடுவோம்.

**உங்கள் குலக் கட்டுப்பாட்டை உங்களுக்கு யார் கற்றுக் கொடுத்தார்கள்?**

எங்களுடைய முன்னோர்கள் கற்றக் கொடுத்தார்கள். அவர்களுக்கு முப்பாட்டன்களும் முப்பாட்டன்களுக்கு முணிவர்களும் குலக்கட்டுப் பாட்டைக் கற்றுக் கொடுத்ததாக சொல்லப்படுகிறது.

**வீரமாத்தி அம்மன் உருவ வழிபாட்டைப் பற்றி கூறுங்கள்**

எங்கள் முன்னோர்கள் நடுகல் வைத்துத்தான் வணங்கி வந்தனர். எங்கள் தலைமுறையில்தான் நடுகல்லைச் சிலையாக வடிவமைத்து வணங்கு கிறோம். இந்தச் சிலையை இதே காடை குலத்தைச் சேர்ந்த கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்தவரின் கனவில் வந்து அம்மன் முக உருவத்தை செய்து வைக்க வேண்டும்.

- இதன் தொடர்ச்சி 24 ஆம் பக்கம்

# கொங்கு வேளாளர்களின் குல தெய்வங்கள்:
# காடேஸ்வரன் - வெள்ளையம்மாள்

**குலங்கள் மற்றும் அதன் அமைப்பு முறைகள்**

கொங்கு வேளாளக் கவுண்டர்கள் தங்கள் குலங்களை, பேச்சு வழக்கில் கூட்டங்கள் எனக் குறிப்பிடுகிறார்கள். மொத்தம் 125 க்கும் மேற்பட்ட கூட்டங்கள் நடைமுறையில் உள்ளன. ஒவ்வொரு குலங்களுக்கும் தனித்தனியாக குலதெய்வங்கள் உள்ளன. ஒரே குலங்களைச் சார்ந்தவர்கள் தங்களுக் குள் பங்காளிகள் என அழைத்துக் கொள்கிறார்கள். நகரமயமாகாத கிராமங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் குறைந்தது 25 முதல் 50 குடும்பங்கள் வரை வாழ்கிறார்கள். ஆனாலும் மாவட்டங்கள் மாறி வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்தாலும் இவர்களுக்குள் மணஉறவு வைத்துக் கொள்வ தில்லை. திருமணப் பதிவு நிலையங்களில் மிக முக்கியமாகக் கூட்டம் (குலம்) எதுவெனக் குறிப்பிட வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் குலத்தினர், அவர்கள் வீடுகளில் நடைபெறும் துக்க நிகழ்வில் நிச்சயமாகப் பங்கேற்க வேண்டும். சடங்குகளை அவர்களே முன் நின்று நடத்துவார்கள். துக்கச் சடங்குகள் நடத்துபவர்கள் குறைந்தபட்சம் 16 நாட்களுக்கு திருமணம், கோவில் நிகழ்வுகள் ஆகியவற்றில் பங்கேற்க மாட்டார்கள்.

**முழுக் காதன் குல வரலாறு**

காங்கேயம் அருகே உள்ள காடையூரில் உள்ள காடேஸ்வரர் கோவிலில் உள்ளது. அக்கோவிலின் பிரகாரத்தில் முழுக்காதன் குல வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. அக்கதையைப் பாருங்கள்.

தமிழ்நாட்டில் கொங்குநாட்டுப் பகுதியில் உள்ள காங்கயம் என்ற ஊருக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு பெரும் விவசாயிக்கு நான்கு மகன்களும் ஒரு பெண்ணும் பிறந்தார்கள். பெண் குழந்தை பிறவியிலேயே வெளுத்திருந்தாள். அவளை வெள்ளையம்மாள் என்று பெயரிட்டு அழைத் தார்கள். பெண் வளர்ந்து கல்யாணம் செய்யும் வயதை நெருங்கினாள். விவசாயியும் அவர் மனைவியும் பெண்ணின் திருமணத்தை நினைத்துக் கவலைப்பட்டார்கள்.

அவர் பண்ணையிலே மாடு மேய்க்க, தூர தேசத்திலிருந்து ஒரு வாலிபன் வந்து வேலைக்குச் சேந்தான். அவனும் அவர்கள் சாதியைச் சேந்தவன் தான். ஆனால் ஏழை. வெள்ளையம்மாளின் அய்யன் (தந்தை) அந்த மாடு மேய்ப்பவனுக்கே தம் பெண்ணைத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தார். நினைத்த உடனேயே அவர் பையனுடைய ஊருக்குச் சென்று அவன் பெற்றோரிடம் பேசி சம்மதிக்க வைத்தார். திருமணமும் நடந்தது. வெள்ளையம்மாள் மூன்று குழந்தைகளுக்குத் தாயானாள். பின்னர் வெள்ளயம்மாளின் அண்ணன்மார்களுக்கும் திருமணம் நடந்தது. அனைவரும் ஒன்றாக கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தனர்.

வெள்ளையம்மாளின் தந்தையின் இறுதிக் காலம் நெருங்கியது. அப்போது அவர் தம் பிள்ளைகளைக் அழைத்து வெள்ளையம்மாளுக்கு ஒரு காணி நிலம் கொடுக்கச் சொல்லி விட்டு இறந்தார். ஆனால் வெள்ளையம்மாளின் அண்ணன்கள் அவளது கணவனை வஞ்சகமாகக் கொன்றுவிட்டு அவளை வீட்டை விட்டுத் துரத்தி விட்டனர்.

கர்ப்பிணியாக இருந்த வெள்ளையம்மாள் தன் மூன்று குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு எங்கு போவது என்று தெரியாமல் மனம்போன போக்கில் சென்றாள். அப்போது ஒரு சர்தார் (அந்நாளைய முஸ்லிம் அரசாங்க உயர் அதிகாரி) குதிரையில் அமர்ந்து வருவதைக் கண்டு அஞ்சி புதரில் ஒதுங்கினாள்.

சர்தார் அவளைப் பார்த்தவுடன் நின்று விசாரித்து அவள் அனாதை நிலையைக் கண்டு இரக்கம் கொண்டார். “நான் வரி வசூலுக்காக அவசரமாகச் சென்று கொண்டிருக்கிறேன். திரும்பி வந்ததும் உன்னுடைய கஷ்டத்தைத் தீர்த்து வைக்கிறேன். அதுவரை பக்கத்தில இருக்கும் கோட்டையில் பத்திரமாக இரு” என்று ஆறுதல் சொல்லி, அவளைக் கோட்டையில் தங்க ஏற்பாடு செய்து வரி வசூலிக்கச் சென்றார்.

பல மாதங்கள் கழிந்தன. வெள்ளையம் மாளுக்குக் குழந்தை பிறந்தது. திரும்பிய சர்தார் வெள்ளையம்மாளை அவளது ஊருக்கு அழைத்துச் சென்றார். வெள்ளையம்மாளின் அண்ணிகள் அவளை அவதூறாகப் பேசினர். அவள் ஒரு விபச்சாரி என்று ஏசினர். வெள்ளையம்மாள் சாதி கெட்டு விட்டதால் அவளுக்கு நிலம் தர அவளது அண்ணன்மார்கள் மறுத்தனர்.

இதைக்கேட்ட வெள்ளையம்மாள் தான் கடவுள் சாட்சியா எந்தத் தவறும் செய்ய வில்லை. இதை எங்கே வேண்டுமென்றாலும் சத்தியம் செய்வேன் என்று சொன்னாள். அவளது அண்ணன் கள் வெள்ளையம்மாள் மூன்று சத்தியங்கள் செய்தால் நாங்கள் எங்கள் நிலம் எல்லாவற்றையும் வெள்ளையம்மாளுக்கே கொடுத்துவிடுகிறோம். அப்படிச் செய்யாவிட்டால் இவள் தீக்குளிக்க வேண்டும் என்று கூறினர். அந்த சத்தியங்கள் என்ன வென்றால்,

காளமாட்டை ஏரிலோ அல்லது வண்டி யிலோ பூட்டுவதற்கு வெடத்தலா மரத்தில் நுகத்தடி செய்து வைத்திருப்பர். இது நன்றாக முற்றிய மரமாகவும், காய்ந்த மரமாகவும் இருக்கும். அந்த நுகத்தடியை மண்ணில் நட்டுத் தண்ணீர் ஊற்றி னால் அது துளிர் விடவேண்டும்.

அந்த ஊர்க்கோவிலில் நிறுத்தியிருக்கும் மண் குதிரைக்குத் தண்ணீர் தெளித்தால் அது தலையைக் குலுக்கி கணைக்க வேண்டும்.

இதற்குத் தேவையான தண்ணீரைச் சுடாத பச்சை மண் குடத்தில் எடுத்து வரவேண்டும். அப்போது அந்த மண்குடம் கரையாமல் இருக்க வேண்டும்.

இதைக்கேட்ட சர்தார், வெள்ளையம்மா ளிடம் இவர்கள் உன்னைக் கொல்லப் பார்க்கிறார் கள். நீ இதற்கு ஒப்புக்கொள்ளாதே என்று கூறினார். ஆனால் வெள்ளையம்மாளோ, நான் பதிவிரதை, நான் இந்தச் சத்தியங்களைச் செய்வேன் என்று கூறினாள். அவ்வாறே செய்தும் காட்டினாள்.

வெள்ளையம்மாளின் அண்ணன்மார்கள் நால்வரும் சர்தாரிடம் வந்து எங்கள் சொத்து அனைத்தையும் வெள்ளையம்மாளுக்கே கொடுத்து விடுகிறோம் என்று சொல்லி ஊரை விட்டுச் சென்றனர். சர்தாரும் வெள்ளையம்மாளுக்கு வாழ்த்து சொல்லிட்டு தன் ஊருக்குப் போனார். வெள்ளையம்மாளின் கணவரின் குலமே முழுக் காதன் குலம் அவரின் அப்பா சேடர் குலம்

இப்போதும் அக்கோவிலில் உள்ள வெடத்தலா மரம், வெள்ளையம்மாள் நட்ட மரம் தான் என நம்பப்படுகிறது. சர்தார் வெள்ளையம் மாவை காப்பாற்றியதால் முழுக்காதன் குலத்தார் இசுலாமியர்களை மாமா என அழைப்பார்கள். இப்போது அப்பழக்கம் வழக்கொழிந்து விட்டது...

பெரும்பாலான கவுண்டர் சமூகத்தினரின் குலதெய்வங்களில் முதன்மை கோவில்கள் பெரும் பாலும் ஈசுவரன் கோவில்களாகவும் கிளைக் கோவில்கள் அம்மன் கோவில்களாகவும் உள்ளன. இவற்றில் கும்பாபிஷேகம் என்றால் அவை பார்ப்பனர்களை வைத்தே நடத்தப்படுகின்றன.

**மாங்கல்ய வரி**

இதில் முக்கியமாக ஆணின் குலம் இறுதிவரை மாறாது. ஆனால் பெண் திருமணத்திற்குப் பிறகு கணவனின் குலமாகவே கருதப்படுவார். குலதெய்வ வரி வசூலிப்பதுகூட வீட்டில் உள்ள திருமணமான பெண்களின் எண்ணிக்கை அடிப்படையிலேயே உள்ளது. இதை மாங்கல்ய வரி என்பார்கள் ஒரு வீட்டில் மாமியார், மருமகள் இருவரும் கணவனை இழக்காமல் இருந்தால் இரண்டு வரி ஒரு பெண்ணின் கணவர் இறந்திருந்தால் வரி இல்லை.

**குலதெய்வக் கோவில்**

பொதுவாகவே கொங்கு வேளாளக் கவுண்டர் சமூகத்தைச் சார்ந்தவர்களின் குலதெய்வக் கோவில் கள் பெருந்துறை, காங்கேயம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளிலேயே அதிகம் காணப்படு கிறது. ஆனால் கோவை மாநகரம் மற்றும் அதைச் சுற்றி வாழ்பவர்கள் தாங்கள் அதிகம் வாழும் பகுதிகளில் கிளைக்கோவில்களை உருவாக்கி அதையே தங்கள் குல தெய்வக் கோவில்களாக ஏற்றுக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு குலத்தினரும் தங்கள் குல தெய்வக் கோவில்கள் 2 அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில் வைத்து இருக்கிறார்கள். சில இடங்களில் கடவுள்களே கூட மாறி மாறி இருக்கிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் கோவை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஏற்பட்ட நில மதிப்பு உயர்வு காரணமாக உயர்ந்த பொருளாதாரச் சூழலால் பல்வேறு கோவில்கள் புதுப்பிக்கப் பட்டன. கிளைக்கோவில்கள் புதுப்பித்தலில் அந்தந்தப் பகுதிகளில் வாழும் அச்சமுதாயத்தைச் சேர்ந்த அரசியல்கட்சிப் பொறுப்பாளர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் முன்னிலை வகித்தனர்.

மாற்றியமைக்கப்பட்ட கோவில்களில் முழுமையாக வாஸ்து பார்க்கப்பட்டது. குட முழுக்கு சில இடங்களில் தமிழ் முறைப்படியும், சில இடங்களில் பார்ப்பனர்களாலும் நடத்தப்பட்டது. மிக முக்கியமாக புதுப்பிக்கப்பட்ட குலதெய்வக் கோவில்களில் முழுமுதற் கடவுள் என்ற பெயரில் விநாயகர் சிலை வைக்கப்பட்டுள்ளது. குலதெய்வக் கோவில் கட்ட குறிப்பிட்ட குலத்தாரிடம் மட்டும் வசூலிப்பது என்பது போய், குறிப்பிட்ட கோவில்கள் அமைந்துள்ள ஊரில் நிறுவனம் நடத்தும் வெளியூர் ஆட்களிடமும் வசூல் செய்யப் படுகிறது.

**சடங்குகள்**

கொங்கு வேளாளர் குடும்பங்களின் திருமணங்களில் முதல் நாள் முகூர்த்தக்கால் நடுவது என்ற சடங்கு அதே சமூகத்தைச் சேர்ந்த அருமைக் காரர் (சீர்க்காரர் எனவும் சொல்கிறார்கள்) என்பவர்களால் நடத்தப்படுகிறது இதில் சலவை தொழிலாளர் விளக்குப் பிடிக்கவும், அருந்ததியர் செருப்பு மாட்டவும் பயன்படுத்தப்படுகிறார்கள். முகூர்த்தம் எனும் தாலி கட்டும் நிகழ்வில் பார்ப்பனர் கள் வருகிறார்கள். இறப்பு நிகழ்வுகளில் பெரும் பாலான சடங்குகள் பங்காளிகள் எனப்படும் ஒரே குலத்தினரால் செய்யப்படுகிறது.

## பறையர்களின் குல தெய்வங்கள்:

# சாம்பான் - வீரமாத்தி

**தங்களின் குலதெய்வமான சாம்பான் பற்றிய கதையைக் கூறுங்கள்**

ஒட்டுமொத்தப் பறையர்களின் குலதெய்வம் சாம்பான். எங்களுடைய குலத்தின் பெயர் சாம்பான் குலம். அதனால் சாமியின் பெயரும் சாம்பான். நான்கு, ஐந்து தலைமுறைக்கு முன்பு இருந்து இக்கோவில் இங்கு உள்ளது. சாம்பான் எங்கள் முதாதையர் என்று மட்டும்தான் தெரியும். வரலாறு தெரியாது. (ஓலைச்சுவடிகள் இருந்தது பராமரிப் பில்லாமல் செல்லரித்து விட்டன. வீரப்பூரில் இருந்து திருவிழாவிற்கு வரும் பெண்கள் சாம்பான் பற்றிக் கதைப் பாடலைப் பாடுவார்கள்.) அவர் நினைவாக, கற்களை அடுக்கிக் கும்பிட்டு வந்தோம். சிலை மொழுக்கென்று உருவமில்லாமல் இருக்கும். நாங்கள்தான் கோயில் கட்டியிருக்கிறோம்.

**சாம்பான் என்ற உங்கள் மூதாதையரை எந்த அடிப்படையில் லிங்கமாக மாற்றினீர்கள்?**

கோவில் கட்ட முடிவெடுத்தவுடன் சிவன் கோவில் ஐயரிடம் சென்று "ஆடை அலங்காரம் பண்ணுவதற்கு வசதியில்லாமல் சிலை மொழுக் கென்று (கல்) இருக்கிறது " என்று சொன்னோம். அவர் வந்து பார்த்துவிட்டு, இது சாம்பவ மூர்த்தியோட சேர்ந்த சிலை, அதனால் ஏற்கனவே இருக்கும் சிலையைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு, அதன் மேலேயே சிவலிங்கம் செய்து வைத்துவிடலாம் என்று கூறினார். சரி, இவர் இப்படிச் சொல்கிறார். நாம் வேறு ஐயரைப் பார்க் கலாம் என்று மற்றொரு ஐயரிடம் விசாரித்தோம்.

அவர் "முன்பு சிலை செய்கிற அளவுக்கு வசதி வாய்ப்பு இல்லாத்தால் இப்படி வைத்திருக்கிறார்கள். இப்ப நாகரீகமான காலத்தில் சிற்பங்களைச் செதுக்கி அழகு அழகா வைக்கிறார்கள். அதனால் சிலையை லிங்கமாக வடித்து வைத்தால் கோவில் பிரகாசமாக இருக்கும். ஜாதி நல்லா விருத்தியாகும்" என்று சொன்னார். சாம்பானும், சாம்பசிவ மூர்த்தி யும் வேறு வேறு இல்லை, இரண்டும் ஒன்றுதான் என்று சொன்னார். அதற்குப் பிறகு தான் சிவலிங்கம் செய்து நிலைநாட்டி இருக்கிறோம்.

**கும்பாபிஷேகம் நடந்துள்ளதா? நடத்தியவர்கள் பார்ப்பனர்களா? இல்லை உங்கள் ஜாதியினரா?**

கும்பாபிஷேகம் நடந்து பத்து மாதம்தான் ஆகிறது. ஐயரை அழைத்து யாகசாலை கட்டி, ஓமகுண்டம் வளர்த்து ஓர் இரவு முழுவதும் தங்கி, பரிகாரம் பண்ணிவிட்டுப் போனார்கள். 48 நாள் விளக்குப் போட்டோம். ஆறு, ஏழு ஐயர்கள் வந்திருந்தனர். அரிசி, பணம், தேங்காய் பழம், துணி அனைத்தையும் தட்டில் வைத்துக் கொடுத்தோம். எங்கள் இனத்தைச் சார்ந்த வெளியூரில் வேலை செய்பவர்கள் ஐயருக்கு பட்டு வேட்டி, துண்டு காணிக்கை கொடுத்து வழியனுப்பினார்கள். கும்பாபிஷேகம் எங்கள் இனத்தவர் நடத்தவில்லை.

**எத்தனை வருடத்திற்கு ஒரு முறை கும்பாபிஷேகம் நடத்துவீர்கள்?**

கும்பாபிஷேகம் முடிந்து ஒரு வருடம் ஆகப் போகிறது. மூன்று வருடங்கள் தொடர்ந்து கும்பாபிஷேகம் பண்ண வேண்டும் என்று ஐயர் சொல்லியிருக்கிறார். அதற்குப் பிறகுதான் திருவிழா நடத்தவேண்டும்னு சொல்லியிருக்காங்க.

**சாம்பானைக் கும்பிடும் மக்கள் தொகை எவ்வளவு? வேறு எந்த ஜாதியைச் சார்ந்தவர்கள் கும்பிடுவார்கள்? அல்லது பறையர்களுக்கு மட்டுமான கடவுளா?**

சாம்பான் கும்பிடுபவர்கள் சுமார் ஆயிரம் தலைக்கட்டு குடும்பங்கள் கணியூரில் இருக்கி றார்கள். எங்கள் பங்காளிகள் கோயம்புத்தூர், வேட்டைக்காரன்புதூர், பழநி, மானூர், தாராபுரம் கொளிஞ்சவாடி, சுண்டப்பாளையம், மதுரை, சென்னை, திருச்சி என பல ஊர்களில் வசிக்கிறார் கள். பறையர்களிலேயே மற்றவர்கள் எங்களையும் சேர்த்தே குறிப்பார்கள். ஆதியில் இருந்தே நாங்கள் தான் சாம்பான் குலம். ஆனால் எங்களைப் பள்ளு, பறையரோடு சேர்த்துக் கொள்கிறார்கள். எஸ்.சி என்று சொல்லி எல்லோரையும் ஒன்றாக் குறிப்பிடு கிறார்கள். ஆனால் நாங்கள்

அவர்களைவிட மேம் பட்டவர்கள். எங்களுடைய முறைபாடு வேறு, அவர் களுடைய முறைபாடு வேறு. ஒட்டுமொத்தப் பறையர்களின் குல தெய்வம் சாம்பான்தான்.

**பறையர் ஜாதியில் எந்த உட்பிரிவு சாம்பானைக் கும்பிடுவார்கள்? மற்ற உட்பிரிவுக்கும், மற்ற ஜாதியினருக்கும் இக்கோவிலில் எந்த அளவுக்கு உரிமை உள்ளது?**

கிழக்கத்து குலம், தாசர் குலம், விருமன் குலம், கருத்தான்குலம், அழகநான் குலம் என இருபதுக்கும் மேற்பட்ட குலங்கள் இருக்கின்றன. அனைவருக்குமே சாம்பான் பொது தெய்வம். மற்ற ஜாதியினர் இக்கோவிலுக்கு வந்து சாமி கும்பிட்டு விட்டுச் செல்லலாம். எந்த உரிமையும் இல்லை.

**நீங்கள் எந்த உட்பிரிவுடன் மண உறவுகளை வைக்கிறீர்கள்? அவர்கள் எந்த சாமியைக் கும்பிடுவார்கள்? அதனுடைய பெயர் கதை என்ன?**

தாசர் குலத்தைச் சார்ந்தவர்கள் கிழக்கத்த குலம் மற்றும் கருத்தான் குலத்துடன் மண உறவு வைத்துக் கொள்வோம். அவர்களுடன் பொண்ணு கொடுத்து, பொண்ணு எடுத்துக்குவோம். இவ்வாறே விருமன் குலத்துக்காரர்கள், சின்னக்காவை கும்பிடும் இராமர் குலத்துக்காரர்களோடு மணஉறவு வைத்துக் கொள்வோம்.

ஆதியில் கணியூரில் வீரமாத்தியைக் கும்பிடும் விருமன் கூட்டத்தில் திருமண வயதில் பெண்கள் நிறைய இருந்ததாகவும், ஆண்கள் குறைவாக இருந்த தாகவும் -அதனால் கீரனூர் பெரியஆண்டவர் கோவில் சப்பாணியைக் குலதெய்வமாகக் கொண்ட அழகநான் குலத்துக்காரர்களுக்குப் பெண்ணும் கொடுத்து, மண்ணும் கொடுத்து கணியூரில் இருக்க வைத்ததன் நினைவாக விருமன் குலத்து வீரமாத்தி கோவிலில் அழகநான் கூட்டத்துடைய சப்பாணி சிலையை வைத்திருப்பதாகவும் முன்னோர்கள் சொன்னார்கள். அதனால் இந்த இரண்டு குலமும் ஒருத்தர் இல்லாமல் ஒருத்தர் சாமி செய்ய முடியாது.

80,90 வருடங்களுக்கு முன்பு ஸ்ரீவில்லி புத்தூரில் இருந்து மண் எடுத்துக் கொண்டு வந்து சிலை செய்திருக்கிறார்கள். வீரமாத்தியின் பூர்வீகம் ஸ்ரீவில்லிபுத்தூர் என்று எங்கள் தாத்தா கூறியிருக் கிறார். தற்போது கோவில் மாற்றம் அடைந்து விட்டது. வீரமாத்தியோடு வீரப்பனையும் வைத்துக் கும்பிடுகிறார்கள். அதனால் நாங்கள் அங்கிருந்து மண் எடுத்துவந்து வீரப்பன், வீரமாத்தி என்று இரண்டு சிலைகளை வைத்து கும்பிடுகிறோம்.

**உங்களது தினசரி வாழ்க்கையில் குலதெய்வத்திற்கும், பூசாரிக்கும் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள்?**

பூசாரிக்கு அனைத்து உரிமைகளும் இருக்கு. கோவில் நிர்வாகத்தில் இருந்து வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வு வரை அனைத்திலும் குலதெய்வத் துக்கும், பூசாரிக்கும் பங்கு இருக்கிறது. குழந்தை களுக்கு முதல் முடி இறக்குவது, காது குத்துவது, கல்யாணம் போன்றவற்றைக் குலதெய்வக் கோவிலில் பண்ணுவோம். தற்போது பெண் பார்க்கும் நிகழ்ச்சியைக் கூட குலதெய்வக் கோவிலில் வைக்கிறார்கள்.

**பூசாரி ஒரே குடும்பத்தினர்தான் பரம்பரையாக பரம்பரையாக வந்துள்ளார்களா? வேறு பிரிவிலிருந்து நியமிப்பீர்களா?**

ஒரே குடும்பத்தைச் சார்ந்த பங்காளிகளுக்குள் தான் பரம்பரை, பரம்பரையாகப் பூசாரியை நியமிப்போம். இது முன்னோர் காலத்திலிருந்து நடைமுறையில் இருக்கிறது. வேறு பிரிவில் நியமிக்க மாட்டோம்.

**குல தெய்வ கோவில் உள்ள ஊர் அல்லது இடம் எது? கோவிலாக இருந்தால் கட்டிட அமைப்பு எப்படி உள்ளது? பஸ் வசதி உண்டா?**

பறையர் குல தெய்வமான சாம்பான் கோவில் ஊருக்குள் சுற்றுச்சுவர் கட்டி, கோபுரத்துடன் காட்சியளிக்கிறது. இக்கோவில் தரை மொசைக் போடப்பட்டுள்ளது. கோபுரத்தில் பார்வதி, துர்க்கை, முருகன், தட்சிணாமூர்த்தி லிங்கேஸ்வரன் சிலைகளும் கோவிலுக்கு உள்ளே சிவலிங்கமும் வைத்து இருக்கிறார்கள். இக்கோவிலைக் கட்டு வதற்கு அரசாங்கப் பதவியில் உள்ள எங்கள் ஆட்கள் ஒவ்வொருவரும் நன்கொடையாக பத்தாயிரம், இருபதாயிரம் என்கிற ரீதியில் கொடுத்து உதவி னார்கள்.

இராமர் குல தெய்வமான சின்னக்கா நடுத் தெருவிலும், மற்றொரு குலதெய்வமான வீரமாத்தி ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஆற்றோரத்தில் இருக் கிறது. சுற்றுச்சுவர் இருக்கிறது. காண்கிரிட் போட்டி ருக்கிறோம், கோபுரம் கிடையாது. சிலை வைத்திருக் கிறோம். கடத்தூரில் இருந்து பஸ் இருக்கிறது. வாய்க்கால் பஸ் ஸ்டாப். அதற்கும் அருகில் கோவில் உள்ளது. இராமர் குலத்து தெய்வமான சின்னக்கா சிறிய அளவில் தான் இருக்கிறது. அந்தக் காலத்தில் கட்டியது. மிகவும் பழுதடைந்து விட்டது. அக் கோவிலைக் கட்ட தற்போது ஒரு குடும்பத்திற்கு ஐயாயிரம் (5000) வீதம் வசூலித்துக் கொண்டிருக் கிறோம். இராமர் குலத்துக்காரர்களிடம் மட்டுமே பணம் வசூலிக்கப்படும்.

**கோவிலுக்கு என்ன என்ன காணிக்கைகள் செலுத்துவார்கள்? திருவிழாவிற்கு எவ்வளவு செலவாகும்? அந்த செலவை எப்படி சமாளிப்பீர்கள்?**

காணிக்கை பெரிசா ஒண்ணும் கிடையாதுங்க. பூசாரியின் தட்டிலும், உண்டியலிலும் காசு, பணம் போடுவார்கள். அவ்வளவு தான். திருவிழா நடத்து வதற்கு ஒரு இலட்ச ரூபாய்க்கு மேல் ஆகும். மொத்தச் செலவையும் கணக்கிட்டு மாங்கல்ய வரி (தலக்கட்டு வரி) என்ற பெயரில் ஒரு குடும்பத்திற்கு ஐந்நூறு, ஆயிரம் என்று போடுவோம். சென்ற வருடம் நாங்கள் விதித்த வரி ஒரு குடும்பத்திற்கு 1200 ரூபாய். இது இல்லாமல் ஊருக்குள் இருக்கும் மற்ற ஜாதியினர் கொடுப்பதையும் ஏற்றுக் கொள்வோம்.

**இம்மக்கள் எவ்வளவு வரைக்கும் படிக்கிறார்கள்? வேலைவாய்ப்பு எப்படி உள்ளது? முதலில் இருந்த தற்கும் தற்போதைக்கும் என்னவிதமான வேறுபாடு?**

நாங்கள் பெரும்பாலும் விவசாயக் கூலிகள்.

ஒன்றிரண்டு பேர் விவசாயம் செய்கிறார்கள். ஆனால் எங்கள் பிள்ளைகளைப் படிக்க வைத்திருக்கிறோம். அன்றைக்கு ஒரு சிலேட்டு பலகை கூட வாங்க முடியாத சூழ்நிலை இருந்ததால் நாங்கள் படிப்பை விட்டோம். அன்று அக்கம் பக்கம் கடன் கேட்டால் கூட கொடுப்பதற்குக் காசு இருக்காது. காசு பழக்கம், நாணயம் மிக குறைவு. (ஓட்டைக்காசு, குதிரைக்காசு, ரவுண்ட்காசு, ஒரணா, ரெண்டனா தான் இருக்கும்) அனால் இன்று சின்னப் பையனிடம் கூட 100 ரூபாய் நோட்டு புழங்குகிறது. கடன் வாங்கியாவது படிக்க வைக்கின்றோம். அன்று கல்வியறிவு இல்லாததால் பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்தோம். இன்று கல்வி கற்றதால் பொருளாதாரம் மேம்பட்டிருக்கிறது.

**சமூக அந்தஸ்து எந்த அளவில் உள்ளது?**

முன்னோர் காலத்தைவிட எவ்வளவோ பரவாயில்லை. முன்னோர் காலத்தில் வீட்டுக்குள் விட மாட்டார்கள். பொதுக் கோவிலான மாரியம்மன் கோவிலுக்கு உள்ளே விட மாட்டார்கள். முளைப்பாரி, மாவிலக்கு, பூவோடு எடுத்துச் சென்றால் கோவிலுக்கு வெளியே நிறுத்தி அனுப்பி விடுவார்கள்.

1972 ம் ஆண்டு கோவிலுக்கு உள்ளே அனுமதிக்க வேண்டும் என்று வழக்குப் போட்டு வாதாடி ஜெயித்து, கோவிலுக்குள் சென்றோம். தற்போது கோவிலுக்கு உள்ளே சென்று தீர்த்தம் ஊற்றுகிறோம். கர்ப்பக்கிரகத்தைத் தவிர்த்து கோவிலின் அனைத்துப் பகுதிகளுக்கும் போகிறோம். எந்த விதமான பாகுபாடும் கிடையாது. நாங்கள் உள்ளே நுழைவதை ஆட்சேபித்த பெரியவர்கள் இறந்து விட்டார்கள். தற்போது உள்ளவர்கள் கொஞ்சம் மாறியிருப்பதால் கோயிலுக்குள் செல்ல எந்த ஆட்சேபணையும் இல்லை. (இவர்கள் குறிப்பிடும் கோவில் சித்திரை மாதம் சாட்டப்படும் ஊர்ப் பொதுக்கோவிலான மாரியம்மன் கோவில்)

**கோவில்களில் பெண்களின் உரிமைகள், பங்கு என்ன? பூசாரிகளாக இருக்கிறார்களா?**

கோவிலில் பெண்களுக்கு ஒரு உரிமையும் இல்லை. கோவில் நிர்வாகத்தில் அனைத்து முடிவுகளையும் ஆண்கள்தான் எடுப்போம். பெண்கள் கருத்தைக் கேட்க மாட்டோம். ஏதோ 100க்கு 2 பேர் வந்து வேடிக்கை பார்ப்பார்கள். அவ்வளவுதான். நாங்கள் தடங் காட்டுவதை பெண்கள் செய்வார்கள். முளைப்பாரி எடுக்கிறது, மாவிளக்கு எடுக்கிறது, பால்குடம் கொண்டு வருவது போன்ற சடங்குகளைச் செய்வார்கள். பெண்களைப் பூசாரிகளாக நியமிக்க மாட்டோம். பெண்தெய்வம் இருக்கும் கோவிலுக்கும் ஆண்தான் பூசாரி. பெண்கள் சாமி கும்பிட்டுவிட்டுப் போகலாம்.

**கல்யாணத்திற்குப் பின் தந்தையின் குல தெய்வத்தை வணங்குவார்களா? கணவனின் குலதெய்வத்தை வணங்குவார்களா? தலக்கட்டுவரி எந்தக் குடும்பம் சார்பில் வசூலிக்கப்படும்?**

கல்யாணத்திற்குப் பின் கணவரின் குல தெய்வத்தையே வணங்குவார்கள். கணவர் குல தெய்வம் சார்பில் தான் கட்டாயமாக தலக்கட்டுவரி வசூலிக்கப்படும். பிறந்தவீட்டுக் குலதெய்வத்திற்கு அக்குலத்தில் பிறந்த பெண்கள் ஒன்ற சேர்ந்து (பெண் பிறந்த மகள்கள்) பணம் சேர்த்து ஒரு சீட்டு மாதிரி போட்டு கோவில் செலவுகளுக்குப் பணம் கொடுப்பார்கள். அதோடு இல்லாமல் தந்தையின் குலதெய்வத்திற்கு ஆண்களுக்கு 1000 ரூபாய் தலக் கட்டு வரி போட்டால் திருமணமாகிப்போன பெண்ணுக்கு 500 ரூபாய் போடுவோம். அவர்களும் விருப்பப்பட்டுக் கொடுப்பார்கள்.

**குலதெய்வக் கோவில்களில் பிற்படுத்தப்பட்ட அல்லது பிற தாழ்த்தப்பட்ட மக்களிடம் வரி வாங்கப்படுகிறதா?**

சாம்பான் சாமிக்கு ஒட்டுமொத்த பறையர்களிடம் வரி வசூல் செய்வோம். பிற்படுத்தப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட மக்களிடம் வரி வசூலிக்க மாட்டோம். நன்கொடையாகக் கொடுத்தால் வாங்கிக் கொள்வோம். சின்னக்கா மற்றும் வீரமாத்தி சாமிக்கு அந்தந்த குலத்துக்காரர்களிடம் மட்டும் வரி வசூல் செய்வோம். மற்றவர்களிடம் வாங்க மாட்டோம்.

**குலதெய்வக் கோவில் விழா தொடங்குவது முதல் முடியும் வரை என்னென்ன செய்வீர்கள்?**

வருடம் ஒரு தரம் ஆடம்பரமாக, விமரிசையாகக் கொண்டாடுவோம். பறையர் குலத்திற்கு அடிப்படையாக இருக்கும் இராமையாக்கவுண்டன் புதூரில் இருக்கும் அரண்மனைக்குச் சென்று சாமி கும்பிடுவோம். அவர்கள் தீர்த்தம், திருநீறு, பச்சரிசி, கிடாய் அனைத்தும் கொடுப்பார்கள். அதை வாங்கிக்கொண்டு வந்து தீர்த்தம், திருநிறு போட்டுத் தான் சாம்பான் கோவிலே சாமி சாட்டுவோம்.

திருவிழா நடப்பதற்கு ஒரு வாரம் முன்பே விளம்பரம் கொடுத்துவிடுவோம். எட்டு நாள் சாட்டு, அனைவரும் சுத்தபத்தமாக இருந்து விழாவை நடத்திக்கொடுக்கணும்னு கேட்டுக்குவோம். செவ்வாய்க்கிழமை சாட்டு. அனைவரும் வந்து கொடிநட்டு, தண்ணீர் ஊற்றி, சாமி கும்பிடுவோம். முளைப்பாரி மற்றும் மாவிளக்கு எடுத்துக்கொண்டு வந்து ஆடல், பாடல் நிகழ்ச்சிகளுடன் விழாவை நிறைவு செய்வோம். சப்பரத்தில் சாமியை வைத்து எங்கள் குடியிருப்புப் பகுதிகளில் வலம் வந்து நிறுத்தி விடுவோம்.

சின்னக்கா, வீரமாத்தி கோவில்களில் சாட்டெல்லாம் கிடையாது. இக்கோவில்களின் பேழை (பெட்டி) சிவசம்பூகன் கோவிலில் இருக்கிறது. வருடத்திற்கு ஒரு தரம் ஆடி பதினெட்டு அன்று பேழைகளைக் கொண்டு போய் அதிலிருக்கும் கத்தி, அருவாள் போன்றவற்றை ஆற்றில் கழுவி எடுத்துக்கிட்டு வந்து, இக்கோவிலில் வைப்போம். பறையர் குலத்தில் மட்டும் வீட்டுக்கு 100 ரூபாய் வீதம் வசூலித்து, அன்று அனைவரும் சாப்பாடு செய்து போடுவோம். கிடாய் வெட்டுவார்கள். அன்று ஒரு நாள் மட்டும் விஷேசம் நடைபெறும்.

# வன்னியர்களின் குலதெய்வங்கள்: தில்லாளம்மன் - கருப்புச்சாமி

**உங்களுடைய குல தெய்வம் என்ன?**

எங்களுடைய குலதெய்வம் தில்லாளம்மன் அல்லது தில்லையம்மன். தில்லையம்மன் என்பது தில்லையில் இருக்கக்கூடிய அம்மன். சிவபெருமானுடைய மனைவி என்பதனால் தில்லைஅம்மன் என்று பெயர் வந்தது. தில்லாளம்மன் என்பது அதனுடைய மறுபெயர்தான். தில்லையம்மன், தில்லாளம்மன், பார்வதி, பகவதியம்மன், காமாட்சி அம்மன் எல்லாம் பார்வதியைக் குறிக்கக்கூடிய பெயர்கள்.

கும்பம்பட்டியில் இருக்கக்கூடிய தில்லை அம்மன் என்பது பார்வதியைக் குறிக்கக் கூடியது. அதை நாங்கள் குலதெய்வமாக வைத்துக் கொண்டோம். காவல் தெய்வமாகிய கருப்ப சாமியையும் குலதெய்வமாக வைத்துக் கொண்டோம்.

**தில்லாளம்மன் கோவிலின் கதை என்ன?**

பல கதை இருக்கு. எங்களுக்குத் தெரிந்ததைச் சொல்றோம். எங்களுடைய பங்காளிகள் அரியலூர் பக்கத்துல, பெரம்பலூர் பக்கத்தில் அன்றைய திருச்சி மாவட்டம் கல்பாடி என்ற ஊரில் தங்கியிருந்து சிவனை வழிபட்டவர்கள். ஒரு காலத்தில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்ட நேரத்தில் அந்த இடத்தை விட்டு நீரலையால் ஏற்படக்கூடிய ஆபத்திலிருந்து தப்பிப்பிழைக்க வேண்டும் என்பதால் குடி பெயர்ந்து கல்பாடி பகுதியிலிருந்து துறையூர் வந்து தங்கினார்கள்.

திருச்சி மாவட்டம் துறையூரில் இருந்த போது எங்களுடைய பங்காளியில் ஒருவர் தொட்டிய நாயக்கர் பெண்ணை தொட்டதனால் அந்த ஊரில் வாழமுடியவில்லை. ஆகையால் காவிரிக் கரையைத் தாண்டிப் புறப்பட்டார்கள். காவிரிக் கரையின் தெற்கே வந்த போது துறையூரில் இருந்து தொட்டிய நாயக்கர்கள் விரட்டி வந்து பிடித்த போது, இந்தப் பெண்ணை புதைத்து வைத்து விட்டுத் தப்பி வந்தார்கள். அந்தப் பெண்ணுடைய ஆவி தங்களைத் தொடர்ந்து வந்ததாக நினைத்து தொட்டிச்சி அம்மனுக்கு ஒரு சிலையும் வைத்து அதை தெய்வமாக வணங்குகிறார்கள்.

கல்பாடியில் இருந்த காவல் தெய்வமாகிய கருப்பசாமியை பிடிமண் பிடித்தக் கொண்டு வந்து கும்பம்பட்டியில் வைத்து, குடகனாற்றுக் கரையில் வைத்து அதைக் குலதெய்வமாக வைத்துக் கொண்டனர்.

**கும்மம்பட்டியில் எத்தனை கோவில்கள் உள்ளன?**

எங்களுடைய பங்காளிகள் என்று ஒரு பகுதி கல்பாடியில் இருந்து பிரிந்து வந்தவர்களின் குலதெய்வம் தில்லாளம்மன். அந்தத் தெய்வம் தவிர, அங்காள பரமேஸ்வரி, காமாட்சி அம்மன் கும்பிடுபவர்களும் இந்த ஊரில் இருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்கு மாமன், மச்சான் முறையில் வருவார்கள். அந்தச் சாமியைக் கும்பிடுபவர்களில் நாங்கள் பெண் கொடுத்துப் பெண் எடுப்போம்.

**குலதெய்வக் கோவில் கும்பிடு நடத்தவேண்டும் என்று யார் முடிவு செய்வார்கள்?**

பூசாரி, பெரியதனம், சேர்வை ஆகியோர் முடிவுசெய்து, நாலு ஊருக்கு ஆள்விட்டு இந்தக் கோவிலில் கலந்து பேசுவோம். தீத்தாம்பட்டி, அனுமந்தராயன்கோட்டை, மேட்டுப்பட்டி, வக்கம் பட்டி ஆகிய கிராமங்களில் வசிக்கும் வன்னியர்களில் எங்கள்குல பங்காளிகளுக்கு அழைப்புக் கொடுத்து, இங்க, கோயிலுக்கு வரச் சொல்வோம். அவர்களைக் கலந்துபேசி மாசி மாசத்துல ஒரு நாளைக் குறிப்போம்..

குறித்த நாளில், ஊரில் உள்ள தில்லாளம்மன் கோவிலில் தேங்காய், பழம் வைத்து பூஜை செய்து சாமிசாட்டுவோம். 1 வாரம் கழித்து, ஆத்தங்கரையில் இருக்கும் இந்தக் கருப்புச்சாமி கோயிலில் கெடா வெட்டிப் பொங்கல் வைப்போம்.

**நான்கு ஊர் கூடி சாமிகும்பிட வேண்டும் என்ற முடிவு செய்கிறீர்கள். இந்த முடிவு எடுக்கும் கூட்டத்தில், பெண்கள் அதாவது, பிறந்த மக்களோ அல்லது திருமணம் மூலமா உங்க குடும்பங்களுக்கு வந்த பெண்களோ அதில் கலந்துகொள்வார்களா?**

இல்ல. பெண்கள் யாரும் அதில் கலந்துக் கொள்ள மாட்டார்கள். ஆம்பளைக மட்டும் தான் முடிவு செய்வோம்.

**இதற்கு யார் யாரிடம் தலைக்கட்டுவரி வாங்குவீர்கள்?**

தில்லாளம்மன் கும்பிடுபவர்களிடம் மட்டும் வரி வாங்குவோம். வன்னியர்களிலேயே மற்ற குலத்தவர்களிடம் வரி வாங்குவதில்லை. நன்கொடை மட்டும் வாங்குவோம். சேரி மக்களிடம் வரியோ, நன்கொடையோ வாங்குவதே இல்லை. எங்கள் குலத்தில் மட்டுமே வாங்குவோம். எங்கள் குடும்பத்தில் பிறந்த பெண்களிடம் தலைக்கட்டு வரி பாதியாக வாங்குவோம். ஆண்களுக்கு முழு வரி வாங்குவோம்.

**விழா எப்படி நடக்கும் என்று விளக்கமாகக் கூறங்கள்**

ஊரில் உள்ள தில்லாளம்மன் கோவிலில் இருந்து, ஆற்றங்கரையில் இருக்கும் கருப்புச்சாமி கோவில் வரை (1கி.மீ) தூரத்திற்கு முழுவதும் லைட்டுகள் கட்டப்படும். மைக் செட் வைப்போம்.

மாலை 6 மணிக்கு ஊரில் இருந்து கெடா, பொங்கப் பானையோடு ஊர்வலம் புறப்படும். இரவு 10 மணிக்குத்தான் கருப்புச்சாமி கோவிலுக்கு வருவோம். இரவு 12 மணியைப்போல பொங்கல் வைத்து முடிப்போம்.

நைட் 2 மணிக்குக் கெடா வெட்டு நடக்கும். படைக்கும் பூசாரியாக இருப்பவர், பொங்கலையும், கெடாயின் இரத்தத்தையும் கலந்து தாம்பாளத் தட்டில் என்னிடம் (ஆடும் பூசாரியிடம்) கொடுப் பார். நான் கருப்புச்சாமிக்கு அதைக் கொண்டு போவேன். நைட் 2 மணிக்கு எல்லா லைட்டுகளையும் நிறுத்திவிடுவார்கள். லைட்ட பூரா ஆஃப் பண்ணிப்புட்டு, கோயிலச் சுத்தி வந்து, தனியா நடந்து போவேன். இரத்தம் கலந்த அந்தப் பொங்கல், அந்தத் தாம்பாளத் தட்டோட அப்படியே காணாமப் போயிரும். கருப்பச்சாமி எடுத்துக்கும். அந்தத் தட்டக்கூட யாரும் பாக்க முடியாது. காலைல வந்து வெளிச்சத்துல பாத்தாலும் அந்தத் தட்டு யார் கண்ணுக்கும் சிக்காது.

**இந்தக் கோவிலுக்குப் பூசாரிகளாக யார் வருவார்கள்? அதை எப்படி முடிவு செய்வீர்கள்?**

பரம்பரை பரம்பரையாக எங்கள் குலத்தில், எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் பூசாரியாக வருவார்கள்.

**உங்க குடும்பத்தில் ஆண்வாரிசு இல்லாவிட்டால் என்ன செய்வீர்கள்? பெண்களைப் பூசாரியாகத் தேர்ந்தெடுப்பீர்களா?**

எங்கள் குடும்பத்தில் ஆண்வாரிசு இல்லா விட்டால் பங்காளிகளின் குடும்பத்திலிருந்து பூசாரியைத் தேர்ந்தெடுப்போம். பெண்கள் பூசாரியாக வரவே முடியாது.

**உங்க வாழ்க்கையில் குலசாமிக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுப்பீங்க?**

நேத்திக்கடன் வைத்தவர்களும், குழந்தை களுக்கு முதல்முடி எடுக்கவும், காது குத்தவும் இந்தக் கோவிலுக்குத்தான் வருவாங்க. கல்யாணம்னா முதல் பத்திரிக்கை ஊரில் உள்ள தில்லாளம்மன் கோவிலில் தான் வைப்பார்கள். குலசாமி என்ன என்பதை வைத்துத்தான் கல்யாணமே நிச்சயம் பண்ணுவாங்க.

**இந்தக் கோவில் கும்பிடும் போது தாழ்த்தப்பட்ட மக்கள் கும்பிட வருவார்களா?**

இந்தக் குலதெய்வம் சாமி சாட்டும் நாள்ல இருந்து சாமிகும்பிடு முடியுற வரைக்கும் காலனில இருக்க சேரிச்சனங்க, ஊருக்குள்ளயே வர மாட்டாங்க.

**கும்பாபிஷேகம் நடக்கும் போது யார் வருவார்கள்?**

கும்பாபிஷேகம் நடத்துவதற்கு திண்டுக்கல் அபிராமி அம்மன் கோவிலில் இருந்து ஐயர்கள் வருவார்கள். நாங்கள் கும்பாபிஷேகம் பண்ணினால் அது நிறைவு இல்லை என்று ஐயர்கள் சொல்கிறார்கள்.

## படையாச்சிக்கவுண்டர் எனப்படும் வன்னியர்களின் ஒரு பிரிவினர்

### குலதெய்வம்: பெரிய கருப்பசாமி

**குலதெய்வத்தின் கதை வரலாறு என்ன?**

சுமார் 500 வருடங்களுக்கு முன்பு இக்கோயில் உண்டானதாக எங்கள் மூதாயையர் சொல்லி யிருக்கிறார்கள். தற்செயலாக உருவான இத்தெய்வம் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த 40 பங்காளிகளிடம், இங்கு பள்ளி கொண்டு இருப்பதாகவும் தன்னை அழைத்துக் கொண்டு போகுமாறும் கட்டளை யிட்டிருக்கிறது. அப்பொழுது கனவில் குறிப்பிட்ட இடத்தில் ஒரு பிடி கல், குத்துக்கல் வடிவில் வெட்டவெளியில் அமைந்து இருந்ததாகக் கூறினார்கள். தானாக உருவானதால் தன்னாசி யப்பன் என்ற பெயர் இதற்கு உண்டாம். பெரிய கருப்பசாமி சிலை வடிப்பதற்கு முன்பு தாங்கள் வழிபட்ட குத்துக்கல்லையே "தன்னாசியப்பன்" என்கிற பெயரில் வணங்குகிறார்கள். இந்த தன்னாசியப்பன் சிறுகோயில் சுதந்திரம் பெறுவதற்கு முன் 1943 ஆம் வருடம் கட்டியிருக்கிறார்கள். அதே கால கட்டத்திலேயே பெரிய கருப்பசாமி கோயிலின் மேற்கூரையும் மாற்றி அமைக்கப்பட்டதாகக் கூறினார்.

**பெரிய கருப்பசாமி கதை**

ஆங்கிலேயர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டி ருந்த காலகட்டத்தில் அலங்கியத்திற்கு நேர் எதிரே

உத்தமபாளையம் என்று ஊர் இருந்தது. கருப்பசாமி வேட்டைக்குப் போகும் சமயத்தில் வெள்ளக்கார துரை ஒருவர், குதிரை மேல் சவாரி செய்தபடி எதிரில் வந்த காரணத்தால் துரைக்குக் கண்பார்வை பறிபோய்விட்டது. எத்தனையோ வைத்தியம் பார்த்தும் கண்பார்வை கிடைக்கவில்லை. அந்தக் காலகட்டத்தில் கருப்பசாமி பூசாரியாக இருந்த எங்கள் பங்காளி ஆங்கிலேயரிடம் சென்று கருப்பசாமி வேட்டைக்குப் போகும்போது வழிமறித்ததால்தான் உங்களுக்குக் கண்பார்வை போயிற்று. ஆகவே நீங்கள் கோயிலுக்கு வந்தால் பார்வை கிடைத்துவிடும் வாருங்கள் என்று அழைத்திருக்கிறார்.

பூசாரிக்கு இசைவு தெரிவித்து ஆங்கிலேயரும் கோயிலுக்கு வந்திருக்கிறார். கருப்பசாமி பாதத்தில் தீர்த்தம் வைத்து ஆங்கிலேயர் கண் மற்றும் முகத்தில் தெளித்தவுடன் அவருக்கு பார்வை வந்துவிட்டது. மகிழ்ச்சியுற்ற ஆங்கிலேயர் எனக்குக் கண்பார்வை கொடுத்த கருப்பசாமியின் காட்சி விளங்க என்ன வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அலங்கியம் ஒத்த மாமரத்தில் இருந்து மேற்கே பனந்திட்டு வரை இருக்கும் அனைத்து வயல்களையும் கோயிலுக்கு எழுதித்தருவதாக அந்த ஆங்கிலேயர் கூறியிருக்கிறார். சுமார் 50, 60 ஏக்கர் தேறும் நிலத்தைத் தருகிறேன் என்று ஆங்கிலேயர் கூறியும், எங்கள் பங்காளிகள் தங்களால் அவ்வளவு குத்தகை பணம் செலுத்தமுடியாது.அதனால் மேட்டுப்பாங்கான ஒன்னரை ஏக்கர் நிலம் போதும் என்று கூறியிருக்கிறார்கள்.

ஒவ்வொரு பங்காளிக்கும் சுமார் இரண்டரை செண்ட வீதம் வயலைக் கொடுத்து செம்பு பட்டயமும் கொடுத்திருக்கிறார்கள். இக்கோயிலுக்கு மேற்கே அவ்வயல் இருக்கிறது. அவ்வயலில் வரும் வருமானத்தின் ஒரு பகுதியை கோவிலுக்கு தற்போது வரை செலவழித்து வருவதாகவும் கூறினார்கள். மேலும் இக்கோயில் வளாகத்திலேயே மகாமுனி, முன்னடிக்கருப்பு, வம்படிக் கருப்பு, சேலை செல்லாத்தா, வைத்தீஸ்வரர் மற்றும் பஞ்ச பாண்டவர்களுக்கு சிலைகள் (5 கற்களை நேர் வரிசையில் அடுக்கிய மாதிரி) வைத்திருந்தார்கள்.

**குலதெய்வமான பெரியகருப்பசாமி கோயிலில் வைத்தீஸ்வரர் மற்றும் பஞ்ச பாண்டவர்களுக்கு சிலை வைத்திருப்பதற்கான காரணம் என்ன? இந்த தெய்வத்திற்கும், பெருந்தெய்வத்திற்கும் கதைப்படி என்ன தொடர்பு?**

வைத்தியம் பார்க்கக்கூடிய ஈஸ்வரன் “வைத்தீஸ்வரர்” என்றும் தீராத நோய்களைத் தீர்க்கக்கூடியவர் என்றும் கூறினர். பஞ்ச பாண்டவர்கள் இங்கு தங்கியிருந்த சமயத்தில் கீரனூரைச் சேர்ந்த கீசகராஜா திரௌபதியின் மேல் ஆசைப்பட்டு அவரை வினவியிருக்கிறார். அதற்கு திரௌபதி பெரியகருப்பசாமி கோயிலுக்குச் சற்றே தள்ளியுள்ள இடத்திற்கு வந்தால் தங்களை மகிழ்விக்கிறேன் என்று அழைத்திருக்கிறார். அவ்விடத்தை விட்டுக் கிளம்பிய திரௌபதி நேராக தன் கணவர்களிடம் சென்று நடந்ததைக்கூறி கீசகராஜனை வதம் செய்யுமாறு பணிந்திருக்கிறார்.

திரௌபதியின் அழைப்பை ஏற்று அலங்கியம் வந்த கீரனூர் கீசகராஜாவை பீமன் வதம் செய்துவிட்டார். பிறகு இவர்கள் அனைவரும் விராடபுரம் (தற்போது தாராபுரம்) சென்றுவிட்டார்கள். அவர்கள் இங்கு வந்து தங்கியிருந்ததற்கான அடையாளமாக பஞ்ச பாண்டவர்களுக்குச் சிலை வைத்திருக்கிறார்கள்.

அனைத்துப் பெருந்தெய்வங்களுக்கும், பெரிய கருப்பண்ணசாமிதான் காவல் தெய்வம். சபரிமலை ஐயப்பன் கோயிலிலும், பழனியில் 18 ஆம் படிக் கட்டிலும் முதலில் வழிபடும் காவல் தெய்வமாக வைத்திருப்பார்கள். சிவன் கோயிலில் மட்டும் பெரியகருப்பசாமி சிலை பெரும்பாலும் இருக்காது. அத்திப்பூத்தாற்போல் ஏதோ ஒன்றிரண்டு சிவன்கோயிலில் பெரியகருப்பசாமி சிலை வைத்திருக்கலாம்.

**பெரிய கருப்பச்சாமிக்குக் கும்பாபிஷேகம் நடந்துள்ளதா? நடத்தியவர்கள் பார்ப்பனர்களா அல்லது வன்னியர் ஜாதியைச் சேர்ந்தவர்களா? எத்தனை வருடத்திற்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடத்துவீர்கள்?**

கும்பாபிஷேகம் நடந்துள்ளது. சுமார் 600 வருடங்கள் இருக்கும். பார்ப்பனர்கள்தான் கும்பாபிஷேகம் நடத்தினர். வன்னியர் ஜாதி பூசாரிக் கூட்டத்துக்குச் சொந்தமான கோயிலாக இருந்தாலும், ஆங்கிலேயர்கள் கோயிலுக்கு கொடுத்த செம்புப்பட்டயம் தங்கள் வசம் இருந்தாலும், கும்பாபிஷேகம் பண்ணுவதற்கு என்று ஒரு ஐதீகம் இருக்கிறது.

காலம்காலமாக பார்ப்பனர்களை வைத்துக் கும்பாபிஷேகம் பண்ணுவது நடைமுறையில் இருக்கும்போது தற்போது அவ்வழக்கத்தை மாற்ற முடியாது. மாற்ற நினைத்தால் பார்ப்பனர்கள் இருப்பதற்கு அர்த்தமில்லாமல் போய்விடும். கோயில் புனரமைப்பது, கும்பாபிஷேகம் பண்ணுவது போன்றவைகளில் பார்ப்பனர்களைக் கலந்து ஆலோசிக்காமல் தாங்கள் எந்த ஒரு முடிவும் எடுக்க மாட்டோம். தற்போது கூட இக்கோயிலை புனரமைக்கலாம் என்று யோசித்து கீரனூரைச் சேர்ந்த பார்ப்பனரிடம் சென்று கோயிலைப் பார்த்துவிட்டு ஆலோசனை கூறுமாறு கேட்டோம்.

அவர் கர்ப்பகிரகத்தில் இருந்து முன்மண்டபம் அரை அடி இறங்கியிருக்கிறது அதனால் கோயிலை இடித்து புதிதாக சிலை வடித்து கோபுரத்துடன் கட்டினால்தான் கருப்பசாமியின் சக்தி குறையாமல் வலுவடையும் என்று கூறினார். அதனால் புதிதாகச் சிலை செய்து கோயிலைக் கட்டியிருக்கிறோம். ஏற்கனவே இருக்கும் சிலையை பாடாலாயம் பண்ணி ஓரமாக வைத்துவிடுவோம். புதிதாகச் செய்யும் சிலையை கும்பாபிஷேகம் செய்து பார்ப்பனர்கள் உயிர் கொடுப்பார்கள். அதற்குப் பிறகுதான் நாங்களே பூசை செய்வோம். பார்ப்பனர்கள் இல்லாமல் கும்பாபிஷேகம் செய்ய

முடியாது. பார்ப்பனர்களை அடுத்துச் செய்யும் மண்டலபூஜை (48 நாட்கள்) முடியும் வரை கோயிலில் கிடாய் கூட வெட்டமாட்டோம்.

**தெய்வத்தை வழிபடும் மக்கள்தொகை எவ்வளவு? அதில் என்னென்ன ஜாதிகள் இருக்கிறார்கள் அல்லது ஒரே ஜாதியினரா?**

தெய்வத்தை வழிபடும் மக்கள்தொகை சுமார் பத்தாயிரம் பேர் இருப்பார்கள். இப்பொழுது அனைத்து ஜாதியினருக்கும் தங்களுக்கும் இதுதான் தெய்வம் என்று வழிபடுகிறார்கள். இந்த சாமியை இஸ்லாமியர்கள் கூட வழிபடுகிறார்கள்.

பெரிய கருப்பசாமியைக் கும்பிடும் ஜாதிக்குள் எத்தனை உட்பிரிவுகள் இருக்கிறது? மற்ற உட்பிரிவுக்கும் மற்ற ஜாதியினருக்கும் இந்த கோயிலில் எந்த அளவு உரிமைகள் உள்ளது?

படையாச்சிக் கவுண்டர் (வன்னியர்) எனப் படும் எங்கள் ஜாதியில் ஏழு வம்சம் இருக்கிறோம். அறியான்கூட்டம், மணியார்கூட்டம், பூசாரிக் கூட்டம், கவுண்டர் கூட்டம், சேவியார் கூட்டம், வஞ்சியார் கூட்டம் மற்றும் கருமாண்ட கூட்டம் ஆவர். கோயிலுக்கு உரிமைபட்டவர்கள் பூசாரிக் கூட்டத்தைச் சேர்ந்த 40 வீட்டுப் பங்காளிகள் தான். மற்ற உட்பிரிவினருக்கு மாமன், மச்சான் என்ற உரிமைதான் இருக்கு. கோயிலில் எந்த உரிமையும் இல்லை. மற்ற ஜாதியினருக்கும் இக்கோயிலில் உரிமை கிடையாது. சாமி கும்பிட்டுவிட்டுச் செல்லலாம் என்கிற அளவு அனுமதிதான் உண்டு.

**பெரிய கருப்பசாமியை கும்பிடும் நீங்கள் எந்த உட்பிரிவுடன் மணஉறவு வைக்கிறீர்கள்? அவர்கள் எந்த சாமியை கும்பிடுவார்கள்?**

பூசாரி கூட்டத்தைச் சேர்ந்த நாங்கள் மாமன், மச்சான் உறவுமுறையில் உள்ள வஞ்சியர் கூட்டம், கருமாண்டகூட்டம், மணியார் கூட்டம் மற்றும் அறியான் கூட்டத்துடன் மணஉறவு வைத்துக் கொள்வொம். வஞ்சியார் கூட்டம் வஞ்சி அம்மனையும், கருமாண்டகூட்டம் மதுரை வீரனையும், மணியார்கூட்டம் காமாட்சி அம்மனையும், அறியான் கூட்டம் பெருமாள் சாமியையும் கும்பிடுவோம். வேட்டைக்காரனைக் கும்பிடும் சேவியார் கூட்டமும், பெரிய தெய்வத்தை கும்பிடும் கவுண்டர் கூட்டமும் எங்களுக்கு பங்காளிகள் ஆவதால் மணமுடிக்க மாட்டோம்.

**குலதெய்வத்திற்கும்,பூசாரிக்கும் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்குறீர்கள்?**

பூசாரிக்கு என்று தனிமரியாதை எப்போதும் உண்டு. தொழில் தொடங்குவதிலிருந்து அனைத்துச் செயல்களையுமே குலதெய்வத்தை கும்பிட்டுவிட்டு தொடங்குவோம்.

**பூசாரியை எப்படி நியமிக்கிறீர்கள்? ஒரே குடும்பத்தினர்தான் பூசாரிகளாக பரம்பரை, பரம்பரையாக வந்துள்ளீர்களா அல்லது வேறு பிரிவிலிருந்தும் பூசாரியை நியமிப்பீர்களா?**

எங்கள் தாத்தா காலத்திற்கு முன்பு 40 குடும்பங்களும் சேர்ந்து குடும்பத்திலுள்ளவரை பூசாரியாகத் தேர்ந்தெடுத்தார்கள். அதற்குப் பிறகு எங்கள் தாத்தா, அப்பா தற்போது நான் என பரம்பரை, பரம்பரையாகப் பூசாரியாக தொடர்ந்து வருகிறோம். எங்களால் முடியாத சூழ்நிலையில் பூசாரிக்கூட்டத்தைச் சேர்ந்த ஆண்கள் வேண்டு மானால் பூசாரியாகலாம் மற்ற பிரிவிலிருந்து நியமிக்கமாட்டோம்.

**குலதெய்வ கோயில் உள்ள ஊர் அல்லது இடம் எது? கோயிலின் அமைப்பு எப்படியுள்ளது? பஸ் வசதி இருக்கிறதா?**

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம் அலங்கியம் கிராமத்தில் சற்றே உள்ளடங்கி வயல்களுக்கு நடுவே சுற்றுச்சுவருடன் ச்ற்றே பெரிய அளவில் இக்கோவில் காட்சியளிக்கிறது. பெரிய கருப்பசாமி சிலை இருக்கும் இடம் மட்டும் டெரஸ் பேட்டு, தரையில் காரை போடப்பட்டிருக்கிறது. கோபுரம் கிடையாது. மற்றபடி முன்னடிக்கருப்பு (முன்னடியான்), வம்படிக் கருப்பு மற்றும் மகாமுனி சிலைகள் வெட்டவெளியில் காட்சியளிக்கிறது.

தன்னாசியப்பன் கையடக்கமான சிறிய கோவில் போன்ற அமைப்பில் இருக்கிறது. இக்கோயிலின் முன்னே ஒரு ஓரமாக வைத்தீஸ்வரர் சிலை வெட்டவெளியில் இருக்கிறது. தன்னாசி யப்பன் 1943 ஆம் வருடமும், முன்னடிக் கருப்பு மற்றும் குதிரைசிலை 1960 ஆம் வருடமும், மகாமுனிசிலை 1974 ஆம் ஆண்டும், 2001ஆம் ஆண்டிலும் வண்ணம் பூசி புதுப்பிக்கப் பட்டி ருக்கிறது. பேருந்தில் வந்து ஒத்த மாமரத்து நிறுத்தத்தில் இறங்கி ஒரு ½ கிலோ மீட்டர் உள்ளே வரவேண்டும். விவசாயம் இல்லாத காலத்தில் வாகனங்களிலும், விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நடந்தும் வரவேண்டும்.

**கோவிலுக்கு என்னென்ன காணிக்கைகள் செலுத்துகிறார்கள்? திருவிழாவுக்கு எவ்வளவு செலவு ஆகும்? அந்தச் செலவை எப்படி திரட்டுவீர்கள்?**

காணிக்கையாக காசு, பணம் கொடுப்பார்கள். சாமிக்குக் கிடா வெட்டுகிறேன், கோயில் கட்டமைப்பதற்கு மணல், செங்கல் தருகிறேன் என்று வேண்டிக் கொள்வார்கள். அருவா அடித்துத் தருவது, வேல் அடித்துத் தருவது போன்ற காணிக்கைகளும் உண்டு.

ஒவ்வொரு வருடமும் நிகழ்வுக்கு தகுந்தாற் போல் செலவு ஆகும். சென்ற வருடம் செலவான தொகை 30,000 ரூபாய் .பொதுமக்கள் அன்பளிப் பாகக் கொடுக்கும் பணம் மற்றும் கோயிலுக்குச் சொந்தமான வயலில் இருந்து கிடைக்கும் பணம். இவற்றோடு 40 பங்காளி வீடும் இணைந்து செலவு செய்வோம். நன்கொடை புத்தகம் அச்சடித்து விருப்பப்பட்டு கொடுப்பவர்களிடம் பணம் வசூலிப்போம்.

**இந்தச் சாமி கும்பிடும் மக்களின் கல்வித்தகுதி என்ன? வேலைவாய்ப்பு எப்படி இருக்கிறது? முதலில் இருந்ததற்கும் தற்போதைக்கும் என்ன விதமான மாறுபாடு இருக்கிறது?**

தற்போது அனைவருமே படிக்கிறார்கள்.

மருத்துவர், பொறியாளர், ஆசிரியர் என அனைத்துத் துறைகளுக்கும் செல்கிறார்கள். அனைத்து வகையான தொழில்களிலும் ஈடுபடுகிறார்கள். இரும்பு சம்பந்தமான எல்லா வேலைகளையும் செய்கிறார்கள். விவசாயிகளாகவும், விவசாயக் கூலிகளாவும் உள்ளனர். நெசவுத் தொழிலிலும் ஈடுபடுகிறார்கள். ஆரம்பத்தில் ஒருவேளை சாப்பாட்டுக்கே மிகவும் சிரமமாக இருக்கும். தற்போது அந்தநிலை இல்லை. கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரம் என அனைத்திலும் முன்னேற்றம் காணப்படுகிறது.

**கோயில்களில் பெண்களின் உரிமைகள் என்ன? பங்கு என்ன? பெண்கள் பூசாரிகளாக இருக்கிறார்களா? குறைந்தபடசம் பெண் கடவுள்களுக்காவது பெண் பூசாரிகள் உண்டா?**

பூசாரிக் கூட்டத்தைச் சேர்ந்த பங்காளிப் பெண்ணாக இருந்தாலும் மாமன், மச்சான்கிற உறவில் கோயிலுக்கு வரலாமே ஒழிய எந்த விதமான உரிமையும் கிடையாது. பங்கு கிடையாது. வயதுக்கு வராத எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த சிறு பெண்ணைத்தான் கருப்பசாமியிருக்கும் முன் மண்டபத்தில் அனுமதிப்போம். வயது வந்த பெண்களை எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த பெண்ணாக இருந்தாலும் முன் மண்டபத்தில் அனுமதிக்கமாட்டோம். பெண்கள் பூசாரி என்ற பட்டம் கிடையாது. பெண் தெய்வங்களுக்கும் ஆண் தான் பூசாரியாக இருக்கிறார்.

**கல்யாணத்திற்குப் பின் பெண்கள் தந்தையின் குல தெய்வத்தை வணங்குவார்களா? அல்லது கனவரின் குலதெய்வத்தை வணங்குவார்களா? தலக்கட்டு வரி எந்த குடும்பம் சார்பில் வசூலிக்கப் படுகிறது?**

கல்யாணத்திற்குப் பிறகு பெண்கள் கணவரின் குலதெய்வத்தைத்தான் கும்பிடுவார்கள். வேறொருவருக்கு மணம் முடித்த பெண் மாமன், மச்சான் உறவுமுறை ஆவதால் தலக்கட்டு வரி வாங்க மாட்டோம். தலக்கட்டு வரி (ஆணுக்கு) கணவருக்குத் தான் போடுவார்கள். பிறந்த வீட்டில் இல்லை தலக்கட்டுவரி. பூசாரிக் கூட்டத்தைச் சேர்ந்த 40 பங்காளிகள் வீட்டு ஆண்களிடம் தான் வாங்கு வோம். பெண்கள் விருப்பப்பட்டுக் கொடுத்தால் வாங்கிக்கொள்வோம்.

**வன்னியர்களைத் தவிர பிற பிற்படுத்தப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட மக்களிடம் வரி வாங்கப்படுகிறதா?**

நன்கொடை மட்டும் விருப்பப்பட்டுக் கொடுத்தால் வாங்கிக்கொள்வோம். தாழ்த்தப் பட்டவர்கள் என்ற பாகுபாடு காட்ட மாட்டோம். கோயிலுக்குள் கருப்பசாமி இருக்கும் இடம் நீங்கலாக அனுமதிப்போம்.

**குலதெய்வக்கோயில் விழா பற்றிக் கூறங்கள்?**

வருடாவருடம் பெரிய கார்த்திகை (ஜோதி) மாதம் திருவிழா கொண்டாடுவோம். பங்காளிகள் அனைவரும் மாவிளக்கு எடுத்துக்கொண்டு வருவோம். சொக்கப்பானை கொழுத்தி விழாவைக் கொண்டாடுவோம். இவ்வாறே மாசி சிவன்ராத்திரி அமாவாசைக்கும் விழா எடுப்போம். மைக் செட்டு கட்டுவோம், மேள தாளத்தோடு மாவிளக்கு எடுத்துட்டு வருவோம். அன்னதானம் போடுவோம்.

**கும்பிட வேண்டும் என்று முடிவு செய்பவர்கள் யார்?**

பூசாரிக் கூட்டத்தைச் சேர்ந்த 40 பங்காளிகள் வீட்டைச் சார்ந்தவர்கள் தான் முடிவு செய்வோம். திருவிழாவுக்கு ஆகும் மொத்த செலவைக் கணக்கிட்டு, ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு என நிர்ணயிப்போம். பங்காளி வீட்டில் உள்ள வயதில் மூத்தவர்கள் (பெரிய பெருந்தலைகள்) தான் திருவிழா இந்த தேதியில் நடக்கிறது என்றும், ஒரு குடும்பத்திற்கு இவ்வளவி வரி என்று அறிவிப்பார்கள். கோயில் பூசாரிக்கு இந்த நிகழ்வில் முன்னுரிமை அளிக்கப்படும். அடுத்தது பங்காளிகளில் யார் பெரியவரோ அவரை வைத்து அறிவிப்பார்கள்.

**எந்தெந்த காரியங்களுக்குக் குலதெய்வக் கோயிலுக்கு வருகிறார்கள்?**

குழந்தைகளுக்கு முதல்முடி இறக்குறது மற்றும் காதுகுத்து போன்ற நிகழ்வு இல்லாமல் குடும்பத்தில் கஷ்டம், தொழில் நலிவடைந்து கொண்டு செல்வது என்று இருந்தாலும் குலதெய்வக் கோயிலுக்கு வருவார்கள்.

## நன்கொடைகள்

பொள்ளாச்சி தோழர் கண்ணப்பன் அவர்கள் காட்டாறு இதழுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினார்.

காட்டாறு குழுவின் திருப்பூர் ஜீவாநகர் பரமேசுவரி - குமார் இணையரின் மகள் கு.ப.இளமதி அவர்களுக்கு ஏப்ரல் 6 அன்று பிறந்தநாள்.

காட்டாறு கலைக்குழு தோழர் திருப்பூர் மணிகண்டன் அவர்களுக்கு ஏப்ரல் 9 அன்று பிறந்த நாள்.

காட்டாறு குழு ஆண்டுக்கட்டணத் தொடர்பாளர் தோழர் திருப்பூர் வேணி அவர்களுக்கு ஏப்ரல் 11 அன்று பிறந்தநாள்.

காட்டாறு குழு தோழர்கள் உடுமலை தோழர் மலரினியன் - சுடரொளி இணையரின் மூத்தமகள் தேனிலா அவர்களுக்கு ஏப்ரல் 11 அன்று பிறந்தநாள்.

காட்டாறு வெளியீட்டாளர், ஆசிரியர் பொள்ளாச்சி விஜயராகவன் - தனலட்சுமி இணையரின் பேத்தி மீ.லோ.இலக்கியா அவர்களுக்கு ஏப்ரல் 13 அன்று பிறந்தநாள். அடுத்த பேத்தி மீ.லோ. இனியா வின் பிறந்தநாள் மே 23. அனைவரது பிறந்த நாட்களை முன்னிட்டு காட்டாறு இதழுக்கு ரூ.2000 நன்கொடை வழங்கப்பட்டது.

பள்ளர்களின் குலதெய்வங்கள்:

# மாறநாட்டுக் கருப்பணசாமி - முத்தம்மாள் - மதுரைவீரன்

**உங்கள் குலதெய்வத்தின் பெயர் அதன் வரலாறு பற்றி கூறங்கள்**

மாறநாட்டுக் கருப்பணசாமி எங்களின் குலதெய்வம். எங்கள் முன்னோர்கள் மாறநாட்டில் குடியிருந்தார்கள். மலையாள தேசத்தில் இருந்து வரும் ஆறு ஒன்றில் பெட்டி வருவதை வேடிக்கை பார்க்க மக்கள் சென்றுள்ளனர். வைகை ஆற்றுக் கரையின் ஓரம் அந்தப் பெட்டி ஒதுங்கியுள்ளது. அந்தப் பெட்டியைத் திறந்து பார்க்கும்போது, அதில் கருப்பணசாமி சிலையும் ஒரு அம்மனின் சிலையும் இருந்துள்ளது. அதை மார்நாட்டில் வைத்து பூஜை செய்ய ஆரம்பித்தார்கள்.

மறவர் இனப்பெண் எங்கள் மக்களோடு உறவாக இருக்கும். எங்கள் பகுதியில் வந்து விளையாட பழகவுமாக இருக்கும். அந்தப் பெண் வயதுக்கு வந்தவுடன் எங்கள் பகுதிக்கு வர எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். அதையும் மீறி எங்கள் பகுதிக்கு வருவதை அந்தப் பெண் நிறுத்தவில்லை. அவர்கள் இருப்பதால்தான் பெண் போகிறது, எனவே அவர்களை காலி பண்ணி விடலாம் என பேசுகிறார்கள்.

இதைக் கேட்டு அந்தப் பெண் எங்கள் மக்களிடம் சொல்லுகிறது. அவர்களிடம் அடிவாங்கிச் சாவதைவிட நாமே தற்கொலை செய்து கொள்ளலாம் என முடிவு செய்கின்றனர். எங்கள் மக்கள் அனைவரும் மார்நாட்டுக் கண்மாயில் இறங்கி தற்கொலை செய்து கொள்ளலாம் என முடிவு செய்து இரவு 12 மணிக்கு அனைவரும் வரும் போது அந்தப் பெண்ணும் எங்கள் மக்களோடு வந்துவிடுகிறது.

நிறைந்த கண்மாயில் மக்கள் இறங்கும் போது தண்ணீர் ஒதுங்கி வழி விடுகிறது, அசரீரியாக மாறநாட்டுக் கருப்பணசாமி நீங்க எங்க இருக்கிங்களோ நான் அங்க இருப்பேன். போங்கடா நான் கூட வருகிறேன் எனக் கூறியதாகவும், தண்ணீர்வழிவிட்டு மீண்டும் ஒன்று சேர்ந்ததாகவும் எங்கள் பெரியவர்கள் சொல்வார்கள்.

அப்படி வெளியேறியவர்கள் பல இடங்களில் தங்குகிறார்கள். அந்தப் பெண்ணும் கூடவே வருகிறது. என்னை அக்னியை வளர்த்து எரித்து விடுங்கள் என்றதாகவும் அந்தப் பெண்ணை எரித்த இடம் தாமரைப்பாடி கிராமம் சாலையூர் எனவும் எங்கள் முன்னோர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

எங்கள் பூசாரியை வரவழைத்து பழைய வரலாறு கேட்பார்கள். அவர் சொல்லும்போது உடுக்கே உடைந்து தடைபடுத்திவிடும். நானே பார்த்திருக்கேன். நாங்கள் இங்கே மார்நாட்டு கருப்பணசாமி, வடுகச்சி அம்மன், அந்தப் பெண் மறத்தி முத்தம்மாள் என அனைவரையும் எங்கள் குல தெய்வமாக வணங்குகிறோம்.

**உங்கள் குல தெய்வத்திற்கும் பெருந்தெய்வங்களான சிவன்,விஷ்னுவுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?**

மார்நாட்டுக் கருப்பணசாமி கோவிலின் முன் பகுதியில் சிவன், விஷ்ணு மற்றும் நவக்கிரகங்களின் ஆலயங்கள் உள்ளன. காவல் தெய்வமாகக் கருப்பணசாமி உள்ளார். அவற்றிற்கான வழிபாடுகள் எப்படி நடந்தன என்ற முறை பற்றி எங்கள் முன்னோர்கள் எதுவும் சொல்லவில்லை. ஆனால் பல தெய்வங்களுடைய விக்ரகங்கள் உள்ளன. இன்றைக்கும் வழிபாடுகள் நடக்கின்றன.

**பூர்வீக கோவிலில் கும்பாபிஷேகம் எப்படி நடக்கும்?**

நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் இருந்து கும்பாபிஷேகம் நடப்பதாகச் சொல்வார்கள். நாங்கள் கலந்து கொண்டது கிடையாது. சமீபத்தில் ஒரு வருடத்திற்கு முன்பு கும்பாபிஷேகம் நடந்தது. நாங்கள் கடைசி 48 நாள் பூஜை

செய்தோம். கோவில் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. கும்பாபிஷேகம் அறநிலையத்துறைதான் நடத்துகிறது. ஆனால் பூஜை, நிர்வாகம் அனைத்தும் எங்கள் இனத்தவர் கட்டுப்பாட்டில்தான் உள்ளது.

**இங்கே உள்ள கோவிலில் எப்படி நடக்கும்?**

எங்கள் முன்னோர்கள் சாலையூருக்கு வந்து குடியேறியபிறகு வீடு கட்டிக் குடியிருந்தார்கள். அதில் ஒரு அறையில் சாமியை வைத்து, பூஜை செய்து வந்தார்கள். காலப்போக்கில் சாமி இருக்கும் இடத்தில் இருக்கக்கூடாது எனக்கூறி அந்த வீட்டை இடித்துவிட்டுத் தரையில் ஒரு கல்லை வைத்து பூஜை செய்தனர். 5 அல்லது 6 வருடங்களுக்கு ஒரு முறை சாமி கும்பிடுவதை ‘களரி’ எனச் சொல்லுவார்கள்.

களரி அன்று பங்காளிகள் ஒன்ற சேர்ந்து கங்கணம் கட்டி விரதம் இருந்து ஆடிமாதத்தில் கிடாய் வெட்டி இரவு 12 மணிக்கு பூஜை செய்வார்கள். அனைத்தையுமே பங்காளிகள் மட்டுமே சாப்பிடுவார்கள். எங்கள் அப்பா காலத்தில் ‘பண்டு’ சேர்த்து கோயில் மாதிரி நான்கு பக்கமும் சுவர் எடுத்து மேலே ஒரு மண் கலசம் வைத்து, ஐயரை வைத்துக் கும்பாபிஷேகம் செய்தார்கள். ஐயர் மேலே கலசத்திற்கு மட்டும் பூஜை செய்தார். மூலஸ்தானத்தில் சிலையோ, விக்ரகங்களோ வைத்து பூஜை செய்ய மாட்டோம். மார்நாட்டில் என்ன மாதிரி இருக்கோ அதே மாதிரி வேல்கம்பு, சந்தனத்தடி, அருவாள் ஆகியவற்றை வைத்து பூஜை செய்கிறோம்.

**நீங்களே பூஜை பன்னீர்களா அல்லது பார்ப்பனர்கள் செய்தார்களா?**

குலதெய்வம் கும்பிட வேண்டுமென்றால் எங்கள் முன்னோர்கள் சில கட்டப்பாடு வைத்துள்ளார்கள். பாடியூரில் கோட்டை ஒன்று இருந்தது. கோட்டையின் பூசாரி ஊராளிக் கவுண்டர். அவர் சாமி கும்பிடுவதற்கு கங்கணம் கட்டி, திருநீர் கொடுத்து, இந்தத் தேதியிலிருந்து சாமி கும்பிடும்வரை விரதம் இருக்க வேண்டும் எனச் சொல்லுவார்கள்.

அதன் பிறகு சாமி கும்பிடுக்கு முதள்நாள், பக்கத்து ஊரில் தம்பிநாயக்கன்பட்டியில் கம்பளத்து நாயக்கர் கிராமத்து பூஜை செய்ய, தாமரைப்பாடி முனியப்ப கோவிலில் கோட்டையை எதிர் நோக்கி பூஜை செய்வர்கள். பாடியூர் கோட்டையை எதிர்நோக்கி பூஜை செய்வார்கள். கிராமத்து பூஜையை செய்து ஆரம்பித்துவிட்டு அவர்கள் சென்றுவிடுவார்கள். மற்ற அனைத்தும் எங்கள் இனத்தவரே செய்வர்கள். அந்தக்காலத்தில் ஜமீன் வாக்கு என எங்கள் முன்னோர்கள் செய்தார்கள். நாங்களும் அதை கடைப் பிடிக்கிறோம்.

**கும்பாபிஷேகம் ஐயரை வைத்து நடத்தினீர்களா?**

ஆமாம். கும்பாபிஷேகம் என்றால் கலசத்திற்கு தண்ணீர் ஊற்றுவது. எந்த இனமாக இருந்தாலும் ஜாதியாக இருந்தாலும் ஐயர்கள்தான் பண்ணனும் என முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளனர். அதுப்படி நாங்கள் அய்யரை வைத்துப் பண்ணினோம். கோவில் கட்டிய பிறகு ஒரு தடவை தான் கும்பாபிஷேகம் பண்ணினோம். அதுவும் அய்யர் வைத்துத்தான் பண்ணினோம். அங்கேயும் அப்படித்தான் நடந்தது. மூலஸ்தானத்தில் அபிஷேகம் செய்வது எங்கள் இனத்து பூசாரி ஆவார். விமானம் எனப்படும் கோபுரக் கலசத்திற்கு மட்டும் ஐயர்கள் பூஜை பண்ணுவார்கள்.

**உங்கள் குலதெய்வத்தை வழிபடும் மக்கள் தாகை எவ்வளவு? என்ன என்ன ஜாதி இருக்கிறார்கள்? அல்லது ஒரே ஜாதியா?**

மார்நாட்டு கருப்பணசாமியை வழிபடுபவர்கள் அனைவரும் ஒரே ஜாதிதான். மக்கள் தொகைன்னு பார்த்தா இலட்சக்கணக்கான மக்கள் ஏகபோகமாகப் பரவி இருக்கிறார்கள். அதாவது மார்நாட்டிற்குச் சென்று வழிபடுபவர்கள். எங்கள் ஊரில் ஆயிரம் குடும்பம் எங்கள் பங்காளிகள் இருக்கிறார்கள். அவர்கள் வரிக்கொடுத்து மற்றும் உடன்பிறந்த பெண்கள் சாமி கும்பிட ஆரம்பித்தால் அரை வரி கொடுப்பார்கள். சாலையூரில் ஆயிரம் குடும்பம் இருக்கும். மற்ற இன மக்கள் வேண்டுதல் மட்டும் செய்வார்கள்.

**ஒரே ஜாதிக்குள் என்றால் என்ன உட்பிரிவு? மற்ற உட்பிரிவுக்கும் ஜாதிக்கும் உள்ள உரிமை என்ன?**

எங்களுடையது தேவேந்திரகுல பள்ளன், எங்களில் ஆத்தா பள்ளர், ஆயா பள்ளர் என உண்டு. ஆனால், இவர்கள் யாரும் கலந்து கொள்ள மாட்டார்கள். சாமியை வணங்குவதும் நேர்த்திக் கடன் செலுத்துவதும் உண்டு. சாமியை வணங்கியதால் நல்லது நடந்தது என கும்பிடு தளத்தில் வந்து நேர்த்திக்கடன் செலுத்துவாங்க.

**எந்த உட்பிரிவை திருமண உறவாக வைத்தக் கொள்வார்கள்? அவர்களின் தெய்வம் அதன் கதை என்ன?**

திருமணம் தேவேந்திர பள்ளர்களின் உட்பிரிவில் தான் நடக்கும். எங்கள் பங்காளிகளுக்கு இது குலதெய்வம் என்றால் மாமன் மச்சான் என அவர்களுக்கு குல தெய்வங்கள் உண்டு. அது ஊருக்கு தகுந்தமாதிரி வேறுபடும். அவர்களின் குல தெய்வம் பற்றி எங்களுக்கு அவ்வளவாக தெரியாது. எங்களின் பெண்கள் எந்தக் குலத்தில் திருமணம் செய்து இருந்தாலும் இந்த குலதெய்வத்திற்கும் காணிக்கை செலுத்துவார்கள்.

**குலதெய்வத்திற்கும் அதன் பூசாரிக்கும் உங்கள் வாழ்க்கையில் எந்த அளவிற்கு முக்கியத்துவம் தருகிறீர்கள்?**

மார்நாட்டிற்குச் சாமி கும்பிடச் செல்லும் போது, முதலிலேயே தகவல் சொல்லி விடுவோம். பூசாரி எங்களுக்கு ஒரு குரு மாதிரிதான். இறைவனை எப்படி வணங்குகிறோமோ அதே மாதிரிதான். பூசாரிக்கும் முக்கியத்துவம் தருவோம். அவர் சொல்லும் வாக்கு, கொடுக்கும் திருநீர் என அனைத்தையும் நம்பிக்கையோடு நேசிக்கிறோம். இங்கே இருக்கிற பூசாரிக்கும் அதே மரியாதைதான். அவர் சொல்லும் வாக்கைத் தெய்வ வாக்காக ஏற்றுக்

கொள்வோம். மார்நாட்டுக் கருப்பண சாமியே சொல்வதாக நம்பிக்கையோடு நேசிப்போம்.

**பூசாரி பரம்பரை பரம்பரையாக ஒரே குடும்பத்தில் இருந்து வருவார்களா- அல்லது மாற்று உட்பிரிவில் இருந்து ஏற்றுக் கொள்வீர்களா?**

இதுவரை எனக்குத் தெரிய மார்நாட்டிலும் சரி, சாலையூரிலும் சரி எங்கள் பங்காளி களிலிருந்தேதான் பூசாரி தேர்ந்தெடுக்கப் படுவார்கள். மாற்று உட்பிரிவில் எப்போதும் கிடை யாது. பரம்பரை பரம்பரையாக அந்த வாரிசுப்படி யார் மூத்த மகனோ அவர்தான் பூசாரி அவர்க்கு ஆண் வாரிசு இல்லையென்றால் அவருடைய தம்பியோ அல்லது பங்காளியிலோ தேர்ந்தெடுப் பார்கள்.

**குல தெய்வக் கோவிலின் இடம் ஊர் கட்டிட அமைப்பு போக்குவரத்து வசதி ஆகியவற்றை பற்றி கூறங்கள்?**

பூர்விகத்துல இருக்கிருற கோவிலுக்கு மதுரையிலிருந்து திருப்புவனம் சென்று அங்கிருந்து திருப்பாச்சி சென்று மார்நாட்டிற்கு செல்ல வேண்டும். 50 வருடங்களுக்கு முன்பு சிரமம் இருந்தது. இன்று அனைத்து வாகனங்களும் போகலாம். சாலையூரிலும் திருச்சி - திண்டுக்கல் நான்கு வழிச்சாலையில் அமைந்துள்ளதால் போக்குவரத்து வசதி பிரச்சனை இல்லை. இங்கே இருக்கிற கோவில் தரைமட்டமாக இருக்கும். ஒரு செட் போட்டு சாமி கும்பிடுவார்கள். இப்பொழுது கட்டிடம் கட்டி கும்பாபிஷேசகம் நடத்த திட்ட மிட்டுள்ளோம்.

**கோவிலுக்கு என்ன வகை காணிக்கை செலுத்தப்படுகிறது? திருவிழாவிற்கு ஆகும் செலவு என்ன? எப்படி திரட்டப்படுகிறது?**

காணிக்கை என்பது சாமி கும்பிடு சாட்டிய பிறகு ஒவ்வொருவரும் வேண்டுதல் என்ற பெயரில் வானவேடிக்கை, கிடாவெட்டுதல் போன்றவை நேர்த்திக்கடனாக வரும். சாலையூரில் நடப்பது என்னவென்றால் இரவு 12 மணிக்கு பூஜை முடிந்து கிடாய் வெட்டி அங்கேயே சமைத்துச் சாப்பிட வேண்டும். மீதம் உள்ள உணவோ, எலும்போகூட எடுத்துச் செல்லாமல் குழி வெட்டிப் புதைத்துவிட வேண்டும். செலவு என்ற பார்த்தால் 1 லட்சத்தி லிருந்து 2 லட்சம் வரை செலவாகும். சாமியை கும்பிடும் பங்காளிகளிடமிருந்து தலைக்கட்டு வரியாக வசூலிக்கப்படும். மேலும் நன்கொடையாக யார் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வோம்.

**மக்களின் கல்வி வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார நிலையில் குல தெய்வத்தின் பங்கு?**

மனப்பூர்வமாக நினைத்து வேண்டினால் நடக்கும். நாம் நினைத்த காரியம் நடக்க வேண்டு மானால் அவருடைய ஸ்தலத்தில் போய் வேண்டினால் ஒரு சகுனம் கிடைக்கும். அதுப்படி நினைத்தது நடக்கும். எதாவது காரியம் செய்ய வேண்டுமென்றால் அவரிடம் உத்தரவு கேட்போம். கிடைத்தால் தான் செய்வோம். இல்லையென்றால் செய்ய மாட்டோம். எந்த சமூகமாக இருந்தாலும் வேண்டிக் கொள்வார்கள். நிறைவேறினால் காணிக்கை செய்வார்கள். வேலை போன்ற காரியங்கள் நடப்பதாக நினைத்து நிறைய செய்கிறார்கள்.

**பெண்களின் உரிமை என்ன- பெண் கடவுள்களின் கோவில்களில் பெண் பூசாரி உண்டா?**

எனக்குத் தெரிய எங்கள் மூன்னோர் காலத்திலிருந்து இதுவரை பெண் தெய்வத்திற்கோ, ஆண் தெய்வத்திற்கோ பெண் பூசாரி இல்லை. கும்பிடு தலத்தில் சாமி வந்து ஆடும்போது எனக்கு வடுகச்சி அம்மன், மறத்தி முத்தம்மாள் வந்து ஆடுவதாக சொல்வார்கள். பூசாரி திருநீர் கொடுப்பார். இந்தப் பங்காளிகள் குடும்பத்தில் பிறந்த பெண்பிள்ளைகள் பாதி வரி கொடுப்பார்கள். எந்தப் பூஜை நடந்தாலும் அதில் அவர்களுக்குரிய ஒரு பங்கு அவர்கள் வந்தாலும் வராவிட்டாலும் கொடுக்கப்படும்.

**திருமணமான பெண்கள் தந்தையின் குல தெய்வத்தை வணங்குவார்களா? கணவன் வீட்டு குலதெய்வத்தை வணங்குவார்களா? தலக்கட்டுவரி எந்தக் குடும்பம் சார்பாக வாங்கப்படுகிறது?**

கணவன் வீட்டு குல தெய்வத்தையும் வணங்குவார்கள். தாய் தந்தையின் குல தெய்வத் தையும் வணங்குவார்கள். தாய், தந்தை வீட்டுக் குலதெய்வத்திற்குப் பாதிவரி கொடுப்பார்கள். வணங்குவதற்கும் வரி கொடுப்பதற்கும் பெண்களுக்கு உரிமை உண்டு.

**குல தெய்வத்திற்கு மற்ற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களிடம் வரி வாங்கப்படுமா?**

பங்காளியிடம் மட்டும்தான் வரி வாங்கப்படும். மற்ற சமூகத்தினரிடம் வாங்கப்படுவது நன் கொடையாக மட்டுமே கணக்கு வைக்கப்படும். குல தெய்வத்திற்குச் சம்பந்தப்பட்ட பங்காளிகளிடம் மட்டுமே வரி வாங்கப்படும்.

**தேவேந்திர வேளாளர்கள் அனைவரும் ஒன்று சேர்வது மார்நாட்டில் தானா? வேறு எங்கும் சேருவீர்களா?**

மார்நாட்டில் கோவில் விழா மாசி மாதம் வளர்பிறையில் பவுர்ணமியில்தான் கும்பிடுவோம். அன்று அனைவரும் ஒன்று சேர்வோம். அவரவர் தங்கள் வேண்டுதல்களை செய்வார்கள். நடத்துவது மார்நாட்டுக்காரர்கள்தான்.

**கோவில் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது?**

அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. பூஜை செய்வது எங்கள் பங்காளிகள்தான்.

**மார்நாட்டு கருப்பணசாமியை வணங்கும் மக்கள் தொகை எவ்வளவு?**

மார்நாட்டில் 300 பேர்தான் இருப்பார்கள். ஆனால் வழிபடும் மக்கள் தென்தமிழகம் முழுக்க 4, 5 இலட்சம் பேர் இருப்பார்கள்.

**தேவேந்திர குல வேளாளர் மக்களுக்கு மட்டுமான குல தெய்வமா?**

ஆம். தேவேந்திர குல வேளாளர் சமூக மக்களுக்கான குலதெய்வம்தான். ஆனால் மற்ற மக்கள் வேண்டுதல் செய்தல், நேர்த்திக்கடன்

செய்தல் போன்றவை செய்யலாம். சொத்து மார்நாட்டில் இருக்கு. அங்கு இருப்பவர்கள் நிர்வாகம் செய்கிறார்கள்.

## மதுரை வீரன்

எங்கள் இனத்து ஆட்கள் நான்கைந்து தலைமுறைக்கு முன்பு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்தல் மற்ற வழக்குகள் ஆகியவைக்கு மதுரை கோர்ட்டுக்குத்தான் செல்ல வேண்டும். வெள்ளைக்கார துரை தான் நீதிபதி. மதுரைக்கு நடந்தே செல்வார்கள். தாமரைப்பாடி வழியாக பாலமேடு சென்று விடிவதற்கள் மதுரை சென்று விடுவார்கள், அப்படி செல்லும் போது வனாந்தரத்தில் நட்டநடு இரவில் செல்கிறார்கள். நிலா வெளிச்சம், தலையில் உருமாள் கட்டி ஒருவர் பின்தொடர்ந்து வருவதைப் பார்த்து யார் என கேட்கிறார்கள்.

அதற்கு அந்த உருவம் டேய், நான் உங்களோடு இருப்பேன், நீ போகும் காரியம் ஜெயிக்குமடா. தைரியமாக போங்கடா எனக் கூறி நான் தான் மதுரை வீரன். என்னை உங்கள் வீட்டில் வைத்து பூஜை செய்யங்கள். உன் குடும்பம் நல்ல செழிப்பாக இருக்கும் என கூறியதாக முன்னோர்கள் சொல்வார்கள்.

அதன் பிறகு எங்கள் குல தெய்வங்களோடு மதுரை வீரனையும் வைத்து வணங்க ஆரம்பித்து விட்டார்கள். மதுரைவீரனுக்கு ஆடு, கோழி, பன்றி ஆகியவற்றை வளர்த்துப் பலி கொடுப்பார்கள். எங்கள் பாட்டியோட பாட்டி காலத்தில் வீட்டில் வளர்க்கும் பன்றியை அழைத்தால் தானாக பின் செல்லுமாம். தீருநீர் போட்டவுடன் தானாக காலை நீட்டி படுத்துக் கொள்ளுமாம் பூசாரி வெட்டி பலி கொடுப்பாராம்.

முதல் நாள் கருப்பணசாமிக்கும், மறுநாள் மதுரைவீரனுக்கும் பூஜை நடக்கும். இரவு 12 மணிக்கு மதுரை வீரனுக்கு பூஜை செய்வார்கள்.

மதுரையில் எங்கள் இன மக்கள் வழிபாட்டில் பன்றிக் கறியை வெட்டி பூஜை கொடுத்து மேலே தூக்கி எறிந்தால் கீழே வராதாம். இன்றும் நடக்கிறது.

**மார்நாட்டிற்கு மாசி மாதம் பூஜை செய்ய செல்லும் போது என்ன என்ன கொண்டு செல்வீர்கள்? சாலையூர் பூசாரி உங்களுடன் வருவாரா?**

பூசாரி வர மாட்டார், அங்கே இருக்கும் பூசாரி பார்த்துக் கொள்வார். இங்கே கோவில் கும்பிடு வைத்துவிட்டால் இங்கே உள்ள பூசாரி போய் மார்நாட்டிலிருந்து தீர்த்தம் எடுத்து வருவார்கள். பூஜைக்கு 16 வகையான பூஜை பொருட்கள் எடுத்துச் செல்வோம். மேலும் ஆடு, கோழி போன்றவைகளையும் கொண்டு செல்வோம்.

பெட்டி முன்னோர் காலத்திலிருந்து இருக்கிறது. அதில் பெண் தெய்வத்திற்கான நகை ஆடைகள் இருக்கும், இப்பொழுது நகையெல்லாம் கிடையாது. அருவாள், சந்தனத்தடி எழுமிச்சைபழம் ஆகியவை மட்டும் இருக்கும்.

- 10 ஆம் பக்க தொடர்ச்சி

அப்படி செய்தால்தான் உன்னுடைய மாடு, ஆடு எல்லாம் நன்றாக இருக்கும் என்று சொல்லப் பட்டது. அதன் காரணமாக கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 1½ கிலோ மதிப்பில் வெள்ளி யினாலான முக உருவத்தைச் செய்து கொடுத் தார்கள்.

**கவுண்டர் சமூகத்தில் காடை குலத்தைச் சேர்ந்தவர்கள் உங்களுடைய தெய்வமான வீரமாத்தியை வழிபடு கிறார்களா?**

இல்லை. அவர்கள் குலம் காடை குலமாக இருந்தாலும் அவர்களின் குல தெய்வம் வேறு. பொடாரப்பன், கண்ணியம்மை என்பது அவர்களின் குல தெய்வம். இந்த கோவில் காங்கேயம் அருகே காடையூரில் உள்ளது.

**உங்கள் கோவிலை கட்டி எத்தனை ஆண்டுகள் ஆகின்றன? அதற்குண்டான செலவுகளை யார் ஏற்றுக் கொண்டார்கள்?**

கோவில் கட்டி 13 வருடமாகிறது. கோவில் செலவுகள் எல்லாம் கோவிலைச் சார்ந்தவர்களின் குடும்பங்களுக்கு மாங்கல்ய வரியாக 2000 ரூபாய் வசூல் செய்யப்பட்டது. அந்தப் பணத்தை வைத்துத் தான் கோவில் கட்டப்பட்டது. கோவில் கட்டுமானச் செலவு, கும்மாபிஷேக செலவு மற்றும் ஐயருக்கு கொடுக்கின்ற பணம் கும்பாபிஷேகம் முடிந்து 48 நாட்கள் நந்த தீபம் எரியும். அந்தக் கால கட்டத்தில் தினமும் பூஜை செய்வதற்கும் ஐயர் அல்லது பண்டாரம் வந்து பூஜை செய்வார். அனைத்துமே வசூல் பணத்தில்தான் நடக்கும்.

**கோவில் பணி தொடங்குவதற்கு முன்பு யாரிடமாவது ஆலோசனை செய்தீர்களா? கும்பாபிஷேகம் ஐயரை வைத்து நடத்தினிர்களா? அல்லது உங்கள் சமூகத்தைச் சார்ந்தவர்கள் கும்பாபிஷேகம் செய்தார்களா?**

கோவில் பணி தொடங்குவதற்கு முன்பு ஐயரிடம் போய் நல்ல நாள் பார்த்து முடிவு செய்வோம். கட்டுமானப்பணி முடிந்தவுடன் ஐயரை வைத்து கும்பாபிஷேகம் செய்து கலச பூஜை செய்து அம்மனுக்கு கண்திறந்து விடுவார்கள். இதற்கு சுமார் 10,000 ரூபாய் முதல் 20,000 ரூபாய் வரை செலவாகும். 48 நாட்கள் பூஜை நடைபெறும். 48 நாட்கள் நந்த தீபம் எறியும். அனைத்து நாட்களும் ஐயருக்குப் பூஜைக்குப் பணம் கொடுக்க வேண்டும். 48 நாட்கள் முடிந்த பின்புதான் நமது குலத்தைச் சார்ந்தவர் களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்படும்.

**இந்த கோவிலைச் சார்ந்தவர்கள் வெளிநாடுகளில் வசிக்கிறார்களா? வேறு மதங்களில் உள்ளார்களா?**

வெளிநாடுகளில் இருக்கிறார்கள். வரி கொடுப்பார்கள். நன்கொடை கொடுப்பார்கள். வெளிநாடுகளிலிருந்து ஊருக்கு வந்தால் கண்டிப் பாக குலதெய்வம் கோவிலுக்கு வருவார்கள்.

அதே போல் கிறிஸ்த்துவ மதத்திற்கு மாறியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கோவில் விசேஷத்தின் போது வரி கொடுப்பார்கள். நாங்கள் அவர்களை வற்புறுத்துவது இல்லை. விருப்பத்தின் பேரில் அவர்களாக கொடுக்கிறார்கள்.

## கள்ளர்களின் குலதெய்வங்கள்:

# முதலக்குளம் கருப்பசாமி

**உங்கள் குலதெய்வத்தைப் பற்றிச் சொல்லுங்க?**

எங்கள் குலதெய்வத்தின் பெயர் முதலக் குளம் கருப்பசாமி, இந்தக்கோயில் உசிலம்பட்டிக்கு பக்கத்தில், கப்ஸா என்ற ஊருக்கு அருகில் முதலக் குளம் என்ற இடத்தில் உள்ளது, இடத்தின் பெயரே சேர்த்து முதலக்குளம் கருப்பசாமி கோயில் என்று சொல்வோம். பக்கத்திலேயே பதினெட்டாம்படி கருப்பசாமி கோயிலும் இருக்கு, அதனால் பதினெட்டாம்படி கருப்பசாமி கோயில்னு கூட ஒரு சிலர் சொல்வாங்க.

**குலதெய்வம் என்பது சாமியா? அல்லது மனுசனா? அதைப் பற்றிய வரலாறு இருந்தா சொல்லுங்க?**

முதலில் இந்தக் கோயிலுக்கு 800 வருடப் பாரம்பரியம் இருக்கு. தஞ்சைப் பகுதியிலிருந்து எங்கள் மூதாதையர்கள் பிழைப்புத்தேடி கொஞ்சம் கொஞ்சமாக பாசனப் பகுதியைத் தேடி நகர்ந்து கொண்டே வராங்க. அப்ப இங்க பாண்டிய மன்னர் களின் ஆட்சி நடந்துகொண்டிருந்தது. வந்த கூட்டத்தில் ஒரு சிலர் அழகர் மலைப் பகுதியில் தங்கி விடுகிறார்கள். எங்க மூதாதையர்களில் ஒருவரான பல்லாக்கு ஒச்சாத்தேவர் பாண்டிய மன்னரிடம் வேலை செய்துள்ளார். மன்னரின் ஆலோசானைப் படி இந்தப் பகுதியில் (உசிலை) எங்கள் மூதாதையர் கள், பல்லாக்கு ஒச்சாத்தேவர் தலைமையில் குடியேறி விவசாயம் செய்து பிழைத்தார்கள் என்பது நானறிந்த வரலாறு.

**குலதெய்வ விழா எங்கே, எப்படி, எப்பொழுது, யாரால் நடைபெறும் அதைப் பற்றிச் சொல்லுங்க?**

குலதெய்வ வழிபாடு வருசம் வருசம் மாசிப்பச்சை சிவராத்திரி அப்ப நடக்கும். மொத்தம் மூணு நாள் நடக்கும். வேற தனிபட்டநாள் கிடையாது. விழாவுக்கு ஒரு மாதத்திற்கு முன்பே அந்த ஊரில் உள்ள பரம்பரைப்பூசாரி மற்றும் எங்கள் குலதெய்வத்தை வழிபடும் எங்கள் சொந்தங் கள் அந்த ஊரிலேயே அல்லது அதற்கு அருகில் இருப்பவர்கள் ஒரு 40 அல்லது 50 பேர் சேர்ந்து முடிவெடுப்பார்கள்.

அந்தக் கூட்டத்தில் என்ன என்ன நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டுமென்பதையும் முடிவு செய்வார்கள். உதராணமாக, நாடகம் போடுவது, கரகாட்டம், எத்தனை கிடாய் வெட்டுவது, பந்தல், தோரணம் போடுவது, இதற்கான செலவுக்கு தலக்கட்டுவரி எவ்வளவு வசூலிப்பது, யாரெல்லாம் வசூலிப்பது என்பது பற்றியும் முடிவு செய்வோம். முடிவு செய்தபின் நோட்டீஸ் அடித்து ஒரு பதினைந்து நாட்களுக்கு முன் எங்கள் குலதெய்வம் கும்பிடுகிறவர்களின் வீடுகளில் கொடுத்து தலக்கட்டுவரி 5000 அல்லது 10000 வசூலிப்போம்.

**விழாக்கமிட்டியில் பெண்கள் யாராவது இருப்பாங் களா? அவர்கள் ஏதாவது யோசனை சொல்லு வாங்களா?**

விழாக்கமிட்டின்னு, தனிப்பட்டமுறையில் இல்ல. ஆனால் பூசாரிவகையறா வீட்டுப் பெண்கள், அப்புறம் கோயில் முக்கிய வேலையில் இருக்கிறப் பெண்கள் (சாமி பூசைக்கு உதவுபவர்கள், சாமி ஆபரணப்பெட்டி தூக்கிவருகிறவர்கள் பின்னால் சாமியாடும்பெண்கள்) இவங்க ஏதாவது யோசனைச் சொன்னாக் கேட்டுக்குவோம்.

**நீங்கள் தலக்கட்டுவரின்னு சொல்லும்போதுதான் ஞாபகம் வந்தது, பெண்கள்கிட்ட தலக்கட்டு வரி வாங்குவீங்களா?**

வாங்குவோம். ஆண் வாரிசு இல்லாத வீட்டில் மட்டும் பெண்கள்கிட்ட வாங்குவோம், என்ன மத்தவங்ககிட்ட 1000 ம் வாங்கினால் இவுங்ககிட்ட 500 வாங்குவோம். 500 வாங்கினால் 200 அவ்வளவு தான். சில நேரம் குடுத்தத மட்டும் வாங்கிக்கொள்வோம். ரொம்ப கட்டாயப்படுத்த மாட்டோம்.

ஆண்கள் உள்ள வீட்டில் பெண்களுக் கென்று தனிவரி விதிக்க மாட்டோம்.

**உங்க சாதியைச் சேர்ந்த, ஆனால் வேற சாமிய கும்பிடு பவர்களிடம் தலக்கட்டு வரி வசூலிப்பிங்களா?**

கண்டிப்பாக மாட்டோம். அவர் எங்க சாதியாக இருந்தாலும் வேற சாமி கும்பிடுகிறவர் களாக இருந்தால் வரி வசூலிக்கமாட்டோம். இது பங்காளிகளின் சாமி, பங்காளிகளாச் சேர்ந்து நடத்துறது. வேற சாமி கும்பிடுகிறவர்கள் எங்கள் மாமன், மச்சானா கூட இருக்கலாம். மாமன், மச்சானக் சாப்பிடக்கூப்பிடுவோம், ஆனால் வரிகேட்கமாட்டோம்.

இது எங்கள் கோயிலில் மட்டுமல்ல, பக்கத்தில் பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டாமங்கலம் சுத்துபட்டு எல்லா இடத்திலேயும் ஒரே நாள் மாசிப்பச்சைக்குத்தான் திருவிழா நடக்கும். எல்லாக் கோயிலும் ஒரே மாதிரியான முறையைக் கடைப் பிடிப்பாங்க. இது ஏன்? எங்க குலசாமி இருக்கிற இடத்துக்கு வந்துபோக முடியாத எங்க பங்காளிக, எங்கள் கோயிலுக்கு வந்து, கோயில் மண்ண ஒரு கைப்பிடி எடுத்து, அவுங்க இருக்கிற இடத்துக்குப் பக்கத்தில் மண்ணப் போட்டு கோயில் எழுப்பி சாமி கும்பிடுவாங்க. அவுங்ககிட்ட கூட நாங்கள் தலக் கட்டுவரி வாங்க மாட்டோம். எங்க மண்ணுக்கு வந்து எங்க கோயில் சாமிய கும்பிடுகிற பங்காளிககிட்ட மட்டும் தான் நாங்க வரி வாங்குவோம்.

**உங்க குலசாமி கோயிலுக்கு எப்பல்லாம் போவீங்க, உங்க வாழ்க்கைக்கும் உங்க சாமிக்கும் எப்படியெல்லாம் தொடர்பிருக்கு?**

குழந்தைக்குப் பிறந்த முடிஎடுக்க, காதுகுத்த, குலதெய்வக்கோயிலுக்குப் போவோம். திருமணம் என்றால் முதல் பத்திரிக்கை எடுத்து சாமிக்குத்தான் வைப்போம். எந்த விசேசமானாலும் முதலில் குலதெயவத்தை வழிபட்டுத்தான் தொடங்குவோம். வீட்டில் முதலில் குழந்தை பிறந்தால் ஒச்சாத்தேவர் என்றும், பெண் குழந்தை முதலில் பிறந்தால் ஒச்சாண்டம்மா என்றும் இரண்டாவது பையனுக்கு காசிமாயன், சங்கிலிக்கருப்பு என்றும் பெயர் வைப்போம். எல்லோரும் அழைப்பதற்கு வேறு பெயரைப் பயன்படுத்துவோம். அப்பத் தான் பெயர்க்குழப்பம் ஏற்படாது.

**குலதெய்வ வழிபாட்டுக்கு உங்கள் பங்காளிகள் எல்லோரும் வருவார்களா?**

90 சதவீதம் வந்துவிடுவார்கள். தவிர்க்க முடியாமல் குடும்பத்தில் ஏதாவது இறப்பு ஏற்பட்டால் மட்டும் வரமாட்டார்கள். வரவேண்டும் என்று சொல்வோம். வராவிட்டாலும் வரியை வசூலித்துவிடுவோம்.

**வேறு ஜாதிகளுக்கு உங்கள் குலதெய்வ கோயிலில் ஏதேனும் தொடர்புண்டா?**

கண்டிப்பாக இல்லை, வழிபடமட்டும் தான் அனுமதிப்போம், பக்கத்தில் உள்ள பதினெட்டாம் படிக் கருப்பசாமி கோயிலுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் உள்பட அனைவரும் வழிபட வருகிறார்கள்.



கோயிலில் நாங்கள் மட்டும்தான் முடிவெடுப்போம். மற்றவர்களுக்கு வழிபட மட்டும்தான். உரிமை.

**உங்கள் கோயிலில் உங்களின் குலதெய்வ சாமியைத் தவிர வேறு சாமிகள் உண்டா? அப்படிருந்தால் அந்தச் சாமிக்கும், உங்கள் குலதெய்வத்துக்கும் என்ன தொடர்பு?**

சிவன், பார்வதி, இரண்டு தெய்வங்கள் உண்டு, எங்கள் மூதாதையர்கள் தஞ்சைப் பகுதி யிலிருக்கும் போதே அவர்கள் வணங்கிய தெய்வங்கள் இவர்கள். எங்கள் முன்னோர்கள் இங்கே வந்தபிறகு அவர்களை (சிவன், பார்வதி) வணங்கிவந்துள்ளார்கள். அதன் பிறகு எங்கள் முன்னோரையும், முன்னோரின் தெய்வத்தையும் நாங்கள் வழிபடுகிறோம். சிவனை அய்யன் என்றும், பார்வதியை பூமாங்கினி, கங்காவை, தேமாங்கினி என்றழைத்து வழிபடுகிறோம். எங்களின் முதல் மரியாதை எப்போதும் எங்கள் குலதெய்வத்துக்கே.

**உங்கள் குலதெய்வ வழிபாட்டில் பார்பனர்களின் யோசனையைக் கேட்பதுண்டா?**

பங்காளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து எங்கள் மூதாதையருக்குக் கோயில் கட்டும்போதும் மட்டும் அவர்களைக் கலந்து நல்லநாள் குறித்தோம். பின்னர் கும்பாபிசேகம் அவர்களை வைத்து நடத்தி னோம். வேறு எதற்க்கும் அவர்களை தொடர்பு கொள்ள மாட்டோம்.

**இறுதியாக ஒரு கேள்வி?**
**குலதெய்வ வழ்பாடு எதற்காக?**

எங்கள் மூதாதையர்கள் இந்த இடத்திற்கு வந்து வாழ்க்கையை நடத்தி ஒரு பெரும் தலை முறையை உருவாக்கி வைத்துள்ளார்கள். நாங்கள் மட்டுமல்ல எங்களைப் போன்ற எத்தனையோ கூட்டங்கள் தங்களின் தலைமுறையின் காரண கர்த்தர்களுக்குக் குலதெய்வ வழிபாட்டின் மூலம் தான் நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

**அதுமட்டும்தானா?**

அதுமட்டுமல்ல, உலகத்தின் எந்த மூலையிருந்தாலும் எங்கள் சாதியாட்களை அடையாளம் காண்பதற்கு இந்த குலதெய்வ வழிபாடுதான் பயன்படுகிறது. ஒருவரை நீ என்ன சாதி என்று கேட்பதற்கு பதிலாக, எந்தக் கோயில் கும்பிடுறீங்க?... ஓ அப்படியா?... அட நம்ம பங்காளி .இல்லையென்றால் ஏய் நம்மெல்லாம் மாமன், மச்சானப்பா? என்று குலதெய்வ வழி பாட்டின் மூலம் அடையாளம் காண்கிறோம்.

## தேவாங்கச் செட்டியார்களின் குலதெய்வங்கள்:

# ஸ்ரீ சவுடேஸ்வரி அம்மன்

தேவாங்கச் செட்டியார்கள் என்ற ஜாதியினர் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். வீட்டு மொழியாகக் கன்னடம் பேசுகின்றனர். தெலுங்கு போசு பவர்களும் இருக்கிறார்கள். எந்த மொழி பேசினாலும் குல தெய்வம் ஸ்ரீசவுடேஸ்வரி அம்மன் மட்டும் தான். சில இடங்களில் கருப்புசாமியையும், காமாட்சி அம்மனையும் வணங்குகிறார்கள். இவர்களுக்கு 700 ரிஷி கோத்திரங்கள், 10 ஆயிரம் குலங்கள், 5 ஜகத்குரு பீடங்கள் உள்ளன. அனை வருக்கும் மூலகர்த்தா தேவல மாமுனிவர் என்ற முனிவர் ஆவார். தமிழ்நாட்டில் உள்ள குலதெய்வ வழிபாட்டு முறையும், கன்னடம் பேசும் தேவாங்கச் செட்டியார்களின் குலதெய்வவழிபாட்டு முறையும் ஒன்றாகவே இருக்கிறது.

**உங்கள் குலதெய்வத்தைப் பற்றிக்கூறுங்கள்**

*ஸ்ரீசவுடேஸ்வரியம்மன் தான் எங்கள் குலதெய்வம். திண்டுக்கல் மாவட்டத்தில் சித்தையன் கோட்டைப் பேரூராட்சியில் கோவில் உள்ளது. இது தேவாங்கர் குலத்தைச் சேர்ந்த சின்னுக் கொட்லார், லத்திகாரர், கப்பலேறு உள்ளிட்ட பல்வேறு வம்சத் தினருக்குக் குலதெய்வக் கோவில் உள்ளது.*

*சின்னாளபட்டி, சித்தையன்கோட்டை, திண்டுக்கல், திருப்பூர், மற்றும் தமிழகத்தின் பல பகுதியிலிருந்தும், பெங்களூர் போன்ற வெளி மாநிலங்களிலிருந்து எங்கள் வம்சங்களைச் சேர்ந்த அண்ணன், தம்பிமார்கள் சிவராத்திரியன்று குல தெய்வ வழிபாடு நடத்த இத்திருக்கோவிலுக்கு வருகின்றனர்.*

**உங்கள் குலதெய்வத்தின் கதை உங்களுக்குத் தெரியுமா?**

*முன்னொரு காலத்தில் கப்பலேறு வம்சத்தைச் சேர்ந்த அழகானப் பெண்ணைக் கண்டு அப்பகுதி ஜமீன்தார் மயங்கியுள்ளார். அப்பெண்ணை அடைதல் வேண்டி பல்வேறு முயற்சிகளில் இறங்கி யுள்ளார். இந்நிலையில் ஜமீன்தாரிடமிருந்து அப்பெண்ணைக் காப்பாற்ற ஏற்பட்ட சண்டையின் பொழுது அப்பெண்ணின் தலை வெட்டப்பட்டு, கொல்லப்பட்டதாகவும், அப்பெண்ணின் தலையையே கப்பலேறு வம்சத்தினர் இன்றும் வணங்கி வருவதாகவும் கூறகின்றனர்.*

*முதன் முதலில் அப்பெண் தெய்வத்தின் தலை வெட்டப்பட்ட காட்டில் சென்று முன்னோர்கள் வணங்கி வந்ததாகவும், பின்னாளில் சித்தையன் கோட்டையில் கோவில் எழுப்பி வழிபட்டு வருவதாகவும் கூறகின்றனர்.*

**தலக்கட்டு வரி யாரிடம் வாங்குவீர்கள்? பெண்களிடம் வாங்குவீர்களா?**

*தலக்கட்டு வரி பெண்களிடம் வாங்குவது இல்லை. கணவன் இறப்புக்குப்பின் பெண்களிடம் வாங்குவது உண்டு. ஆண்களிடம் மட்டும் வரி வாங்குவோம்.*

**குலதெய்வத்துக்கும் உங்களுக்கும் அன்றாட வாழ்க்கையில் ஏதாவதுதொடர்பு உள்ளதா?**

*வீடு கட்டுவது, திருமணம், தொழில் தொடக்கம், வேலையில் சேருவது என்றாலும் முதலில் குலதெய்வக் கோவிலில் அர்ச்சனை செய்து பின் தொடங்குவார்கள். குழந்தைகளுக்கு முதல் மொட்டை எடுப்பதும், காதுகுத்துவதும் குல தெய்வக்கோவிலில் தான் நடைபெறும்.*

**உங்கள் குலயெய்வத்திற்கும், சிவன், விஷ்ணு போன்ற பெருந்தெய்வங்களுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?**

*தேவாங்கர்கள், இராமலிங்கேசுவரரையும் ஸ்ரீசௌடேஸ்வரி யையும் சேர்த்தே வணங்க வேண்டும் என தேவல முனிவரின் ஏழாவது அவதாரமான தேவதாஸ மையனின் காலத்தில் தான் அருளப்பட்டது. இது இரண்டாம் நூற்றாண்டு. அதற்கு முன்பு வரை ஸ்ரீ சௌடேஸ்வரி தேவி மட்டுமே வணங்கப்பட்டு வந்தார். சௌடேஸ்வரி தேவியாக இருந்த எங்கள் அன்னை இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்புதான் ஸ்ரீஇராமலிங்க சௌடாம்பிகை என்று வணங்கப்படுகிறார். (ஆதாரம்: தேவாங்க சிந்தாமணி, இரண்டாம் பதிப்பு- பக்கம் எண்-150-701-702)*

- இதன் தொடர்ச்சி 30 ஆம் பக்கம்

# இந்து மதத்தையும்– மனுநீதியையும் பாதுகாக்கும் குலதெய்வங்களை ஒழிப்போம்!



**தோழர்கள்:**
**பிரியா – சண்முகம்**
**நேர்காணல்.**

இந்துமத, ஜாதி, கடவுள் வழிபாடுகள், குலதெய்வ வழிபாடுகள், கிராமத் திருவிழாக்கள் ஆகிய அனைத்தையும் புறக்கணித்து வாழும் திருப்பூர் தோழர்கள் பிரியா – சண்முகம் அவர்களுடன் ஓர் நேர்காணல்.

**தோழர் சண்முகத்திடம்:**

என்னுடைய பெயர் சண்முகம். நான் பிறந்து வளர்ந்தது திருப்பூர். மாஸ்கோ நகரில் வசிக்கிறேன். எனது துணைவியார் ப்ரியா. எங்கள் குழந்தையின் பெயர் புரட்சிக்கொடி. எங்க தாத்தாவின் பூர்வீகம் தஞ்சாவூர். பாட்டி உடைய பூர்வீகம் சேலம். எங்க அப்பா பிறந்த ஊர் சேலம் சீலநாயக்கன்பட்டி. என்னுடைய அம்மா பெயர் ஜெயா, அப்பா பெயர் மாணிக்கம். எங்க அப்பா, அம்மா 45 ஆண்டுகளுக்கு முன்பே தொழில் சம்பந்தமாகத் திருப்பூருக்குக் குடிப்பெயர்ந்து வந்தார்கள்.

**நமது பெரியவர்கள் ‘குலதெய்வத்தைக் கும்பிட்டால்தான் பல தெய்வமும் நல்ல வழியைக் காட்டும்’ என்று சொல்கிறார்கள்? இது பற்றி உங்கள் கருத்து?**

நான் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தவன். எங்களது குலதெய்வம் அய்யனார். என்னைப் பொறுத்தவரைக்கும் இந்து மதம் அப்படி சொல்லுது. இந்துமதம் உயிர்த் துடிப்போட இருக்கிறதுக்கு குல, கோத்திரங்கள் தான் முதல் படியே.

ஒருகுலத்திற்கு ஒருநீதி சொல்லும்படி மனுநீதிப்படிதான் வாழணும் அப்படின்னு சொல்லித்தான் இந்து மதத்தின் ஆதாரமான மனுதர்மம் சொல்லுது. இந்தக் குலதெய்வத் தினுடைய வழிபாட்டு முறையே சாதியைப் பாதுகாக்கும் முக்கிய இடமாகும். நம்மளுடைய உழைக்கும் மக்களிடையே பணத்தை வீண் செலவு செய்வதற்கான விழாக்களாகத் தான் இருக்குது.

அதாவது,சிறு தெய்வமாக இருக்கும் குல தெய்வத்தில் தொடங்கி பெருந்தெய்வம் என்று சொல்ற திருப்பதி, காசி, இராமேஸ்வரம் வரைக்கும் வருடம் முழுவதும் தெய்வ வழிபாடுகளைத் தொடர்ந்து செய்து கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், எந்த உழைப்பாளியுடைய கஷ்டமும் தீர்ந்ததாக இல்லை. வேலையற்ற சோம்பேறி களுடைய பழமொழி தான் நம்மள முட்டாள் ஆக்குது.

**குலதெய்வ வழிபாட்டுக்கு மாங்கல்ய வரி, குலவரி, குடும்பவரின்னு கேட்டு வந்து இருக்காங்களா? நீங்க வரி கொடுத்து இருக்கீங்களா? கொடுக்காத பட்சத்தில் அவர்கள் எப்படி எடுத்துக்கிட்டாங்க?**

நான் பெரியாரிஸ்ட். என்னிடம் இப்படிக் கேட்பதே தவறு. ஆனால் இப்போது நிலைமை இப்படித்தான் உள்ளது. அம்பேத்கரிஸ்ட், பெரியாரிஸ்ட் என்று சொல்லிக் கொள்வோம். ஆனால், நம் சொந்த வாழ்க்கையில் இந்துமதம் சொல்ற எல்லாக் கடமைகளையும் தவறாம செய்றோம்.

ஒரு பெரியார் தொண்டன் அல்லது அம்பேத் கரிஸ்ட் என்றால் அவரிடம் வரி கேட்கவே கூடாது என்ற எண்ணத்தை நாம உருவாக்கல. முஸ்லீமாக உள்ள ஒரு பாய்கிட்ட போய், எந்தக் குலதெய்வம் கும்பிடறதுக்காகவாவது வரி கேப்பாங்களா? அவங்க வேற, இந்துக்கள் வேறன்னு சராசரி மக்களே புரிஞ்சு வச்சிருக்காங்க. ஆனா, நம்மகிட்ட வந்து வரி கேக்குறாங்கன்னா நாம இன்னும் நம்ம தலைவர்கள்

வழிகாட்டின மாதிரி வாழ்ந்து காட்டலைன்னு தானே அர்த்தம். சும்மா வாயில ஜாதிய ஒழிக்கணும்னா அது ஒழிஞ்சிருமா?

என்னைப் பொறுத்தவரைக்கும் குலதெய்வ வழிபாட்டை சுத்தமா மறுத்து வெளியே வந்துட்டேன். அப்பா பிறந்த ஊரான சீலநாயக்கன் பட்டிக்குப் போறதுகூட இல்லை. குறிப்பாக கிராம விழாக்களுக்கும், குலதெய்வ வழிபாடுகளுக்கும் எங்ககிட்ட வரி கேட்டு யாரும் வருவதில்லை. நாங்க திருப்பூர் நகரத்தில வசிக்கிறதால எனக்கு வரித் தொந்தரவுகள் முற்றிலும் இல்லை. ஆனாலும் இந்த மாதிரியான வரிகள் கொடுக்காததால் அந்தந்த கிராமங்களில் வசிக்கும் மக்களுடைய கஷ்டங் களைப் பார்த்து நான் ரொம்ப வேதனைப்பட்டு இருக்கேன்.

அது எப்படின்னா கோவில் கட்டி, குலதெய்வ வழிபாட்டு வரின்னு ஒரு குடும்பத்துக்கு 6000 முதல் 10,000 வரை வசூலிப்பார்கள். இதில் 100 ரூபாய் குறைவாக இருந்தாலும் அதை விழா அன்று மைக் செட்டில் தெரிவிப்பாங்க. அது ரொம்ப ஊர் அறிய நம்மள அவமானப்படுத்துற மாதிரி இருக்கும். எதுக்குடா இந்த அவமானம்னு சொல்லி 100-க்கு 10 ரூபாய் வட்டிக்குக் கூட வாங்கிக் கொடுத்தவங்களை நான் பார்த்து இருக்கேன்.

நம் குலத்தையே காப்பாத்துற கடவுள்னு சொல்றாங்க. ஒரு குலத்துக்காரங்கன்னா அண்ணா, தம்பி, சித்தப்பா, பெரியப்பா, பங்காளிகள் என்று சொல்லுவாங்க.ஆனாலும் கோயில் நிர்வாகமே அவர்களாக இருந்தாலும் நம்மைக் கேவலப் படுத்துவதை அவர்கள் நிறுத்த மாட்டார்கள். சொல்லப்போனால் ஒரு குலத்துக்காரங்க ஒரே கிராமத்துக்குள்ள வசிக்கரவங்களா இருந்தா இன்னும் அடிப்படை வசதிகளுக்குக்கூட தடை விதிப்பாங்க வரி கட்டலையின்னா.

**தோழர் நீங்க குலதெய்வ வழிபாடுகள் செய்யறது இல்லை சரி. உங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களுடைய குலதெய்வ வழிபாடுகளுக்குப் போய் இருக்கீங்களா? ஏதாவது அனுபவம் இருந்தா சொல்லுங்க?**

நான் பெரியார் அமைப்புக்கு வருவதற்கு முன்பு, ஜட்டி கம்பனியில வேலை பாத்துட்டு இருக்கும்போது இரண்டு நண்பர்களுடைய குலதெய்வ வழிபாட்டு கிடா வெட்டு விருந்துக்கு நான் போயிருக்கேன். அந்த விழா நிறைவுல ஒருத்தருக்கு ஒருத்தர் அடிச்சுக்குவாங்க .என்ன காரணமுன்னு பார்த்தா... மொய்ப் பணம் வைக்காத்தாலயும், கறி விருந்துல சரியா கவனிக்காத காரணமா ஒருத்தருக்கு ஒருத்தர் அடிச்சுக்குவாங்க.

**உங்களுடைய குழந்தைக்கு முதல் முறையாக மொட்டை அடிச்சது குலதெய்வக் கோயிலிலா?**

நான் என்னுடைய குழந்தைக்கு முதல் மொட்டை அடித்தது எந்த ஒரு கோயிலுக்கும் போய் அடிக்கவில்லை. குழந்தை பிறந்து 9 - 11 மாதம் மொட்டை அடிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இருந்தார்கள். குழந்தை பிறந்து 9 மாதம் குழந்தையின் பிறப்பு அழுக்கு என்று சொல்வார்கள். அது பொடுகு போல இருக்கும். அது போக வேண்டுமானால் மொட்டை அடிக்க வேண்டும் என்று சொன்னார்கள். எனக்கு அதிலும் உடன்பாடு இல்லை. அது ஷாம்பு அல்லது அரப்புப் போட்டுக் குளிப்பாட்டினால் போய்விடும்.

வீட்டில் இருக்கும் பெரியவர்களின் வற்புறுத்தல்... சரி அதுதான் காரணம் என்றால் கோயிலுக்கு எதற்குப் போய் அடிக்கணும்? நானும் எனது நண்பரும் இருவரும் எனது குழந்தையை அழைத்துக்கொண்டு அருகில் இருந்த சலூன் கடைக்குச் சென்று மொட்டை அடித்துவிட்டு வந்தோம்.

**சலூன் கடையில் மொட்டை அடித்ததால் எதாவது எதிர்ப்பு இருந்ததா?**

ஆமாம். எங்க அம்மா, எனது தாய்மாமன் மற்றும் ப்ரியாவின் உறவினர்கள் அனைவரும் என் மீது கோபப்பட்டார்கள். அதற்கு அவர்களுக்கு விளக்கம் அளித்தேன். குழந்தையைக் காரணமாக வைத்து நான் மொய், சீர், சடங்கு விழாக்களைச் செய்வதாக இல்லை. எனது குழந்தைக்கு நல்ல கல்வியும், தற்காப்பையும் கற்றுக் கொடுப்பதே சிறந்தது என்று நினைக்கிறேன் என்றேன்.

**உங்களுக்குத் தெரிந்த நண்பர்கள், உறவினர்கள் வெளி மாநிலங்களில், வெளி நாடுகளில் வசிக்கிறார்களா? அவர்கள் குலதெய்வ வழிபாடுகளுக்கு வருகிறார்களா?**

அப்படி யாரும் தெரிந்த நண்பர்கள் இல்லை. ஆனாலும் இன்னைக்கு கிராமப்புறங்களில் வசிக்கிற ஒரு குலத்து மக்களில் யாராவது கிறிஸ்தவராக மதம் மாறி இருந்தால்கூட அவர்கள் இன்னும் குலதெய்வ வழிபாடு விழாவிற்கு வரி கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். வணங்கும் தெய்வங்கள் வேறு மதக் கடவுளாக இருந்தாலும் அவர்கள் வரி கொடுப்பதை நிறுத்துவது இல்லை. கோயில் கமிட்டியாரே கூறுவார்கள் நீங்க கோயிலுக்கு வராட்டியும் பரவாயில்லை உங்க குடும்பத்துக்கான வரியைக் கொடுத்துருங்க என்பார்கள். அவர்களும் சரி நமக்கு உறவுக்காரங்க என்று வரியைக் கொடுத்து விடு வார்கள்.

இது எப்படி இருந்தாலும் தற்சமயத்தில்கூட தமிழ் சினிமாவில் கூட நடிகர் ரஜினி நடித்த கபாலி படத்தில் ஒரு காட்சியை வைச்சுஇருப்பாங்க. என்னனா வெளிநாட்டுல போயி வாழ்ந்தாலும் தொழில், கலாச்சாரம் மாறி வாழ்ந்தாலும் நம்ம மதுரைவீரன் குலதெய்வ சாமிக்குப் பொங்கல் வைச்சு, கிடா வெட்டிட்டு வந்தா... எல்லாம் சரியாப்போயிடும்...என்று ஒரு காட்சி வரும்.

நகர மக்கள் குலதெய்வ வழிபாடுகளை மறந்து வாழ்ந்தாலும் இதுபோன்ற திரைப்படக் காட்சிகள் நினைவுபடுத்துகின்றன. எனவே, இதுபோல ஜாதி, மத, கடவுள் வழிபாடுகளைத் தடை செய்வதே சிறந்தது. நமது வாழ்க்கையில் தேவையற்ற பணச்செலவும், சண்டைகளையும் தவிர்க்கலாம்.

**தோழர் ப்ரியாவிடம்:**

என்னுடைய பெயர் பிரியா.எங்க அப்பா பெயர் மோகன்ராஜ், அம்மா வசந்தா. சொந்த ஊர் தஞ்சாவூர் மாவட்டம் வல்லம். நாங்க திருப்பூர் மாஸ்கோ நகரில் தற்போது வசிக்கின்றோம்.

**உங்களுடைய குலதெய்வம் என்ன? உங்களுடைய குலதெய்வ வழிபாட்டுக்குப் போனதுண்டா? அதன் அனுபவத்தை சொல்லுங்க?**

எங்க அப்பாவுடைய குலதெய்வம் மதுரைவீரன். பொதுவா, குலதெய்வ வழிபாடு என்பதே பெண்களைக் கேவலப்படுத்தும் விழாதான். பெண்களை விலக்கி வைக்கும் விழாவாகவே உள்ளது. கோயிலுக்கு வெளியவே நின்று வணங்கும் நிலைதான் உள்ளது. பெண்களே பூஜை செய்து வணங்கும் உரிமை கிடையாது. சில மேற்கு மாவட்டங்களில் பெண்களுக்கும் சரி, தென் மாவட்டங்களில் வசிக்கும் பெண்களுக்கும் சரி அனுமதி கிடையாது.

எங்க தாத்தா சொல்லி இருக்காங்க... கருப்பராயன் சாமி மற்றும் பல சிறு குலதெய்வ வழிபாடுகளிலும் சரி, கிடாய் வெட்டிப் பொங்கல் வைத்து சாப்பிடுவதில்கூட பெண்களுக்கு அங்கு அனுமதி கிடையாது. அங்கு சமைக்கும் உணவுகளை அங்கேயே சாப்பிட்டு முடித்து விட்டுத்தான் வரணும். இல்லையெனில் கொட்டிவிட்டு வருவார்கள். இந்தக் குலதெய்வ வழிபாட்டுல விருந்து படைக்கிறது கறியும், சாராயமும்தான் பயன்படுத்துவாங்க.

**உங்க திருமணத்திற்கு முன்பு நீங்க ஏதாவது கிராமத் திருவிழாவுக்கோ, குலதெய்வ வழிபாட்டுக்கோ போனது உண்டா?**

என் திருமணத்திற்கு முன்னால் கிராமத் திருவிழாவுக்குப் போய் இருக்கேன். அப்ப எனக்கு அந்த கிராமத் திருவிழாவில் ஏற்படும் செலவுகளும், அங்கு நடக்கும் பிரச்சனைகளும் பெருசா எடுத்துக்க மாட்டேன். அப்ப கொண்டாட்ட மனநிலையில் தான் இருந்தேன். தோழர் சண்முகத்தைத் திருமணம் செய்ததற்குப் பிறகு இந்த மாதிரி தேவையில்லா விழாக்களும் பெண்களை இழிவாக்க பயன்படுத்தும் பள்ளிகளாக இருக்கிற குலதெய்வ வழிபாடுகளைப் பத்தியும் சொல்லி இருக்கிறார். அதற்குப் பின்னால் நான் யோசித்து, கிராம விழாக்களையும், குலதெய்வ வழிபாடுகளையும் முற்றிலும் விலக்கிவிட்டோம். எங்களுடைய வாழ்க்கையில் சந்தோசமாகத் தான் இருக்கிறோம். கடன் தொல்லைகள் இல்லாமல் சிக்கனமாக சந்தோசமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

- 27 ஆம் பக்க தொடர்ச்சி

**குலதெய்வக் கோவிலில் பூசாரியாக வருபவர்கள் பரம்பரை பரம்பரையாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் வருவார்களா?**

ஆமாம். அவர்களைச் செட்டிதனக்காரர், பெத்தர் என்ற பெயர்களில் அழைப்போம். செட்டிதனக்காரர், பெத்தர் இவர்கள் பதவி பரம் பரையாக வருவன. வங்குசம் என்று கன்னடத்திலும், இண்டி பேரு என்று தெலுங்கு மொழியிலும் வீட்டின் பெயர் என்று தமிழிலும் சொல்லப்படுவன மூன்றும் ஒன்றே ஆகும்.

**உங்கள் ஜாதியிலிருந்து வேறு மதத்திற்கு மாறியிருக்கிறார்களா? அப்படி மாறியவர்கள் உங்கள் குலதெய்வங்களைப் பின்பற்று வணங்குகிறார்களா?**

கத்தோலிக்க தேவாங்க சங்கம்: சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் தேவாங்க குல மக்களில் சிலர் கிறிஸ்தவர்களாக சத்தியமறையில் சேர்ந்திருக் கிறார்கள் இவர்கள் கோயமுத்துரில் உள்ள கருமத்தம்பட்டி மற்றும் சுற்றியுள்ள ஊர்களில் நெசவுத் தொழில் செய்கிறார்கள். இவர்கள் 1956 ல் மும்பையிலும், 1964-ல் கோவையில் உள்ள கருமத்தம் பட்டியிலும் ‘கத்தோலிக்க தேவாங்க சங்கம்’ என்று ஆரம்பித்து இருக்கிறார்கள்.

இவர்களிலும் தேவாங்க சமுதாய வழக்கப்படி ஊர்ச் செட்டியார்கள் இருக்கிறார்கள். .ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15 ம் தேதி புனித ஜெபமாலை அன்னைக்கு விண்ணேர்ப்புத் திருவிழாவும் , ஆண்டு விழாக் கூட்டமும் ‘பூணூல் விழா’ வைத்து, பூணூல் அணிவதை ஒரு சடங்காகச் செய்து வருகிறார்கள்.

**உங்கள் குலதெய்வக் கோவிலுக்குப் பார்ப்பனர்களை அழைப்பதுண்டா?**

விழாக்காலங்கலிலும் மற்ற தினங்களிலும் பூசை செய்வதற்கும் அர்ச்சனை செய்வதற்கும் தொடர்ந்து ஒரு அய்யரைத்தான் வைப்போம். (அவருக்கு மாதா மாதம் அரிசி மூடையோ, பணமோ கொடுப்போம்.) பின் பெரிய அய்யரைக் கும்பாபிஷேகம் பண்ணும் பொழுதும், விழா சமயத்தில் அலங்கரிப்பதற்கும், பூசைசெய்வதற்கும் வரவழைப்போம்.

**குலதெய்வ விழாவில் பெண்களின் நிலை?**

மூலஸ்தானத்தில் நுழைவதருக்கு பெண் களுக்கு அனுமதி கிடையாது. விழா சமயங்களில் ஆற்றில் தண்ணீர் எடுப்பது, அம்மியில் மஞ்சள் அரைப்பது, அலங்காரம் செய்வது, உரலில் அரிசி இடித்துப் பலகாரம் செய்வது, பொங்கல் வைப்பது போன்ற வேலைகளைச் செய்வார்கள். திருமணத் திற்கு முன்பு அப்பாவின் குலதெய்வம்தான் பெண் களுக்கு. திருமணமான பிறகு, கணவனின் குல தெய்வத்தைத்தான் வணங்குவார்கள்.

**நீங்கள் திருமணம் செய்யும் போது எப்படி முறை பார்ப்பீர்கள்? மாமன், மச்சான் முறையை எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?**

நாங்க கும்பிடுற குலதெய்வத்தையும், ரிஷிகோத்திரத்தையும் வச்சு முறைபார்ப்போம். எங்களுக்கு ‘பாலிதாரு’ என்ற வங்குசத்தினர் மாமன் முறையாக வருவார்கள்.

அதி அசுரன்

## இந்து மதத்தையும் ஜாதியையும் காக்கும்

# நாட்டார் தெய்வங்கள்

நிறுவனமயப்படுத்தப்பட்ட பார்ப்பன இந்து தெய்வங்களுக்கு எதிரான பண்பாட்டைச் சேர்ந்தவை நாட்டார் தெய்வங்கள். இவை பன்மைத்துவம் கொண்டவை. ஆகமங்கள் போன்ற என்ற விதிமுறைகளும் இல்லாதவை. அதிகார மய்யங்கள் போல நம்மை அடக்காமல், அடித்தட்டு மக்களின் நம்பிக்கை சாந்து இயங்குபவை. அவற்றை மூடநம்பிக்கைகளாகக் கூற இயலாது. இராமன், விநாயகன் போன்ற நிறுவன மயப்படுத்தப்பட்ட பார்ப்பனக் கடவுள்களை எதிர்த்த பெரியாரேகூட, இந்த நாட்டார் தெய்வங்களை எதிர்க்கவில்லை. அந்த நம்பிக்கைகளை விமர்சிக்கவில்லை என்பவை போன்ற பல கருத்துக்களை பல அறிஞர்களும், வரலாற்றாளர்களும் தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

அவர்களில் தமிழறிஞர், இனவியல் ஆய்வாளர், பண்பாட்டு ஆய்வாளர் பேராசிரியர் தொ.பரமசிவன் குறிப்பிடத்தகுந்தவர் ஆவார். கல்வியாளர் மட்டுமல்ல, மக்களோடு மக்களாக வாழ்பவர். பண்பாட்டு அசைவுகளை நேரடியாகவும் நன்கு அறிந்தவர். பண்பாட்டுத் தளத்தில் அவரது கருத்துக் களோடு நமக்கு மாறுபாடு உள்ளது. நாட்டார் தெய்வங்கள் குறித்து பல நேர்காணல் களில் அவர் தெரிவித்த கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவிக்க, அவரது நேர்காணல்களில் இருக்கும் சில தகவல்களை எடுத்து அவற்றுக்கு பதில் கொடுத் துள்ளோம்.

“நம்பிக்கைக்கும் மூடநம்பிக்கைக்கும் என்ன வித்தியாசம்? இதுதான் என் தெய்வம், வழிகாட்டுகிறது என்று நம்புவது நம்பிக்கை. அந்த நம்பிக்கைக்கு எங்கே அதிகாரம் குறுக்கே வருகிறதோ அங்கே மூடநம்பிக்கை பிறக்கிறது. 'உனக்காக நான் யாகம் பண்றேன், ஹோமம் பண்றேன்' என்று சொல்வது மூடநம்பிக்கை. அதாவது அர்ச்சகர் என்ற ஒரு அதிகாரம் இங்கே குறுக்கே வருகிறது. நம்பிக்கை இயல்பானது.

அதிகாலையில் வயல் வெளிக்குப் போகிற வழியில் சூரிய உதயத்தைப் பார்த்து விட்டால், செருப்பைக் கழற்றிவிட்டு கும்பிடு போடுகிறோம். அதை மூடநம்பிக்கை என்று சொல்ல முடியாது. ஏனென்றால், அந்த சூரியன் இல்லையென்றால் பயிர் விளையாது. அது ஒரு நம்பிக்கை. அதுவே பெரிய கோவிலாக உருவெடுத்து, அங்கே அர்ச்சகர் வரும் போது, மூடநம்பிக்கை பிறந்துவிடுகிறது. நம்பிக்கையில் அரசு அதிகாரம் மட்டுமல்ல?, ஏதோ ஒரு ஆன்மீக அதிகாரம் குறுக்கே வந்துவிட்டால்கூட?, அது மூடநம்பிக்கை யாகிவிடும்.” - தொ.ப

நாட்டில் கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அனைவரும் ஏதோ ஒரு குலதெய்வத்தை வணங்கித்தான் வருகிறார்கள். இதுதான் என் தெய்வம், வழகாட்டுகிறது என்று நம்பி பலநூற்றாண்டுகளாக வணங்கி வந்த மக்களின் வாழ்க்கைநிலை, இன்றுவரை தாழ்த்தப்பட்டவர் களாகவே வாழ்வதும், தீண்டாமை வன்கொடுமைகளில் அழிவதும், மலக்குழிகளில் சாவதுமாக உள்ள மாற்றமின்றி இருக்கிறது. தமிழகத்தில் பதிவான வன்கொடுமைத் தடுப்புச்சட்ட வழக்குகள் குறித்த விபரங்களை வேலூர் பேராசிரியர் அய்.இளங்கோவன் 2008 செப்டம்பர் மாத தலித் முரசு இதழில் வெளி யிட்டுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அந்த புள்ளி விபரங்களின் அடிப் படையில், கடந்த 1990 முதல் 2006 வரை 16 ஆண்டுகளில், தமிழகத்தின் 15 மாவட்டங்களில் பதிவான வழக்குகள் 6157 மட்டுமே. சேலம் மாவட்டத்தில் வெறும் 30 வழக்குகள் மட்டுமே பதிவாகியுள்ளன. பதிவு செய்யப்பட்ட 6157 வழக்குகளில் 207 வழக்குகள் மட்டுமே தண்டனை வழங்கப்பட்டவையாகும். பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் அவை, 3 சதவீதம் மட்டுமே. பதிவு செய்யப்பட்ட 6157 வழக்குகளில், 1657 வழக்குகள் புலன்விசாரணை செய்த காவல்துறை அதிகாரியாலும், 2297 வழக்குகள் நீதிபதி களாலும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. மிக அண்மைக் கால புள்ளி விபரம் இது. அவற்றின் அடிப்படையில் பார்த்தால், நிலைமை மேலும் மோசமாகி வருவதை அறிந்து கொள்ள முடியும்.

கடந்த 2004 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தின் ஆண்டறிக்கையில், நாடு முழுவதும் எடுக்கப் பட்ட ஆய்வு விகிதத்தின்படி இந்தியாவில் உள்ள காவல்நிலையங்களில் ஒரு ஆண்டுக்கு ஒரு வழக்கு

கூட வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவாகவில்லை எனக் கூறப்பட்டிருந்தது. அந்த நிலை இப்போது வேறுவடிவில் மாற்றப் பட்டுள்ளது. அதாவது, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவாகும் கொஞ்ச நஞ்ச வழக்கு களையும், விசாரணை அதிகாரிகளும், விசாரணை நீதிமன்ற நீதிபதிகளும் தள்ளுபடி செய்கிறார்கள். அதன்மூலம் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தையே நாட்டில் ஒழித்துக் கட்டும் வேலையை அவர்கள் செய்து கொண்டிருக் கிறார்கள்.

- யாக்கன், விழிப்புணர்வு, அக்டோபர் 2008

அகில இந்திய அளவில் தாழ்த்தப்பட்ட சமுதாயப் பெண்கள் மீதான தாக்குதல் தொடர் பான புள்ளிவிபரங்களை NCRB அமைப்பு வெளி யிட்டுள்ளது. அவற்றின்படி கடந்த 2009ஆம் ஆண்டு 1346 பெண்கள் பாலியல் வன்கொடுமை களால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2010 ல் 1949 பேரும், 2011 ல் 1557 பேரும், 2012 ல் 1576 பேரும், 2013 ல் 2073 பேரும், 2014 2233 பேரும் பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாக்கப் பட்டுள்ளனர்.

- timesofindia.indiatimes.com

ஒவ்வொரு ஆண்டும் கொல்லப்படும், ஒவ்வொரு நாளும் கொல்லப்படும் தாழ்த்தப் பட்டோரின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருகிறது. இவை எதையும் மாற்றாத எந்தக் கடவுளானாலும், அது குலதெய்வமோ, பெருந் தெய்வமோ, நடுகல்லோ எதுவாக இருந்தாலும் அவற்றை நம்புவதும், வழிபடுவதும் மூடநம்பிக்கை தானே? இது எப்படி நம்பிக்கை ஆகும்? சிறுதெய்வம், குலதெய்வம், கிராமத்தெய்வம், தமிழ்த்தெய்வம், பெருந்தெய்வம் எதை நம்பினாலும், வழிபட்டாலும் பலன் ஒன்றுமில்லை அனைத்துமே மூடநம்பிக்கை கள் தான். இந்த நிலையில், நம்பிகையில் அதிகாரம் குறுக்கே வந்தால் மட்டுமே மூடநம்பிக்கை. இல்லா விட்டால் அது சரியான நம்பிக்கை என்று விளக்கம் தருவது அறிஞர்களுக்கு அழகல்ல.

“பெரியார் என்றுமே நாட்டார் கலாச்சாரத்தின் மீது போர் தொடுக்கவேயில்லை. அது அவரின் நோக்கமும் இல்லை. அவர் வைதீகத்தின் மீதும் நகர கலாச்சாரத்தின் மீதும்தான் போர் தொடுத்தார். பெரியார் பிள்ளையார் சிலையைத்தானே உடைத்தார்; சுடலைமாடன் சிலையை உடைக்கவில்லையே. சுடலைமாடன், காத்தாவராயனை அவர் ஒன்றும் செய்யவில்லையே. காளியம்மன், மாரியம்மனை எதிர்க்கவில்லை.” - தொ.ப

பெரியார் பிள்ளையார் சிலையை உடைத்தார். ஏசுநாதர் சிலையையோ, மேரி மாதா உருவங் களையோ கொளுத்தவில்லை. அதனால் அவற்றை ஏற்றுக்கொண்டார் என்று கூறமுடியாது.

சுடலை மாடனையும், காத்தவராயனையும், காளியம்மன், மாரியம்மனையும் பெரியார் கடுமையாக விமர்சித்து, பல இடங்களில் பேசியுள்ளார். எழுதியுள்ளார். அவற்றில் சில உரைகள் இந்த இதழில் தனித்தனிக்கட்டுரைகளாக வெளியிடப் பட்டுள்ளன. மாரியம்மன் பற்றிய பெரியாரின் ஒரே ஒரு கருத்தை மட்டும் இங்கு பதிவு செய்கிறோம்.

மக்கள் மாரியம்மன் பண்டிகையின் பேரால் காட்டுமிராண்டித்தனமாக தப்புகளைக் கொட்டிக் கொண்டும் மலைவாச லம்பாடிகள் ஆடுவதுபோன்ற ஆட்டங்களையும் ஆடிக் கொண்டும் கீழ் மக்கள் நடப்பதுபோன்ற வேஷங்களைப் போட்டுக்கொண்டும், ஆபாசமான பேச்சுகளைப் பேசிக்கொண்டும், ஆயிரக்கணக்கான ரூபாய்களை பாழாக்கிக்கொண்டும் செய்துவரும் அக்கிரமம் இந்த நாட்டில் அறியாதார் யாரும் இல்லை. இது நாளாக நாளாக அதிகமாகின்றதே தவிர மக்களுக்கு அறிவு வந்து, இந்த பழயகால நிலைமை சிறிதாவது மாறி இருக்கின்ற தென்று சொல்லு வதற்கே இல்லை.

-தோழர் பெரியார், குடி அரசு - 02.04.1933

பெரியார் இயக்கங்களில் பணியாற்றி வயது முதிர்ந்த தோழர்களும், தற்போது பல்வேறு பெரியார் இயக்கங்களில் களப்பணியாற்றும் இளந்தோழர்களும் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி என்ற திராவிடர் இயக்கங்களின் ஒரு சிறப்பான பண்பாட்டு நடவடிக்கை பற்றி நன்கு அறிவார்கள்.

பெரியார் காலத்திலேயே, பெரியார் தலைமை யிலேயே இலட்சக்கணக்கான தோழர்கள் முன்னிலையிலே ஏராளமான மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன. ஒரு சான்றைக் குறிப்பிட வேண்டுமானால், 1971 ஆம் ஆண்டு ஜனவரி 24 ல் சேலத்தில் நடைபெற்ற மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு மற்றும் பேரணியைக் கூறலாம்.

இது போன்ற பேரணிகளில், தீச்சட்டி எடுப்பது, அரிவாள் ஏறுவது, தீக்குழி இறங்குவது, உடல் முழுதும் எலுமிச்சம்பழம் குத்திக்கொள்வது, அலகு குத்தித் கார் இழுப்பது, பறவைக்காவடி, வாயில் அலகு குத்திக் கொள்வது, ஆட்டு ரத்தம் குடிப்பது போன்றவைகள் மூடநம்பிக்கைகள் ஒழிப்புச் செயல் விளக்கங்களாகச் செய்து காட்டப்படும். இவற்றை எல்லாம் செய்வதற்கு எந்தக் கடவுளின் அருளும் தேவையில்லை. சில நுணுக்கங்கள் தெரிந்தால் போதும் என்பதை விளக்கிக் காட்டிப் பேரணிகள் செல்லும்.

மேற்கண்ட மூடநம்பிக்கைச் செயல்கள் எதுவும் சிவன், திருமால், பார்வதி, இராமன், விநாயகன் போன்ற பெருந்தெய்வக் கோவில் களியோ நிறுவனமயப்படுத்தப்பட்ட பார்ப்பனக் கோவில்களிலோ நடப்பவை அல்ல. முற்று முழுதாக, நாட்டார் தெய்வங்கள், சிறுதெய்வங்கள், கிராம தெய்வங்கள், குல தெய்வங்கள் ஆகியவற்றின் கோவில்களிலும், அவற்றின் வழிபாடுகளிலும் நடத்தப்படும் காட்டு மிராண்டித்தனங்களாகும்.

குலதெய்வ, நாட்டார் தெய்வக் கோவில் வழிபாடுகளில் நடக்கும் இவைபோன்ற காட்டு மிராண்டித்தனங்களை எதிர்த்து, திராவிடர்

கழகத்தின் தலைவராகத் தோழர் பெரியார் இருந்த காலத்திலும், தோழர் கி.வீரமணி தலைமையில் இயங்கும் இந்தக் காலத்திலும் தொடர்ச்சியாக மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணிகள் நடந்துக் கொண்டுதான் இருக்கின்றன. தோழர் கொளத்தூர் மணி தலைமையில் இயங்கும் திராவிடர் விடுதலைக் கழகம், தோழர் கோவை இராமக்கிருட்டிணன் தலைமையில் இயங்கும் தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஆகிய அமைப்புகளும் ஆண்டுதோறும் இவ்வகைக் காட்டுமிராண்டித்தனங்களை எதிர்த்து மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணிகளை நடத்தித்தான் வருகின்றன.

“இந்த நாட்டார் தெய்வங்கள் ஒவ்வொரு மனிதனின் இரத்த ஓட்டத்திலும் கலந்த விஷயம். மழை வேண்டு மென்றால் மாரியம்மனுக்கு மழைக்கஞ்சி எடுக்க வேண்டும். இது நம்பிக்கை; மூடநம்பிக்கை இல்லை. நாட்டார் தெய்வங்கள் என்பவை அதிகார மையங்கள் அல்ல; காமாட்சி அம்மனைப்போல, மீனாட்சி அம்மனைப் போல அதிகார மையத்தைச் சார்ந்த தெய்வங்கள் அல்ல. நாட்டார் தெய்வத்திலே தெய்வத்திற்கும் மனிதனுக்கும் குறுக்கே நிற்கிற அதிகாரம் எவ்வளவு நேரம்? சாமி ஆடும் நேரம் மட்டும்தான். அந்த பத்து நிமிடம் சாமி ஆடுவான். அந்நேரம்தான் அவனுக்கு அதிகாரம். அதற்குப் பிறகு அவனும் கடப்பாரையைத் தூக்கிக் கொண்டு மற்றவர் களோடு வேலைக்குக் கிளம்பி விடுவான்.” - தொ.ப

எந்த நாட்டார் தெய்வமானாலும் அந்தத் தெய்வத்தின் கோவிலில் விழா என்றால், அதை முடிவு செய்யும் கூட்டத்தில்கூட தாழ்த்தப் பட்டவர்கள் அமரவே முடியாது. விழா தொடர் பாகக் கருத்துக்களைக் கூறவும் முடியாது. தாழ்த்தப் பட்டவரிடம் வரிவாங்குவதும் கிடையாது. நாட்டார் தெய்வக் கோவில்களின் வழிபாடுகளில் ஜாதி அடிப்படையிலேயே வழிபாட்டு உரிமைகள், வழிபாட்டு முறைகள் நடைமுறைப் படுத்தப் படுகின்றன. முதல் மரியாதை பார்ப்பனருக்கு, அடுத்த மரியாதைகள் அந்தந்த ஊரில் உள்ள பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, கோவிலின் அடிமைப் பணிகள் மட்டும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ற ஜாதிப் படிநிலையில் தான் அனைத்து நாட்டார் கோவில்களின் வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு கிராமக் கோவிலும் அந்தந்த கிராமங்களின் அதிகார மய்யங்கள் தான். சில கிராமங்களில் மட்டும் பார்ப்பனர்களுக்குப் பதிலாக அதிகார மய்யத்தின் தலைவராக பிற்படுத்தப் பட்டவர்கள் உள்ளனர். அதிகார மய்யத்தின் தலைமையின் ஜாதிமட்டும் மாறியுள்ளது. ஆனால் தன்மை மாறவில்லை.

மதுரை மீனாட்சி அம்மன், காஞ்சிபுரம் காமாட்சி அம்மன், சிவன் போன்ற பெருந் தெய்வங்களின் கோவில்கள் ஜாதி, வர்ணாஸ்ரமம், மதம் ஆகிய ஒட்டுமொத்த நிறுவனத்தைப் பாது காக்கின்றன. சிறுதெய்வங்களும், நாட்டார் தெய்வங் களும் அதே பணியைத்தான் செயல்படுத்துகின்றன. இரண்டு வகை வழிபாடுகளுக்கும் எந்த வேறுபாடுஇல்லை. (சான்று: முனைவர் ரெ.முத்துராஜன் எழுதியுள்ள அய்யனார் வழிபாடு நூல்)

திருவிழா முடிந்ததும் கடப்பாரையைத் தூக்கிக்கொண்டு நம்முடன் நடந்தாலும், அந்தப் பூசாரியின் மீது மக்களுக்கு பயம் என்பது இருக்கவே செய்கிறது. அவரைப் பெரும்பாலும் எவரும் பகைத்துக்கொள்ள மாட்டார்கள். ‘வாக்குக் குடுத்துருவார்’ என்று அவரைப் பற்றிப் பயத்துடன் தான் மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பயத்தைப் பயன்படுத்தி கிராமக்கோவில் பூசாரிகளும், பார்ப்பனர்களைப்போல பல மக்கள் விரோதச் செயல்களிலும் ஈடுபட்டுத்தான் வருகின்றனர். அப்படிப்பட்ட கிராமக் கோவில் பூசாரிகளையும் விஸ்வ இந்து பரிஷத் தன்வயப்படுத்திவிட்டது. அர்ச்சனைப் பயிற்சி அளிப்பதாக இலட்சக்கணக் கான பூசாரிகளை அழைத்துச் சென்று, வலுவான இந்துத்துவப் பயிற்சியைக் கொடுத்து, சிறந்த பார்ப்பன அடிமைகளாக மாற்றியுள்ளது.

“நாட்டார் தெய்வங்கள் ஜனநாயகத் தன்மை வாய்ந்தவை. நான் என்ன சாப்பிடுகிறேனோ அதைச் சாப்பிடுவது தானே என் தெய்வம். இதுவும் ஒரு உயர்தர சமத்துவம் தானே! நான் பன்றிக்கறி சாப்பிட்டால் என் தெய்வமும் பன்றிக்கறி சாப்பிடணும். நான் ஆட்டுக்கறி சாப்பிட்டால் என் தெய்வமும் ஆட்டுக்கறி சாப்பிடணும். நான் ரோட்டிலே சாப்பிட்டால் என் தெய்வமும் ரோட்டில் சாப்பிடணும். இந்த தெய்வத்தை எப்படி நீங்கள் அழிக்க முடியும்?” - தொ.ப

இவை தேகால யாகங்களின் நடைமுறை தானே? தாங்கள் விரும்பி அருந்திய மதுவையும், தாங்கள் விரும்பி உண்ட மாட்டிறைச்சியையும் யாகத்தில் பலியிட்டு உண்பது பார்ப்பனர்களின் பண்பாடுதான். நாம் நமது சிறுதெய்வங்கள், குலதெய்வங்களுக்கு ஆடு, மாடு, கோழி அறுப்பதும் பட்டைச்சாராயத்தையும், அது கிடைக்காத இந்தக் காலத்தில் டாஸ்மாக் சரக்கைப் படைத்து வழிபடுவதும் அதன் தொடர்ச்சிதான், பார்ப்பன ஆரியப் பண்பாட்டின் தொடர்ச்சி தான் நம் குலதெய்வ, நாட்டார் வழிபாடுகள்.

“சில பெரிய சாதிகளுக்கு மட்டும்தான் வரை யறுக்கப்பட்ட தெய்வங்கள் உண்டு. மாரியம்மன் எந்த சாதியின் தெய்வம்? ஒரு காலத்தில் மாரியம்மன் உழவுத் தொழில் செய்தவனுடைய தெய்வம். இன்றைக்கு மழை வேண்டுபவர்களுக் கெல்லாம் மாரியம்மன் தெய்வம். எல்லா தெய்வங்களையும் அப்படி சேர்க்க முடியாது. சில சில தெய்வங்கள் வட்டாரம் சார்ந்திருக்கிறது; சாதியைச் சார்ந்திருக்கிறது.” - தொ.ப

திருப்பூர், கோவை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள பல்வேறு நாட்டார் தெய்வக் கோவில் வழிபாடுகளில் உள்ள களநிலவரத்தைக் காட்டாறுகுழு தோழர்கள் நேரடியாகச் சென்று ஆய்வு செய்து அறிக்கை

வெளியிட்டுள்ளனர். அனைத்து நாட்டார் தெய்வமானாலும் அவை ஜாதிமுறையை, ஜாதிப்படிநிலையைத் தவறாமல் பின்பற்றியே வருகின்றன. தாழ்த்தப்பட்டோர் அந்தத் தெய்வங்களின் கோவில்களின் சுற்றுச்சுவரைக்கூட நெருங்க இயலாத அவலமும் நிலவுகிறது.

மழை வேண்டுபவர்களுக்கு மாரியம்மன் தெய்வமாம். அப்படி மழை வேண்டி மாரியம்மனை வணங்க வரும் மக்களை ஜாதிரீதியாகக் கூறுபோட்டு வழிபட வைப்பது தான் இன்றும் நடைமுறையில் உள்ளது. திண்டுக்கல் கோட்டை மாரியம்மன் திருவிழா 15 நாட்கள் நடக்கும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஜாதியினருக்கு சிறப்பு வழிபாடு நடக்கிறது. கோவில் ஒன்றுதான். தெய்வம் மாரியம்மன் தான். ஆனால் வழிபடச் செல்பவர்கள் 'மண்டகப்படி' என்ற பெயரில் ஒவ்வொரு ஜாதியும், ஒவ்வொரு நாளில் செல்கின்றனர்.

மாரியம்மன், காளியம்மன், வஞ்சியம்மன், முத்தாளம்மன், பட்டத்தரசி அம்மன் போன்ற அனைத்து நாட்டார் தெய்வக் கோவில்களிலும் நிலவும் பல்வேறு வகையான தீண்டாமைக் கொடுமைகள் இந்த இதழில் விரிவாக, தனியாக, களஆய்வாக வெளியிடப்பட்டுள்ளது.

"இரண்டு ஆண்டுகளுக்கு முன் வந்த உயிர்ப்பலித் தடைச்சட்டத்தை இந்துத்துவ சக்திகளும் ஆதரித்தன; கி.வீரமணியும் ஆதரித்தார். இதனை எப்படிப் பார்ப்பது? இது ஒரு அரசியல்முரண் அல்லாமல் பண்பாட்டு முரண் ஆகும்.

பெரியார் உயிரோடு இருந்திருந்தால் இந்தக் கட்டத்தில் பெரியாரது நிலைபாடு என்னவாக இருந்திருக்கும்? "பெரிய கோயில்களில் யாகங்களை நிறுத்துங்கள், அனைவரையும் கருவறைக்குள் நுழைய அனுமதியுங்கள், அதற்கப்புறம் 'உயிர்ப்பலித்தடை' பற்றி யோசிக்கலாம்" என்று தான் அவர் சொல்லியருப்பார். ஏனென்றால் பெரியார் உடனடித்தீர்வு பற்றிய சிந்தனை யாளர் அல்லர். அவர் 'நேற்றும் நாளையும்' ஆகப் பணியாற்ற விரும்பியவர்". – தொ.ப

தூத்துக்குடியில் 1948 ஆம் ஆண்டு மே 8 ஆம் நாள் நடைபெற்ற திராவிடர் கழக 18 ஆம் மாகாண மாநாடு நடைபெற்றது. தோழர் பெரியார் தலைமையில் நடைபெற்ற அந்த மாநாட்டின் 17 வது தீர்மானம் உயிர்ப்பலியை அரசாங்கம் தடைசெய்ய வேண்டும் என்பதாகும். அந்தத் தீர்மானத்தை அப்படியே பார்ப்போம்.

> "மதத்தின் பெயரால் உயிர்ப்பலி செய்யப்படுவதைச் சர்க்கார் தடை செய்ய வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது."

தோழர் வீரமணி அவர்கள் பெரியாரின் வழிநின்றுதான் உயிர்ப்பலித் தடைச் சட்டத்தை ஆதரித்துள்ளார்.

"நாட்டார் தெய்வங்கள்' என்ற சொல்லாட்சி, ஓரளவு வாசிப்புப் பழக்கம் உடையவர் களிடத்திலும் இடதுசாரி இயக்கச்சார்பு உடையவர்களிடத்திலும் உடனடியாகச் 'சாமியாட்டம், குருதிப்பலி, பலிவடிவங்கள்' ஆகிய படங்களாகவே விரிகின்றது. பொத்தாம் பொதுவான அல்லது மேலோட்டமான இந்தக் கணிப்புக்கள் அனைத்துமே தவறானவை. நாட்டார் தெய்வங்கள் தத்துவ 'விசாரங்களிலே' நொறுங்கிப் போகுமளவு மெலிதானவை யல்ல. அவற்றின் வேர்கள் வலிமையானவை. அவை வட்டாரத் தன்மையும் உயிர்ப்பும் உடையன.

சிவன், திருமால், விநாயகர் போல 'வடவேங்கடம் தென்குமரி' வரை ஒத்த தன்மை அவற்றுக்கில்லை. சென்னை, செங்கல்பட்டு வட்டங்களில் 'காளன்', ஆற்காட்டுப் பகுதியில் 'பொன்னியம்மன்', வேலூர் திருவண்ணாமலைப் பகுதி களில் 'போத்தி ராஜா', கொங்கு நாட்டில் 'அண்ணன்மார்', திருச்சி புதுக் கோட்டை மாவட்டங்களில் 'சுடலைமாடனும் இசக்கியம்மனும்' என்று, வட்டாரம் சார்ந்த உற்பத்தி அசைவுகளும் சமூக உளவியலும் ஆகப் பன்முகத்தன்மையைக் கொண்டாடு பவை. இந்தப் 'பன்முகத் தன்மை' என்பது சைவம், வைணவம், ஸ்மார்த்தம், இசுலாம், கிறித்தவம் ஆகிய எந்த நிறுவனச் சமயத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட இயலாத தாகும்." – தொ.ப.

இந்து மதத்தை வாழ்க்கைமுறையாக ஏற்றுக் கொண்டவர்கள் வாழும் நாட்டில் வட்டாரத் தன்மை, வட்டாரம் சார்ந்த உற்பத்தி அசைவுகள், வட்டாரம் சார்ந்த உளவியல் என்று எதுவும் இல்லை. அனைத்தும் ஜாதியை அடிப்படையாகக் கொண்டவையே. கொங்கு நாட்டில் அண்ணமார் சாமிகளைக் கும்பிடுபவர்களாகப் பல தரப்பு மக்களும் இருக்கிறார்கள். கவுண்டர்களும் வழிபடுவார்கள். சக்கிலியர், பறையர்களும் வழிபடுவார்கள்.

ஆனால் அந்த வழிபாட்டில் அனைத்து ஜாதிக்கும் ஒரே நடைமுறை இருப்ப தில்லை. வழிபாட்டில் ஒவ்வொரு ஜாதிக்கும், ஒவ்வொரு முறை உள்ளது. அந்த நடைமுறைகள் ஜாதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன. சமுதாயத்தில் நிலவும் ஜாதியப் படிநிலை அப்படியே இந்த வழிபாடுகளிலும் இருக்கின்றன. இதில் என்ன பன்மைத்துவம் வாழ்கிறது? ஜாதித்துவம் மட்டுமே வாழ்கிறது.

முக்கியமாக அய்யனார் மற்றும் அய்யனார் போன்ற அனைத்து நாட்டார் தெய்வங்களையும் இந்து மதம் செரித்து கழித்து - பல நூற்றாண்டுகள் கடந்து விட்டன. இப்போது இருப்பவை இந்து மதத்தின் கழிவுகளே. அந்தக்கழிவுகளைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடுபவர்கள், தமிழறிஞர் தொ.பரமசிவன் அவர்களின் ஆய்வு மாணவர் முனைவர் ரெ.முத்துராஜன் அவர்களின் ஆய்வு நூலான அய்யனார் வழிபாடு என்னும் நூலிலிருந்து சில சான்றுகளைப் பார்க்கலாம்.

> கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருநாவுக் கரசர் தம் தேவாரத்தில், திருப் பயற்றூர்ப் பதிகத்தில், "அய்யனாரைத் தன் மகனாக சிவன் வைத்துக்கொண்டார்" எனப் பாடுகின்றார்.

சிவன், திருமால் (சைவம் வைணவம்) இணைப்புக்கும் இக்கதை பயன்பட்டிருக்கிறது. இக்காலத்தில் அய்யனாருக்கு ஹரி ஹரப் புத்திரன் என்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது. பக்கம்17

கி.பி. 7 முதல் 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பங்களில் அய்யனார் தனித்தே அமர்ந் துள்ளார். இவருக்குப் பணிவிடை செய்வதற்கு இரண்டு பெண்கள் உள்ளனர். குடை பிடித்த பணியாளும், சாமரம் வீசுகின்ற பெண்ணும் சிற்பங்களில் இடம் பெற்றுள்ளனர். ஆனால் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்காலச் சோழர்காலச் சிற்பங்களில் அய்யனார் இரண்டு மனைவி யருடன் காணப்படுகிறார். சங்க இலக்கியங்களில் அய்யனாருக்கு மனைவியர் இருந்ததற்கான குறிப்புகள் இல்லை. கி.பி. 7 ஆம் நூற்றாண்டுச் சிற்பங்களிலேயே அய்யனாருடன் இரு மனைவியரைக் காணுகிறோம். பக்கம்18

அய்யனாருக்கு இந்திரன் மகள்களைத் ( பூரணை, புட்கலை ) திருமணம் செய்து வைக்கின்றனர். சிவனும், திருமாலும் அய்யானரிடம் ஊர் மக்களையும், தானியங் களையும் காக்கும் பொருட்டு ஊரின் எல்லையில் அமர்ந்து அருளாட்சி செய்யுமாறு பணிக் கின்றனர். -பக்கம்73

அய்யனார் வழிபாடு என்பது ஏழாம் நூற்றாண்டிலேயே இந்து, பார்ப்பனமய மாமாக்கப்பட்டு விட்டது என்பதற்கு மேற்கண்ட நூலில் இன்னும் எராளமான சான்றுகள் உள்ளன.

அய்யனார் போன்ற நாட்டார் தெய்வ வழிபாடுகளைப் புகழ்ந்து, அவற்றை ஏற்றுப் பேசும் அறிஞர் தொ.ப அவர்களின் கருத்துக்கு அவரது ஆய்வு மாணவரின் நூலே பதிலாக உள்ளது. இந்தச் சான்று போதாது என்பவர்கள் நேரடியாக எந்த நாட்டார் தெய்வக் கோவிலையும் சென்று பார்த்து ஆய்ந்து எழுதலாம். காட்டாறு குழு அவ்வாறு மாரியம்மன், அண்ணன்மார் போன்ற தெய்வங்களின் வழிபாடுகளை நேரடியாகக் களஆய்வு செய்தோம். அவை முழுவதும் பார்ப்பனமயமாக்கப்பட்டு விட்டன என்பதை நேரடியாக அறிந்து அவற்றை இந்த இதழில் பதிவு செய்துள்ளோம்.

### தமிழர்களைப் பலஜாதிகளாகப் பிரித்து நிறுத்தும் நாட்டார் தெய்வங்கள்

அறநிலையத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட பார்ப்பனமயமான தெய்வங்களும், பார்ப்பன ஆதிக்கத்திலிருக்கும் கோவில்களும் வழிபடவரும் மக்களை இருபெரும் பிரிவாகப் பிரித்துள்ளன. வேதங்கள் உருவாக்கிய வர்ணப் பிரிவுகளை காலங் காலமாக, பலநூற்றாண்டுகளாக நடை முறைப் படுத்தி வைத்துள்ளன. பார்ப்பனர்களுக்குக் கருவறை, பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் தாழ்த்தப் பட்டவர்களுக்கும் கோவிலில் கருவறை தவிர்த்த மற்ற இடங்கள் என்று இரண்டு தரமாகப் பிரித்துவைத்துள்ளன.

பழனி முருகன் கோவில், திருவண்ணாமலை முருகன் கோவில், திருச்சி உச்சிப்பிள்ளையார் கோவில், ஸ்ரீரங்கம் கோவில் திருப்பதி வெங்கடா சலபதி கோவில், தஞ்சைப் பெரியகோவில், மதுரை மீனாட்சிஅம்மன் கோவில் போன்ற அனைத்துப் பார்ப்பனக் கோவில்களிலும் எந்த ஜாதியினர் வேண்டுமானாலும் கோவிலுக்குள் நுழைந்து வழிபடலாம். தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப் பட்டோர் என்ற வேறுபாடு கிடையாது. பார்ப்பனர் களுக்குச் சொந்தமான கருவறைக்குள் இரு தரப்புமே நுழைய முடியாது.

இந்தநிலை இந்தக் கடவுள்களும், கோவில் களும் உருவான காலத்திலிருந்தே இருந்துவந்த நடைமுறை அல்ல. சில பிற்படுத்தப்பட்ட ஜாதியினரும், தாழ்த்தப்பட்ட ஜாதியினரும் பார்ப்பன மயமான மேற்கண்ட கோவில்களில் நுழைந்து கடவுளை வழிபட ஏராளமான உரிமைப் போராட்டங்கள் நடந்தன. இன்று அனைத்து ஜாதியினரும் கோவிலுக்குள் சென்று வழிபட முடிகிறதென்றால், அதற்கு அடிப்படைக் காரணம், கடவுளை நம்பாத பெரியாரும், அவரது சுயமரியாதை இயக்கமும் தான். இது வரலாற்று உண்மை.

ஆக, பார்ப்பனமயமான, பெருந்தெய்வக் கோவில்களில் தற்போது மக்கள் இரு பிரிவாகப் பிரிந்துள்ளனர். பார்ப்பான் தனியாக இருக்கிறான். பிற்படுத்தப்பட்டவரும், தாழ்த்தப்பட்டவரும் ஒன்றாக நின்கின்றனர். ஆனால், சிறுதெய்வங்கள், குலதெய்வங்கள், கிராம தெய்வங்களின் கோவில் களிலும் வழிபாடுகளிலும் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் இரு தரப்பும் பிரிந்து நிற்கிறது. அதுவும் இரு பிரிவாகப் பிரிந்து நிற்கவில்லை. 2000 க்கும் மேற்பட்ட பிரிவுகளாகப் பிரிந்து நிற்கிறார்கள்.

எந்தச் சிறுதெய்வக் கோவில்களிலும் பிற்படுத்தப்பட்டவருக்கும், தாழ்த்தப்பட்ட வருக்கும் ஒரே உரிமை, ஒரே மரியாதை என்ற நிலை கிடையாது. எந்தக் கிராமக் கோவில்களிலும் தாழ்த்தப்பட்டவர் களுக்கு அனுமதியே கிடையாது. ஊர்த் திருவிழாக்களுக்குச் சேரிகளில் வரி வாங்குவதே கிடையாது. வரிகொடுக்கும் அளவுக்கு அவர்கள் பொருளாதாரத்தில் உயர்ந்து இருந்தாலும், தாழ்த்தப்பட்டவர்களிடம் வரி வாங்குவது கிடையாது. சேரிகளுக்குத் தனிக் கோவில், தனித் திருவிழா என்ற நிலைதான் உள்ளது. குலதெய்வக்கோவில்களோ, ஒவ்வொரு ஜாதியையும் தனித்தனியாகப் பிரித்துவிடுகிறது. பிரிந்து நிற்கும் ஒவ்வொரு ஜாதியையும் மேலும் மேலும் கூறு போட்டு, மக்களை ஆயிரக்கணக்கான பிரிவுகளாகப் பிரித்துவிடுகிறது.

தன்னுடைய கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப் பட்ட மக்களைத் தங்களிடமிருந்து தாழ்த்திக் காட்டவும், அவர்களைவிட நாங்கள் உயர்ந்தவர்கள் என்பதை அனைவருக்கும் உணர்த்தவும், உறுதிப் படுத்தவும்தான் கிராமக் கோவில் திருவிழாக்கள் பயன்படுகின்றன.

தாழ்த்தப்பட்டவர்களின் தனிக்கோவில் தனி வழிபாடுகளும், தனி தெய்வங்களும் பிற்படுத்தப் பட்டவர்களைவிட நாங்கள் தாழ்ந்தவர்களே என்பதை தங்களுக்குத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ளவே பயன்படுகின்றன.

தாழ்த்தப்பட்டவரோ, பிற்படுத்தப் பட்ட வரோ அவர்களுக்குள்ளேயே ஆயிரக் கணக்கான ஜாதிகளைப் பிரித்துக்கொண்டு ஜாதிக்கொரு கோவில், அந்த ஜாதிகளுக்குள்ளும் பல பிரிவுகளை பிரித்து குலத்துக்கொரு கோவில் என பல ஆயிரமாகப் பிரிந்து ஒருவருக்கொருவர் பிரிவினையை களையும், உயர்வு தாழ்வுகளையும் கற்பிக் கின்றன குலதெய்வ வழிபாடுகள். இதில் என்ன பன்மைத்துவம் வாழ்கிறது? தன் ஜாதிக் குள்ளேயே மற்றொரு பிரிவை அனுமதிக்காத குறுகிய மனப்பான்மையையும், காட்டு மிராண்டித் தனத்தையும் தான் இந்தக் குலதெய்வங்கள் உருவாக்குகின்றன. இவற்றால் உருவானது பன்முகத் தன்மை அல்ல. ஜாதிமுகத் தன்மை.

**ஜாதிமுறையைப் பலப்படுத்தும் நாட்டார் தெய்வங்கள்**

அய்யனார் என்ற நாட்டார் தெய்வ வழி பாட்டைக் கடைப்பிடிக்கும் மக்கள் தமிழ்நாடு முழு வதும் வாழ்கிறார்கள். பேராசிரியர் முனைவர் ரெ.முத்துராஜன் அவரது முனைவர் பட்ட ஆய்வுக் காக இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி, முதுகுளத்தூர் ஆகிய இரண்டு வட்டங்களில் அய்யனார் வழிபாடு குறித்து விரிவான கள ஆய்வை நடத்தியிருக்கிறார். இரண்டு வட்டங்களிலும் சேர்த்து 148 ஊராட்சி ஒன்றியங்கள், 300 கிராமங்களில் இந்த ஆய்வு நடந்துள்ளது. 203 அய்யனார் கோவில்களில் நேரடியாக ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

முழுமையான அந்த ஆய்வு 250 பக்க நூலாக வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலில் இருந்து மேலே சில சான்றுகளைக் கண்டோம். அந்த நூலில் இந்த அய்யனார் என்ற நாட்டார் தெய்வ வழிபாட்டில் உள்ள ஜாதி ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமை வன்கொடுமைகள் ஏராளமான இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் இருந்து சில தகவல்களைப் பார்ப்போம்.

**வழிபாட்டில் ஜாதியப்படிநிலை**

மக்கள் வாழ்கின்ற இடத்தில் காணும் சாதியப் படிநிலை அமைப்புப் போன்றே வழிபாட்டுச் சடங்கியல் தளத்திலும் பேணப்படுகின்றது. இந்தப்படிநிலை அமைப்பை

அய்யர், வேளாளர் - முதல் படிநிலை

கோனார், மறவர், சேர்வைக்காரர் - இரண்டாம் படிநிலை

தச்சர், கொல்லர், குயவர், பண்டாரம், நாவிதர், நாடார், வண்ணார் - மூன்றாம் படிநிலை

பள்ளர், பறையர், சக்கிலியர் - நான்காம் படிநிலை

என ஆய்விற்காக வகைப்படுத்தலாம். இந்தச் சாதியப் படிநிலையில் ஒரு ஜாதி எந்த இடத்தில் இடம்பெற்றுள்ளதோ, அதைப் பொறுத்து விழாக்களில் உரிமையும், விலக்கும் அளிக்கப்படுகின்றது. தெய்வத்திற்கான படையல் பொருட்களைப் பெறும் உரிமைகூட இப் படிநிலையினாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

காளாஞ்சி பெறுதல், மாலை பெறதல், பரிவட்டம், திருநீறு பெறுதல் என்பன போன்ற மரியாதைகள் ஆதிக்கச் சாதியினருக்கு மட்டும் வழங்கப்படுகின்றன.

ஊரின் ஒவ்வொரு அசைவுகளிலும் அய்யர், வேளாளர் ஆகிய இரண்டு சாதியினரை முன்னிலைப் படுத்துகின்றனர். அதுபோல், சடங்குத் தளத்திலும் இவர்கள் முன்னிலை உடையவர்களாகத் திகழ்கின்றனர். இதனால்தான் இவர்கள் கோவிலின் சந்நிதானம் வரை செல்ல முடிகின்றது.

இரண்டாம் படிநிலையில் உள்ளவர்கள் வாழ்தளத்தில் இயங்குவது போன்றே, வழிபாட்டில் பிடிமண் எடுத்தல், உருவம் செய்தல், கரகம் சுமத்தல், குதிரை சுமத்தல் என்ற நிலையினை எய்துகின்றனர். இதில் தச்சாசாரி, கொல்லாசாரி போன்ற சேவை சாதியினரும் அடங்குவர். இவர்கள் வேளாண்மைக்குத் தேவையான உற்பத்திக் கருவிகளைச் செய்து தருகின்றனர் என்ற வகையில் இவர்களும் கோவில் தளத்தில் மதிக்கப்படுகின்றனர்எனக் கருதலாம்.

பிறசேவைச் சாதியினரான வண்ணார், நாவிதர் முதலிய சாதியினர் அடுத்த படியிலையை உடையவர்களாக உள்ளனர். இவர்கள் அய்யனார் சந்நிதானத்திற்கு முன்புவரை செல்லலாம். ஆனால், மேற்குறிப்பிட்ட ஆதிக்கச் சாதி யினருக்குத் திருநீறு வழங்கிய பின்பே பூசாரி இவர்களைத் திருநீறு வாங்க அழைக்கின்றார்.

பள்ளர் சாதியினர் நான்காம் படிநிலையில் உள்ளவராவர். இவர்களை அய்யனார் சந்நிதானத்திற்கு அருகில் செல்ல அனுமதிப் பதில்லை. இக்கோவிலில் அமைந்துள்ள கருப்பசாமி சன்னதியின் அருகிலேயே நிற்கின்றனர். இத்தெய்வத்தின் இருப்பிட எல்லையே இவர்களுக்குரிய சாதியப் படிநிலையாகும்.

சில இடங்களில் இத்தெய்வம் இவர்களின் குலதெய்வமாகவும் உள்ளது. இத்தெய்வத் திற்குரிய பூசாரி வேளாளரே ஆவர். அய்யனா ருக்குப் பூசை முடித்து ஆதிக்கச் சாதியாருக்குத் திருநீரு வழங்கிய பின்பு பரிவாரத் தெய்வங் களுக்குப் பூசை செய்கின்றனர். அதுவரை இம்மக்கள் இங்கு காத்திருக்க வேண்டும்.

நான்காம் படிநிலை அமைப்பின் உட்படி நிலை உடையவர்களாக, பறையர், சக்கிலியர் சாதியினர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் சடங்கியல் எல்லைக்குள் செல்ல ஆதிக்கச்

- இதன் தொடர்ச்சி 41 ஆம் பக்கம்



# பார்ப்பனர் மற்றும் பார்ப்பனியக் கட்டுப்பாட்டில் இயங்கும் நாட்டார் தெய்வங்கள்

இந்துமத வேதங்களுக்குக்கும், சாஸ்திர சம்பிரதாயங்களுக்கும் எதிரானவை என்று கூறப்படும் நாட்டார் தெய்வக் கோவில்களில் இன்றும் தாழ்த்தப்பட்டோர் வழிபடுவதற்கு உரிமை இல்லை. ஆரிய ஆகமங்களுக்கு எதிரானவை என்று புனிதப்படுத்தப்படும் இந்த நாட்டார் சிறுதெய்வக் கோவில்களில் தாழ்த்தப்பட்டோருக்கு எதிராகப் பல வகையான தீண்டாமைக்கொடுமைகள் கடைப் பிடிக்கப்படுகின்றன. அவை கடவுளின் வாக்காகக் காலங்காலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளன. தாழ்த்தப் பட்டோரும் அந்த அடிமைப் பண்பாடுகளை கடவுளின் வாக்காகவே பின்பற்றிவருகின்றனர்.

நிறுவனமயப்படுத்தப்பட்ட பெரிய கோவில் கள் வர்ண தர்மத்தையும், மனுநீதியையும் நிலை நிறுத்தவும் - மக்களுக்கு அவற்றை பயிற்று விக்கவும் ஒரு களமாக இயங்குகின்றன. நாட்டார் தெய்வங் களும், சிறு தெய்வங்களும், கிராமப் பொதுத்(?) தெய்வங்களும் அதே பணியைத்தான் செய்கின்றன. பார்ப்பனக் கடவுள்கள், பார்ப்ப னரல்லாத தெய்வங்கள் இரண்டு வகையின் நோக்கங் களும் இலக்குகளும் இந்துராஷ்ட்ரம் ஒன்றேதான்.

திருப்பூர், திண்டுக்கல் ஆகிய இரண்டு மாவட்டங்களில் சில இடங்களில் மட்டும் எங்கள் சக்திக்கு உட்பட்டு நாங்கள் நடத்திய கள ஆய்வில் கிடைத்த தகவல்கள் இவை. இந்த இரண்டு மாவட்டங்களிலும் உள்ள அனைத்துக் கிராமங் களிலும் உள்ள அனைத்துப் பொதுக்கோவில்கள், நாட்டார் தெய்வக் கோவில்கள், சிறுதெய்வக் கோவில்கள் என்று அழைக்கப்படும் அனைத்திற்கும் ஒரு பொதுவான பண்பாடு உள்ளது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரை வழிபட அனுமதிக்காதது - தாழ்த்தப் பட்டவர்களைக் கோவில்களில் அடிமைப் பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்வது.

ஆரியப் பார்ப்பனர்களுக்கு எதிரான வழி பாட்டுமுறை என்று சில அறிவுஜீவிகளால் முன்னெடுக்கப்படும் இந்த நாட்டார் தெய்வ வழிபாட்டில் தீண்டாமை, பார்ப்பனீய நடை முறைகள், பார்ப்பன ஆதிக்கம் இவையெல்லாம் இந்தக் களஆய்வு நடத்தப்பட்ட திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களில் மட்டும் தான் உள்ளது என்று எவரும் கருதிவிட வேண்டாம். தமிழ்நாட்டின் அனைத்துக் கிராமங்களிலும் இவை ஆழமாக ஊடுருவியுள்ளன.

மிக மிகக் கேவலமான ஒரு தகவல் என்ன வென்றால், தமிழ்நாட்டில் பொருளாதார ரீதியாக நன்கு வளர்ச்சி பெற்றுள்ளவை கோவை, திருப்பூர் மாநகரங்கள். அந்த மாநகரங்களுக்கு உள்ளேயே இருக்கும் நாட்டார், சிறுதெய்வக் கோவில்களில்கூட கடுமையான தீண்டாமைக் கொடுமைகள் நிலவு கின்றன.

நாங்கள் பட்டியலிட்டுள்ள சில கோவில்கள் தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் கோவில்களாகும். எந்த அரசானாலும், எந்தத் தெய்வமானாலும் அவை பார்ப்பனத்துறையின் ஆதிக்கத்திலேதான் இருந்தன. இருக்கின்றன என்பதை எமது களஆய்வு உறுதிப்படுத்துகிறது. மறுப்பவர்கள் மேற்கண்ட கோவில்களுக்கு நேரில் வந்து பார்க்கலாம்.

**1. கரடிவாவி மாரியம்மன் கோவில்**

கோவில் பூச்சாட்டு விழாவில் அருந்ததிய இளைஞர்களைக் கொட்டடிக்கும் சம்பிரதாயத்தில் ஈடுபடுத்துகின்றனர். மாவிளக்கு எடுக்கும் நிகழ்ச்சியில் காலையில் கவுண்டர் சமூகத்தினரும், மதியம் அருந்ததிய சமூகத்தினரும் எடுக்க வேண்டும் என்பது ஊர்க் கட்டுப்பாடு.

கோவிலின் உள்ளே சென்று வழிபட கவுண்டர் சமூகத்தினருக்கும், இதர பிற்படுத்தப் பட்ட சாதியினருக்கும் அனுமதி உண்டு. ஆனால் அருந்ததிய சமூகத்தினருக்கு உள்ளே சென்று வழிபட அனுமதி இல்லை. கோவில் கொடி கம்பம் தாண்டிச் செல்ல அனுமதி இல்லை. அங்கேயே நின்று வழிபட வேண்டும். அருந்ததிய சமுகத்திற்கு வரி என்பது கட்டாயமில்லை.

**2. சித்தநாயக்கன்பாளையம் மாகாளியம்மன் கோவில்**

ஊர்ப்பொதுக் கோவிலாக மாகாளி அம்மன் கோவில் உள்ளது. இந்தக் கோவிலை ஐந்து கிராமங்களைச் சார்ந்த பொதுமக்கள் வணங்குகின்றனர். அவை. சித்தநாயக்கன் பாளையம், செலக்கரிச்சல், இலட்சுமண நாயக்கன்பாளையம், வீரனப்பூசாரி பாளையம், திம்மநாயக்கன் பாளையம் ஆகியவை ஆகும்.

நாயக்கர்களின் கட்டுப்பாட்டில் தலைமுறை தலைமுறையாக நிர்வாகம் நடந்து வருகிறது. இக்கோவிலில் அருந்ததிய சமூகமக்கள் கோவில் சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்வது, செடிகளை வெட்டுவது, தூய்மை செய்வது போன்ற வேலைகளைச் செய்து வருகின்றனர். இக்கோவிலில் வைகாசி மாதம் தேர் இழுக்கும் திருவிழா நடைபெறும். அந்த நிகழ்ச்சியில் அனைத்து சாதியினரும் கலந்து கொண்டு தேர் இழுக்கலாம். அந்தத் தேர் அங்கு வாழும் உயர் சாதியினர் பகுதிகளுக்கு மட்டும் இழுத்துச் செல்லப்படும். அருந்ததிய சமூகம் வாழும் பகுதிக்குத் தேர் வராது. கோவிலுக்குள் அருந்ததியச் சமூகத்தினரைத் தவிர அனைத்து சாதியனரும் உள்ளே சென்று வழிபடலாம். அருந்ததியச் சமூகத்திற்கு மட்டும் அனுமதி இல்லை.

மாவிளக்கு எடுக்கும் நிகழ்ச்சியில் மாவிளக்கை கோவிலுக்கு வெளியே வைத்துத்தான் வழிபட்டுக் கொள்ள வேண்டும் என்பது கட்டுப்பாடாக உள்ளது. அருந்ததியச் சமூகத்திடம் வரி கேட்பதும் இல்லை, வரி வாங்குவதும் இல்லை. அருந்ததியச் சமூகமே கொட்டடிக்க வேண்டும் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை. அவர்கள் விருப்பப்பட்டுக் கொடுத்தால் வாங்கிக் கொள்ளவேண்டும்.

**3. அய்யம்பாளையம் (கரடிவாவி) மாரியம்மன் கோவில்**

இங்கு உள்ள மாரியம்மன் கோவில் அனைத்துச் சாதியினரும் வழிபடும் கோவிலாக உள்ளது. ஆனால் அது சிலகுறிப்பிட்ட கட்டுப் பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ளது. அது இன்றளவும் நடை முறையிலும் உள்ளது. பறையடிக்க பறையர் சமூகத் தினரையும், தீப்பந்தம் எடுக்க வண்ணான் சமூகத் தினரையும், சடங்குகள் செய்யப் பயன்படுத்து கின்றனர். அனைத்துச் சாதியினரும் கோவிலுக் குள்ளே செல்லலாம் வழிபடலாம். ஆனால் அருந்ததிய சமூகத்தினருக்கு மட்டும் அனுமதி மறுக்கப்படுகிறது. அதேபோல் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தாண்டி அதாவது கோவில் கம்பத்தைத் தாண்டி மாவிளக்கு எடுத்துச் செல்லக்கூடாது.

2002 ஆம் ஆண்டு நடந்த திருவிழாவில் மாவிளக்கு எடுத்துக்கொண்டு அருந்ததிய சமூகத்தினர் சென்றனர். ஆனால் அவர்கள் அந்தக் குறிப்பிட்ட இடத்தைத் தாண்டி மாவிளக்கு எடுத்துச் செல்ல முயலும்போது அருந்ததிய சமூகத்தினருக்கும், கவுண்டர் சமூகத்தினருக்கும் இடையே மோதல் ஏற்படுகிறது. இரு பிரிவினருக்கிடையே பெரிய கலவரம் ஏற்பட்டது. அங்கு வாழும் அருந்ததிய மக்கள் பொருளாதார ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் கவுண்டர் சமூகத்தினரையே நம்பியிருந்தனர்.

மேலும் பலர் பண்ணை வேலைக்கோ இதர வேலைகளுக்கோ கவுண்டர் சமூகத்தினரிடமே செல்ல வேண்டி இருந்தது. அச்சமயத்தில் அவர்களிடம் வேலைக்குச் செல்வதை நிறுத்தி விட்டார்கள். அதனால் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த சமயத்தில் பெரியார் இயக்கங்களும், அம்பேத்கர் இயக்கங்களும் மற்றும் பல அமைப்புகளும் நிதி திரட்டி ஊர் மக்களுக்கு உதவினர்.

இந்த சம்பவத்தை அடுத்து அருந்ததிய சமூக மக்கள் கொட்டடிப்பதை நிறுத்திவிட்டனர். அதனால் பக்கத்து ஊர்களில் இருந்து கொட்டடிக்க அருந்ததிய சமூக மக்களை வரவழைத்துக் கொட்டடிக்க வைக்கின்றனர். இப்பொழுது அவர்களே (பிற்படுத்தப்பட்ட சமூகம்) இன்றும் அடித்து வருகின்றனர். இறப்புச் செய்தி சொல்வது இறப்பு வீடுகளில் அனைத்து வேலைகளைச் செய்வதுபோன்றவற்றை நிறுத்திவிட்டனர்.

கவுண்டர் சமூகத்தவர்கள் இறந்தால் குழி தோண்டும் வேலையைக் காலம் காலமாக அவர்கள் சமூகத்தை சார்ந்தவர்களே குழிதோண்டிப் புதைத்துக் கொள்வார்கள் என்று அந்த ஊரைச் சார்ந்த முதியவர் கூறுகிறார். இன்றும் அருந்ததிய சமூக மக்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப் படுவதில்லை. அம்மக்களும் அக்கோவிலுக்குச் செல்லுவதில்லை.

**4. பொன்நகர் தேவாத்தாள் கோவில் - அல்லாலபுரம்-திருப்பூர்**

தேவாத்தாள் கோவில் அந்த ஊரின் பொதுக்கோவிலாக உள்ளது. இந்தக் கோவில் கவுண்டர் சமூகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. கோவில் திருவிழாவில் முதல்நாள் கவுண்டர் சமூகத்தினரும் அடுத்த நாள் அருந்ததிய சமூகத்தினர் மாவிளக்கு எடுக்க வேண்டும் என்று கோவில் கட்டுபாடாக உள்ளது. மேலும் அருந்ததிய சமூகத்தினர் கோவிலுக்குள் செல்ல அனுமதி இல்லை.

அது மட்டுமில்லாமல் வீட்டுக்கொருவர் கட்டாயம் கொட்டடிக்கவேண்டும். அதை மீறினால் அவர் எச்சரிக்கப்படுவார். வரி போன்றவை அருந்ததிய சமூகத்தினருக்குக் கட்டாயம் இல்லை. அங்கு வாழும் அருந்ததிய மக்கள் அவர்கள் பிள்ளை களிடம் கவுண்டர் சமூகத்தினரை எதிர்க்கக்கூடாது என்றும் நமக்கு விதிக்கப்பட்டுள்ள கோவிலின் விதிகளை மீறக்கூடாது என்றும் சொல்லி வளர்க்கின்றனர்.

மஞ்சள் நீராட்டு விழாவில் அந்தந்த சாதியினர் அந்தந்த சாதியினருக்குள்ளேயே விளையாடிக் கொள்ள வேண்டும். வேறு எந்த சாதியினருக்குடனும் விளையாட மாட்டார்கள். இந்த வருடம் 2017 மே மாதம் 11 ஆம் தேதி வியாழக்கிழமை அன்று இரவு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதைக் காண தெற்குப் பாளையத்தைச் சேர்ந்த அருந்ததிய சமூக இளைஞர்கள் 10 பேர் சென்றனர். நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது அங்கு நிறுத்தப்பட்டிருந்த கவுண்டர் சமூகத்தைச் சார்ந்த ஒருவரின் காரின் மீது சாய்ந்து கொண்டு, அருந்ததிய

சமூக இளைஞர் ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார். அதைக் கண்ட காரின் உரிமையாளரான கவுண்டர் சமூகத்தை சார்ந்தவர் அந்த இளைஞரைத் தாக்கியுள்ளார். இதன் காரணமாக அங்கு மோதல் ஏற்பட்டது.

தாக்கப்பட்ட அருந்ததிய சமூக இளைஞர்கள் பல்லடம் காவல் நிலையத்தில் வன்கொடுமை பிரிவில் வழக்குக் கொடுத்தனர். ஆனால் கவுண்டர் சமூகத்திற்கு ஆதரவாக இந்து மக்கள் கட்சியில் மாநில இளைஞர் அணி செயலாளர் குண்டு பரமசிவம் என்பவர் வந்தார். பேச்சுவார்த்தை என்ற பெயரால் அருந்ததியர்களை மிரட்டி, வழக்கைத் திரும்பப்பெறச்செய்தார்.

**5.செங்கத்துறை மாரியம்மன் கோவில் (சூலூர்)**

இங்கு அருந்ததியர் சமூகத்திற்கான மாரியம்மன் கோவில் ஒன்று உள்ளது. அந்தக் கோவிலின் ஒரு நிகழ்ச்சியாக மாரியம்மனை நீராட நொய்யல் ஆற்றுக்கு எடுத்துச் செல்வார்கள். அவ்வழியில் ஓதாளக் கவுண்டர் என்ற சமூகத் தினரின் குலதெய்வக்கோயில் ஒன்று உள்ளது. சென்ற ஆண்டு அக்கோவிலைச் சுற்றி கம்பிவேலியை அமைத்துவிட்டனர் அச்சமூகத்தினர். அதனால் மாரியம்மனை அவ்வழியில் எடுத்துச் செல்ல முடியவில்லை.

அருந்ததிய சமூகத்தைச் சார்ந்த ஒருவருக்கு சாமிவந்து (அருள்வந்து) மாரியம்மனை ஆற்றுக்கு எடுத்துச் செல்லத் தடையாக இருந்த அந்த கம்பிவேலியை பெயர்த்து வீசி சென்றுள்ளார். அதன் காரணமாக அவ்வூரில் 2017 மே 10, 11, 12 ஆகிய தேதியில் கலவரம் ஏதும் ஏற்படாமல் இருக்க காவலர்களைப் பாதுகாப்பிற்காகப் போடப் பட்டனர். மேலும் அவ்வூரில் பொதுக்கோவிலில் அருந்ததிய சமூகத்தினர் உள்ளே செல்லக்கூடாது.

அக்கோவில் கவுண்டர் சமூகத்தின் கட்டுப் பாட்டிலேயே உள்ளது. அருந்ததிய சமூக மக்கள் தொழில் ரீதியாக அங்குள்ள கவுண்டர் சமூகத் தினரையே நம்பியுள்ளனர். அருந்ததிய சமூகத்திற் கான மாரியம்மன் கோவிலின் வரி மற்றும் செலவு களை அவர்களே பார்த்துக் கொள்கின்றனர்.

**6. தெற்குப்பாளையம் மாரியம்மன் கோவில் (பல்லடம்)**

அந்த ஊர் மாரியம்மன் கோவிலை ஆறு ஊர்களைச் சார்ந்த பொதுமக்கள் வணங்குகின்றனர். அவை,மாணிக்காபுரம், இராசக்கவுண்டம் பாளையம், கல்லம்பாளையம், நாரணாபுரம், அம்மாபாளையம்,தெற்குப்பாளையம்

கோவிலின் நிர்வாகம் கவுண்டர் சமூகத்தின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. 13 வருடங்களுக்குப் பிறகு இந்த வருடம் 2017 வைகாசி மாதம் திரும்ப நடைபெற்றது. அவ்வூரில் திருவிழாவில் 13 வருடங்களுக்கு முன்பு பந்தம் எடுப்பதற்கு வண்ணார் சமூகத்தையும், கொட்டடிக்க அருந்ததிய சமூகத் தையும், சடங்குகளைச் செய்ய பயன்படுத்தினர்.

பொங்கல் வைப்பது, மாவிளக்கு எடுப்பது போன்ற நிகழ்ச்சியை முதல் நாள் கவுண்டர் சமூகத்தினர் செய்வார்கள். அடுத்தநாள்தான் அருந்ததிய சமூகத்தினர் பொங்கல் வைப்பது, மாவிளக்கு எடுப்பது போன்ற நிகழ்ச்சிகளைச் செய்து வந்தனர். ஆனால் இந்த வருடம் நடைபெற்ற விழாவில் அருந்ததிய சமூகத்தினரைப் பொங்கல் வைக்க வேண்டாம் என்றும் மாவிளக்கு எடுக்க வேண்டாம் என்றும் கவுண்டர் சமூகத்தினர் உத்தரவிட்டனர். சாமி கும்பிடச் சென்றாலும் கம்பத்தின் அருகே நின்றுதான் கும்பிடவேண்டும். உள்ளே சென்று கும்பிடக்கூடாது என்ற கட்டுப்பாட்டையும் விதித்தனர். எனவே அருந்ததிய சமூகத்தைச் சார்ந்த பாதிப்பேர் கோவிலுக்குச் செல்லவில்லை. திருவிழாவில் பங்கேற்கவில்லை.

**7.ப.வடுகபாளையம் (பல்லடம்)**

இந்த ஊரில் 3 கோவில்கள் உள்ளன.

1.மாகாளியம்மன் கோவில் உள்ளது.அது நாயக்கர் சமூகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

2.முனீஸ்வரன் கோவில் இது இந்த ஊரின் பொதுக்கோவிலாக உள்ளது. அது போயர் சமூகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

3.அண்ணமார் கோவில் இது அருந்ததிய சமூகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

**8.மாகாளி அம்மன் கோவில்:**

மாகாளியம்மன் கோவில் அனைத்து சாதியினரும் சென்று வழிபட அனுமதி உள்ளது. ஆனால் அருந்ததிய சமூகத்தினருக்கு மட்டும் அனுமதி இல்லை. 30 வருடங்களுக்கு முன்னாள் பஞ்சாயத்துத் தொலைக்காட்சி இருந்தது. அப்பொழுது தொலைக்காட்சியில் ஒளிபரப்பப் படும் நிகழ்ச்சிகளைக் காண அருந்ததிய சமூகத்திற்கு அப்பொழுது அனுமதி இருந்தது. அந்தத் தொலைக்காட்சியை எடுத்த பிறகு மெதுவாக பிற்காலத்தில் அனுமதியும், உரிமைகளும் மறுக்கப்பட்டது.

அந்தக் கோவில் நாயக்கர் சமூகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால் அனுமதி மறுக்கப் பட்டது. கோவில் உள்ளே அனுமதிக்காத காரணத்தால் அருந்ததிய சமூக மக்கள் அக்கோவிலுக்குச் சென்று வழிபடுவதை நிறுத்திவிட்டனர்.

**9.முனீஸ்வரன் கோவில்:**

போயர் சமூகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் இக்கோவில் அனைத்து வகையான சாதியினருக்கும் பொதுக்கோவிலாக உள்ளது. இரண்டு ஆண்டு களுக்கு ஒருமுறை இக்கோவிலில் திருவிழா நடைபெறும். இத்திருவிழாவில் பன்றி குத்துதல், கிடா வெட்டுதல், கோழி அறுத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். பறையர் சமூகத்தினரே கொட்டடிக்கின்றனர். கோவிலுக்குப் பன்றிகளை நேந்துவிடுவது, ஒரு குறிப்பிட்ட சில சாதிகள் மட்டும் நேர்ந்துவிடுவார். கவுண்டர், நாயக்கர் போன்ற சாதியினர் கோவிலுக்கு நேர்ந்து விடுவதில்லை.

கோவிலுக்கு நேர்ந்துவிடும் பன்றிகளை வளர்ப்பதும், நேர்ந்துவிடுவதும் போயர்,

அருந்ததியர், குறவர் போன்ற சாதியினர்களே. பன்றிகளைக் குத்தும் பூசாரி போயர் சமூகத்தைச் சார்ந்தவரே. கொல்லப்பட்ட பன்றிகளைச் சுத்தம் செய்வதும், கறியை விற்பனை செய்வதும் குறவர் சாதியினரே ஆவார்.

மஞ்சள்நீரராட்டு விழாவில் அந்தந்த சாதியினருக்குள்ளேயே விளையாடிக் கொள்ளவேண்டும். மஞ்சள்நீரராட்டு விழாவில் ஊர்வலமாக எடுத்து வரும் நிகழ்ச்சி போயர் சமூகத்தின் பகுதியிலே நடைபெறும். இந்தக் கோவிலின் வரியும், நிர்வாகமும் போயர் சமூகத்தினரே செய்து வருகின்றனர்.

**10.அண்ணமார் கோவில்:**

இக்கோவில் நிர்வாகம் கட்டுப்பாடு அருந்ததிய சமூகத்தினரிடையே தான் உள்ளது. அருந்ததிய சமூகத்தைத் தவிர வேறு எந்த சாதியினரும் வழிபட வருவதில்லை. இக்கோவில் பூசாரி அருந்ததிய சமூகத்தைச் சார்ந்த ஒருவர் தான் உள்ளார். அவர்களின் வாரிசே அடுத்து பூசாரியாக நியமிக்கப் படுவார்கள்.

கோவில் நிதி பெரிய வசதி உடைய சாதியினரிடம் பெற்றுக்கொள்வார்கள். கோவில் வரியை அருந்ததிய சமூகத்தினர் நிர்ணயிக்கப்பட்ட தொகையை கட்டாயம் கொடுக்க வேண்டும். இந்த வரிப்பணத்தில்தான் கோவிலுக்கான பன்றிகளும் மற்றும் ஆடுகளும் வாங்குவார்கள். அந்த பன்றியை அருந்ததிய சமூகத்தைச் சார்ந்த ஒருவர்தான் குத்துவார். அதேபோல் ஆடுகளையும் நியமிக்கப் பட்ட பூசாரி ஒருவர்தான் வெட்டுவார். கொல்லப் பட்ட பன்றிகளைச் சுத்தம் செய்து பல கூறுகளாகப் பிரித்து வைப்பார்கள். இக்கூறுகள் வரி கொடுத்தவர் களின் வீடுகளுக்கு மட்டுமே கொடுக்கப்படும்.

கொல்லப்பட்ட பன்றிகளை சுத்தம் செய்வதும், விற்பனை செய்வதும் குறவர் சாதியினர் ஆவார்கள். கடவுள் சிலைகளை மண்பாண்டங்கள் செய்யும் குயவர் சமூகத்தினரிடம் வாங்கி வருவார்கள். மற்ற கோவில்களைப்போல பறை அடிக்க ஒரு சாதி, பந்தம் பிடிக்க ஒரு சாதி இல்லை. கொட்டடிப்பதும், பந்தம் பிடிப்பதும் அருந்ததிய சமூகத்தினரே செய்து கொள்வார்கள். இவ்விழாவை அருந்ததிய சமூகத்தினர் மட்டுமே கொண்டாடு வார்கள் வேறு எந்த சாதியினரும் கொண்டாடு வதில்லை.

மேற்கூறிய அனைத்துக் கோவில்களிலும் திருவிழாவிற்கான தேதி குறிப்பதும், நல்ல நேரம் பார்ப்பதும், குடமுழுக்கு செய்வதற்கு ஐயரிடமே (பார்ப்பனர்) செல்கின்றனர்கள். ஐயரிடம் (பார்ப்பனர்) கேட்காமல் எந்த நிகழ்ச்சியும் கோவில்களில் செய்வதில்லை. ஐயரிடம் (பார்ப்பனர்) கேட்காமல் எந்த விழாவும் யாரும் செய்யமாட்டார்கள்.

## தாழ்த்தப்பட்டோரை அனுமதிக்காத நாட்டார் தெய்வ, சிறுதெய்வக் கோவில்கள்

**பல்லடம் வட்டம்**

1.சுக்கம்பாளையம் மாகாளியம்மன் கோவில்

இந்தக் கோவிலில் உள்ள மேலும் சில தீண்டாமை வகை: மதுவிற்காகத் தாழ்த்தப் பட்டோர்களைப் பறை அடிக்கச் சொல்லுதல். கோயிலுக்கு வெளியே உள்ள திண்ணையில் பிற்படுத்தப்பட்ட(கவுண்டர்) சமூகத்தினர் அமர்ந்து கொண்டு வேடிக்கைப் பார்த்தல். தாழ்த்தப் பட்டோர்கள் நின்ற படியோ, கீழே உட்கார்ந்தப் படியோ (பந்தலுக்கு வெளியே) தான் பார்க்க வேண்டும். தேர், மாவிளக்கு இரு பகுதிகளில் இருந்தும் எடுத்து வருவார்கள். அது தலித்துகள் மட்டும் வெளியே நின்று கும்பிட்டு செல்ல வேண்டும். இதுபோன்று பல தீண்டாமைக் கொடுமைகள் உள்ளன. தமிழர் திருநாளான தைத்திருநாளில் அனைத்து சாதியினரும் ஒன்றாக சென்று பூப்பறிக்கும் விழாவில் தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிப்பதில்லை.

2. செம்மிபாளையம் மாரியம்மன் கோவில்

3. இலட்சுமி மில்ஸ் (கே.என். புரம்), மாரியம்மன் கோவில்

4. சாமிக்கவுண்டன்பாளையம் மாரியம்மன் கோவில்

5. கோடங்கிபாளையம் மாரியம்மன் கோவில்

6. கல்லம்பாளையம் முனியப்பன் கோவில்

**பொங்கலூர் வட்டம்**

7. பொங்கலூர் கண்டியம்மன் கோவில்

**திருப்பூர் மாநகரம்**

8. கரியகாளியம்மன் கோயில், 15 வேலம்பாளையம்

இந்தக் கோவிலில் உள்ள மேலும் சில தீண்டாமை வகை: மத்தளம், மைக் செட், பந்தம் வைத்தல் ,தனியாக உட்காரவைத்தல் போன்றவை.

9. சிறுபூலுவப்பட்டி பட்டதரசி அம்மன் (அம்மன் கலையரங்கம்)

10. சிறுபூலுவப்பட்டி விநாயகர் கோவில்

11. காவிரிபாளையம் மாரியம்மன் கோவில்

12. சாமுண்டிபுரம் மாரியம்மன் கோவில்

13. அணைப்பாளையம் மாகாளியம்மன் கோவில் (கொங்கு கலையரங்கம்)

14. வளையங்காடு, மாகாளியம்மன் கோவில்

15. மாஸ்கோ நகர் மாரியம்மன் கோவில்

16. மரக்கடை விநாயகர் கோவில்

17. டி.என்.மேட்டுப்பாளையம் வெக்காளியம்மன் கோவில்

18. குமாரசாமி நகர் மாரியம்மன் கோவில்

19. தாராபுரம் ரோடு, உஷா தியேட்டர் அருகிலுள்ள கோட்டை மாரியம்மன் கோவில்

20. இடுவாய் பாரதிபுரம் கோட்டைமாரியம்மன் கோவில்

21. இடுவாய் பெரியமாரியம்மன், சின்னமாரியம்மன் கோவில்

22. இடுவம்பாளையம் காமாட்சியம்மன் கோவில்

உடுமலை வட்டம், குடிமங்கலம் ஒன்றியம்

23. கொட்டையம்பாளையம் மாரியம்மன் கோவில்

**கோவை மாநகராட்சி**

24. அவிநாசி மெயின் ரோடு, A.G.புதூர், மாரியம்மன் கோவில்

**கோவை மாவட்டம் இருகூர் பேரூராட்சி:**

25. காமாட்சிபுரம் காமாட்சி அம்மன் கோவில்

இந்தக்கோவில் தேவர் சமூகத்தினர் கட்டுப் பாட்டில் இருந்தது. இப்போது இந்துசமய அற நிலையத்துறையின் கட்டுப்பாட்டுக்கு 4 வருடத்திற்கு முன்பு வந்தது. இப்போது அர்ச்சகரால் கோவில் பூஜைகள் செய்யப்பட்டு வருகிறது. அறநிலையத் துறை கட்டுப்பாட்டுக்கு வந்தும் இன்னும் தாழ்த்தப் பட்ட மக்கள் உள்ளே சென்று வணங்க அனுமதி யில்லை. மற்ற அனைத்து சமூகத்தினரும் வணங்கு கிறார்கள்.

**கோவை மாவட்டம், சூலூர் வட்டம்**

26. இராவத்தூர் மாரியம்மன் கோவில்

12 ஆண்டுகளுக்கு இந்துசமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற கோவில். இந்தக் கோவிலுக்குள் மிகவும் பிற்படுத்தப் பட்டோர், தாழ்த்தப்பட்டோர் அனைவரும் வணங்கலாம் என்ற உத்தரவு இருந்தும் அவர்கள் உள்ளே சென்று வணங்குவதில்லை. அதற்கு அவர்கள் கூறும் காரணம், காலம்காலமாக வெளியே நின்று வணங்கிப் பழகி விட்டோம். உள்ளே சென்று வணங்க, அச்சமாக இருக்கிறது.

27. கண்ணம்பாளையம் கண்ணமையம்மன் கோவில்,

28. கண்ணம்பாளையம் மாகாளியம்மன் கோவில்.

இரண்டு கோவில்களும் ஊர்க்கவுண்டர் களின் கட்டுப்பாட்டில் உள்ளன. கண்ணமையம்மன் கோவிலில் உள்ளே சென்று வணங்க அனுமதி யில்லை. மாகாளியம்மன் கோயில் வருடாவருடம் ஆடிமாதத்தில் தேர்த்திருவிழா ஊர்பவனி வரும். இதில் தாழ்த்தப்பட்டவர்கள் தேர் இழுக்க அனுமதி யில்லை.

29 சூலூர்-அரசூர் சாலையில் உள்ள முத்துகவுண்டன் புதூர் அங்காத்தாள் கோவில்

சுத்துப்பட்டி ஆறுகிராம மக்களுக்கான கோவிலாக வணங்கப்பட்டு வரும் இக்கோவிலில் ஆறுகிராம தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிலுக்கு உள்ளே சென்று வணங்க அனுமதியில்லை. இந்த கோவிலுக்கு அருகில் சுவாமி விவேகானந்த பவுண்டேஷன் என்ற பெயரில் ஒரு அமைப்பு இயங்கி வருகிறது. இந்த அமைப்பின் மூலமாக வருடாவருடம் 1008 விளக்கு பூஜை விவேகானந்த பவுண்டேஷன் சார்பாக நடத்தப்படுகிறது. இதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அனுமதி இல்லை. அதேபோல் தீக்குண்ட வழிபாடும் வருடாவருடம் நடக்கும். இதில் பிற்படுத்தப்பட்டோர் முதலில் இறங்க வேண்டும். பிறகு தான் இதர சாதியினர் இறங்க வேண்டும்.

- 36 ஆம் பக்க தொடர்ச்சி

சாதியார் அனுமதிப்ப தில்லை. சடங்கியல் தளத்திற்கு முன்பாகவே இவர்களின் சாதியப் படிநிலை எல்லை வரையறை செய்யப் படுகின்றது. இதற்கு சமயம்சார்ந்த நம்பிக்கையே காரணமாக அமைகின்றது. மேளச்சத்தம், உருமிச் சத்தம், உலக்கைச் சத்தம் ஆகியவற்றை அய்யனார் விரும்புவதில்லை. எனவே தான் இச்சத்தங்கள் கேட்காத தொலைதூரத்தில் அவர் அமர்ந்துள்ளார் எனக்கூறுகின்றனர்.

அய்யனர் வழிபாட்டுச் சடங்கில் பறையர், சக்கிலியர் சாதியினரே மேளம் அடிப்படி வழக்கம். இவர்களின் சாதியப் படிநிலை எல்லையை வரையறுப்பதற்காகவே மக்கள் இந்த நம்பிக்கையினை ஏற்படுத்தியிருக்கின்றனர். அதோடு பள்ளரைவிட பறையர், சக்கிலியர் சாதியின் தாழ்ந்த படிநிலை கொண்டவர்கள் என்பதனைச் சடங்கியல்வெளி நமக்கு உணர்த்துகின்றது.

அய்யனார் வழிபாட்டுச் சடங்குகளில் ஆதிக்கச் சாதியினர் பங்கேற்கும் உறவும், தாழ்த்தப்பட்ட சாதியினர் பங்கேற்கும் உறவும் வாழ்வியல் படிநிலை அமைப்பின் படியே அமைகின்றது எனலாம். இந்த எல்லை அனுமதிப்பு உறவானது அய்யனார் கோவிலின் சடங்கு நாளில் மட்டுமே செயல்படுத்தப் படுகின்றது. சடங்கு நிகழ்வுகள் அல்லாத காலங்களில் தாழ்த்தப்பட்ட சாதியினர் அய்யனார் சந்நிதானத்தின் முன்புவரை இயல்பாகச் செல்லலாம்.

இதுவே பெருந்தெய்வக் கோவிலுக்கும், நாட்டார் தெய்வக் கோவிலுக்குமான மிக முக்கியமான வேறுபாடு ஆகும். எனவே சாதியப் படிநிலை அமைப்பு, ஆண்டுக்கொருமுறை விழாக்களின் மூலம் மீண்டும் புதுப்பிக்கப் படுகிறது எனலாம்.

– ரெ.முத்துராஜன், அய்யனார் வழிபாடு நூல்

ஆரியப் பார்ப்பனர்களின் நிறுவனமயப் படுத்தப்பட்ட - ஆகம வழிப்பட்ட - அதிகார மய்யங் களாகத் திகழும் கடவுள்களின் கோவில்களின் நோக்கம் என்னவோ - அதையே தான் அவற்றுக்கு எதிரானவை என்று கூறப்படும் நாட்டார் தெய்வங் களும், குல தெய்வங்களும், சிறு தெய்வங்களும் செயல் படுத்துகின்றன. இரண்டு வகை தெய்வங் களின் இலக்கும் ஒன்றுதான். இந்துமத வேதங்கள், சாஸ்திரங்கள், அவை உருவாக்கிய சம்பிரதாயங்கள், பண்பாடுகளைக் காப்பது என்பதே இரண்டு வகை வழிபாடுகளின் நோக்கம். எனவே, பெருந் தெய்வங்கள், சிறுதெய்வங்கள், குலதெய்வங்கள் ஆகிய அனைத்தையும் அழிப்பதுதான் ஜாதி ஒழிப்பாளர்களின் முதல் பணியாக இருக்க வேண்டும்.

# முதலில் அழிக்கப்பட வேண்டியவை

# சிறுதெய்வங்களும், நாட்டார் தெய்வங்களுமே!

உத்திரப்பிரதேசத்தில் மிகப் பெரும் பான்மையான இடங்களைக் கைப்பற்றி யோகி ஆதித்யாநாத் சாமியார் தலைமையில் ஆட்சி அமைத்தபின் உ.பி யில் அதிகப் படியான ஜாதிக்கலவரங்கள் நடைபெறுகின்றன. அதைக் கண்டித்து ராஜ் பப்பர் என்ற மாநில காங்கிரஸ் தலைவர் அறிக்கை வெளியிட்டதையும், சஹறான்புரில் நடைபெற்ற மிகப்பெரிய ஜாதியத் தாக்குதலைக் கண்டித்தும் டில்லியில் தலித் மக்கள் போராடியதையும் செய்தி ஏடுகள் வழியாக அறிகிறோம்.

அது உ.பி யில் மட்டும் நடைபெறும் அவல மல்ல. மோடியின் மோடிமஸ்தான் வேலையால் வட நாட்டில் நடைபெறும் அனைத்து தேர்தல்களிலும் பா.ஜ.க வே வெற்றி பெறுகிறது என்ற செய்தி இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் மத வெறியர்களுக்கு இணையாக ஜாதி வெறியர்களும் ஆனந்தக் கூத்தாடி ஜாதி, மதக் கலவரங்களைத் திட்டமிட்டு நடத்தி வருவதும் நம்மைக் கவலை கொள்ளச் செய்கிறது.

இந்த நிலையில், சிவன், முருகன், விநாயகன், வள்ளி, தெய்வானை, மீனாட்சி, இலட்சுமி, விசாலாட்சி போன்றவை பார்ப்பனக் கடவுள்கள், கோவில்கள் என்றும் மாரியம்மன், காளியம்மன், மங்கயம்மன், துர்க்கையம்மன், பட்டத்தரசி அம்மன், வீரமாத்தி அம்மன், அங்காளம்மன் இவை யெல்லாம் பார்ப்பனர்களுக்கு எதிரான கடவுள்கள் என்றும் தரம் பிரித்து, ஜாதியைப் பாதுக்காக்கும் பணியை தமிழகத்திலுள்ள தமிழ்த் தேசியக் கம்பெனிகளும் பொதுவுடமை இயக்கங்களும் செவ்வனே செய்து வருகின்றன.

பெரியாரின் பேருழைப்பால் பார்ப்பனக் கோவில்களில் ஒட்டுமொத்தப் பார்ப்பன அல்லாத மக்களும் கருவறை நீங்கலாக உள்நுழைய உரிமை பெற்றார்கள். அந்தக் கோவில்களில் எல்லாம் கருவறை அருகில் வரை சென்று வழிபடலாம். ஆனால் தமிழர்களின் வம்சாவழி தெய்வங்கள் என்று கூறிக்கொள்ளும் மாரியம்மன், காளியம்மன் உள்பட சிறுதெய்வ, நாட்டார் தெய்வக் கோவில் களில் தலித் மக்கள் உள் நுழைந்து வழிபட உரிமை உள்ளதா என்றால், 100 சதவிகிதம் இல்லை என்பதை நடைமுறை வாழ்க்கையிலிருந்து நாம் அறிய முடிகிறது.

தேநீர்க்கடைகளிலும், முடிதிருத்தகங்களிலும் பொதுவீதிகளிலும், சுடுகாடுகளிலும் உரிமை வேண்டிப் போராடும் தலித்மக்களும் - கிராமக்கோவில்களில் நுழைய வேண்டும் என்ற உணர்வில்லாமல் - இது நம்ம தலைவிதி, பூர்வஜென்ம பாவம் என்றும் நமக்காகத் தனியாகக் கோவில் உள்ளது, அவர்களின் கோவில்களில் நுழையக் கூடாது, மீறி நுழைந்தால் சாமிக் குத்தமாகிவிடும் என்றும் மூளைக்கு இட்ட விலங்கால் முடங்கிக் கிடக்கிறார்கள். இங்குதான் பார்ப்பனியம் இந்துத்துவாவின் வெற்றியே உள்ளது.

பார்ப்பனக் கடவுள்களின் கோவில்களில் கருவறைக்கு மட்டும் செல்ல முடிய வில்லை. அங்கு பிற்படுத்தப்பட்டவரும், தாழ்த்தப்பட்டவரும் ஒரே நிலைதான். ஆனால், சிறுதெய்வ, நாட்டார் தெய்வங்களின் கோவில்களில் தலித் மக்கள் அவற்றின் சுற்றுச் சுவரைக்கூட நெருங்க முடியாத நிலைதான் உள்ளது. தமிழர் பண்பாடு, பாரம்பரியம் என்று கூறப்படும் சிறுதெய்வ, நாட்டார் தெய்வக்கோவில்கள் பிற்படுத்தப்பட்டவருக்கு அடிமைச்சேவகம் செய்யும் நிலையில் தாழ்த்தப் பட்டவரைக் கொண்டு நிறுத்தும் களங்களாகவே இயங்குகின்றன.

சிறுதெய்வ, நாட்டார் தெய்வ, கிராமக் கோவில்களிலும், அதற்காக கொண்டாடப்படும் திருவிழாக்களிலும் தான் ஜாதிமுறை அப்படியே நிலைநிறுத்தப்படுகிறது. சிவன், விஷ்ணு, பிரம்மா போன்ற பார்ப்பனக்கடவுள்களாலும், மாரியம்மன் காளியம்மன் பகவதியம்மன் வஞ்சியம்மன், மங்கையம்மன், போன்ற சிறுதெய்வங்களானாலும் அவை அனைத்தும் அளித்து ஒழிக்கப்பட வேண்டியவையே. ஜாதிகள் ஒழிய வேண்டுமானால் முதலில் நடக்கவேண்டிய புரட்சி எதுவென்றால், கிராமத்து தெய்வங்களையும் கோவில்களையும், சிறுதெய்வங்களையும், நாட்டார் தெய்வங் களையும் அழித்து ஒழிப்பதே ஆகும்.

**திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டத்தில் தாழ்த்தப்பட்டோரை அனுமதிக்காத சிறுதெய்வ - நாட்டார் தெய்வ - கிராம தெய்வங்களின் பொதுக் கோவில்களின் பட்டியல்.**

1.சாலைப்புதூர் காளியம்மன் கோவில்
2.சாலைப்புதூர் பகவதி அம்மன் கோவில்
சாலைப்புதூர் விநாயகர் கோவில் (இங்கு அருந்ததியர் களுக்கு அனுமதி இல்லை, பள்ளர்களுக்கு அனுமதி உண்டு)
3.புது அத்திக்கோம்பை காளியம்மன் கோவில்
4.கே. அத்திக்கோம்பை காளியம்மன் கோவில்
5.கே. அத்திக்கோம்பை மாரியம்மன் கோவில்
6.பெயில்நாயக்கன்பட்டி காளியம்மன் கோவில்
7.ஒட்டன்சத்திரம் காந்தி நகர் காளியம்மன் கோவில்
8.ஒட்டன்சத்திரம் காந்திநகர் பகவதி அம்மன் கோவில்
9.தும்மிச்சம்பட்டி முத்தாளம்மன் கோவில் (ஒட்டன்சத்திரம் நகரம்)
10.நாகணம்பட்டி காளியம்மன் (ஒட்டன்சத்திரம் நகரம்)
11.ஒட்டன்சத்திரம் நகரம் ஏ .பி .பி. நகர் அரசு வீட்டு வசதிக்குடியிருப்பு விநாயகர் கோவில்
12.விருப்பாட்சி காளியம்மன் கோவில்
13.விருப்பாட்சி மாரியம்மன் கோவில்
14.சத்திரப்பட்டி காளியம்மன் கோவில்
15.கணக்கன்பட்டி காளியம்மன் கோவில்
16.கணக்கன்பட்டி மாரியம்மன் கோவில்
17.புதுச்சத்திரம் காளியம்மன் கோவில்
18.செம்மட்டைப்பட்டி காளியம்மன் கோவில்
19.கள்ளிமந்தையம் காளியம்மன் கோவில்
20.கள்ளிமந்தையம் துக்கையம்மன்
21.கரியாம்பட்டி அங்காள ஈஸ்வரி கோவில்
22.பொருளூர் மங்கையம்மன் கோவில்
23.பொருளூர் காளியம்மன் கோவில்
24.கொ. கீரனூர் மல்லிஸ்வரன் கோவில்
25.வல்லக்குண்டாபுரம் மாரியம்மன் கோவில்
26.தொப்பம்பட்டி உச்சிமாகாளியம்மன் கோவில்
27.வாகரை ஈஸ்வரன் கோவில்
28.வாகரை பெருமாள் கோவில்
29.வாகரை துக்கையம்மன் கோவில்
30.வாகரை பாப்பம்மாள் கோவில்
31.கூத்தம்பூண்டி ஈஸ்வரன் கோவில்
32.கூத்தம்பூண்டி அத்தனுர் அம்மன் கோவில்
33.அப்பிபாளையம் அங்காளம்மன் கோவில்
34.தங்கச்சியம்மாபட்டி காளியம்மன் கோவில்
35.தங்கச்சியம்மாபட்டி கரை மாரியம்மன் கோவில்
36.ஐ.வாடிப்பட்டி காளியம்மன் கோவில்
37.ஐ.வாடிப்பட்டி விநாயகர் கோவில்
38.பருத்தியூர் அம்மன் கோவில் (அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது)
39.புளியம்பட்டி காளியம்மன் கோவில்
40.அம்பிளிக்கை சௌடம்மன் .காளியம்மன் கோவில்
41.அம்பிளிகை விநாயகர் கோவில்
42.முத்தனம்பட்டி காளியம்மன் கோவில்

# இந்து மதக் கடவுள்களை வணங்கக் கூடாது



**தோழர் அம்பேத்கர்**

பம்பாய் மாகாண மகர் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி நமது சகோதரர்களும் சகோதரிகளும் இந்துமத விழாக்களைக் கொண்டாடக் கூடாது. இந்துமதச் சடங்குகளைக் கடைபிடிக்கக்கூடாது. மத ஒழுக்கங்களை, உண்ணா நோன்புகள் போன்றவற்றைப் பின்பற்றக் கூடாது...

..இந்து மதத்தை ஒட்டிய எல்லா விழாக்களையும், புனித நாட்களையும் நாம் இதுவரை பின்பற்றினோம். இனி அவற்றைக் கைவிட வேண்டும். இந்து மதச் சடங்குகள் மத அடிப்படையிலும் சரி, தர்ம நியாய அடிப்படையிலும் சரி சரியானவையா என்னும் பிரச்சினையை நாம் ஆராய வேண்டும். சில சடங்குகள் கேலிக் கூத்தாக விளங்கு கின்றன. சான்றாக ஒவ்வொரு திங்கட்கிழமையும் (பகவான்) சங்கரர் பெயரில் சிலர் உண்ணா நோன்பு இருக்கிறார்கள்.

சங்கரருடைய லிங்கம் எதுவென்று யாராவது சிந்தித்ததுண்டா? அது வேறு ஒன்றுமில்லை. ஆண் பெண் சங்கமத்தின் குறியீடுதான். இத்தகைய அருவருக்கத்தக்க விஷயங்களை நாம் பாராட்டிக் கொண்டிருக்க வேண்டுமா? ஓர் ஆணும் பெண்ணும் தெருவில் பகிரங்கமாக நாய்களைப் போல் கலவி செய்வார்களேயானால் அந்தக் கலவியை நாம் மலர்கள் தூவியா வணங்குவோம். காலணிகளை எடுத்து வீச மாட்டோமா? அதே காரியத்தை சிவனும், பார்வதியும், பகிரங்கமாகச் செய்யும்போது வணங்குவது சரியா?

கணபதியின் கதையும் இதேதான். ஒரு முறை பார்வதி நிர்வாணமாகக் குளித்துக் கொண்டிருந்தார். சங்கரர் வெளியே போயிருந்தார். இடையூறு எதுவும் இல்லாமல் இருப்பதற்காக பார்வதி தம்முடைய மேனி அழுக்கு களையெல்லாம் திரட்டி அதைக் கணபதியாக வெளியில் காவலில் நிறுத்தி இருந்தார். இந்தத் துர்நாற்றமடிக்கும் அழுக்குருண்டையைக் கடவுள் என்று நம்பலாமா? கடவுள் களங்கமற்ற புனித உருவாகத் திகழ வேண்டாமா? இந்துக் கடவுள்கள் எல்லாருமே விசித்திரமானவர்கள். எனவேதான் சொல்கிறேன் அவர்களை வணங்காதீர்கள்.

- 27 .8. 1938

பந்தரா நகராண்மைக் கழகத்தில் ஆற்றிய உரை

# மாரியம்மன் பண்டிகை

# காட்டுமிராண்டித்தனம்

மக்கள் மாரியம்மன் பண்டிகையின் பேரால் காட்டுமிராண்டித்தனமாக தப்புகளைக் கொட்டிக் கொண்டும் மலைவாச லம்பாடிகள் ஆடுவது போன்ற ஆட்டங்களையும் ஆடிக்கொண்டும் கீழ் மக்கள் நடப்பதுபோன்ற வேஷங்களைப் போட்டுக் கொண்டும், ஆபாசமான பேச்சுகளைப் பேசிக் கொண்டும், ஆயிரக்கணக்கான ரூபாய்களை பாழாக்கிக்கொண்டும் செய்துவரும் அக்கிரமம் இந்த நாட்டில் அறியாதார் யாரும் இல்லை.

இது நாளாக நாளாக அதிகமாகின்றதே தவிர



மக்களுக்கு அறிவு வந்து, இந்த பழயகால நிலைமை சிறிதாவது மாறி இருக்கின்ற தென்று சொல்லு வதற்கே இல்லை.

முழுமுதற் கடவுளென்று சொல்லப்பட்ட விஷ்ணு, சிவன் என்கின்ற கடவுள்களின் "பாடல் பெற்ற ஸ்தல" உற்சவம் பூசை முதலியவைகள் எல்லாம் கூட இப்பொழுது பெரிதும் குறைந்து வருகின்றன. இந்த உற்சவ வரும்படிகளும் சரி பகுதிக்கு குறைந்தும் வருகின்றன.

ஒரே கடவுள் என்று சொல்லுகின்ற அல்லாசாமியின் உற்சவமும் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது. ஆனால் இந்தமாரிகருப்பன், காத்த வராயன் என்று சொல்லப்பட்ட "கீழ்த்தர பரிவார தேவதைகள், என்று சொல்லப்படும் சாமிகளின் பக்தர்கள் செய்யும் ஆர்ப்பாட்டம் இப்போது அளவுகிடையாது. இந்த "தேவதைகளை" வணங்குவதும் இவைகளுக்கு உற்சவம் செய்வதும் கீழ் மக்களாயிருப்பவர்களது செய்கை என்று அனேக சைவ வைணவ பண்டிதர்கள் எழுதி இருக்கின்றார்கள். அன்றியும் மாரி என்றால் என்ன அது எப்படிப்பட்ட தெய்வம் அதன் கதை என்ன என்பது யாருக்காவது தெரியுமா? அது அறிவுள்ள மக்களால் ஒப்புக் கொள்ளக் கூடியதா? என்று பார்த்தால் அது கடைசியில் சைபராகத்தான் முடியும்.

இம் மாதிரி அர்த்தமற்றதும் அனாகரீக மானதும் காட்டுமிராண்டித்தனமானதுமான காரியங்களை மதத்தின் பேரால், கடவுள்களின் பேரால் சற்றும் மான வெட்க மில்லாமல் செய்து கொண்டிருக்கின்ற மக்கள் நம்மை நாஸ்திக மென்றும், மத தூஷணை என்றும், கடவுள் தூஷணை என்றும் சொல்லுவது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. இந்த லட்சணத்தில் இந்த மாரியாயி என்கின்ற சாமிகள் ஒரு ஊருக்கு இரண்டு மூன்று இருந்துகொண்டு ஏககாலத்தில் உற்சவம் செய்து சிறுபிள்ளைகளின் புத்தியை மூடமாக்கி அவர்களையும் காட்டுமிராண்டிகள் போல குதிக்கும்படி செய்வது மிகவும் அக்கிரமமான காரியமாகும். இதற்கு வியாபாரிகள் என்று சொல்லப்படுவோர்கள் கடைகடைக்கு 10-ம் 5-ம் கொடுத்து இதை வளர்ப்பது என்பது அதி மூடத்தனமும் அக்கிரமுமான காரியமாகும்,

மற்றும் இப்படிப்பட்ட காரியங்கள் பொது ஜனங்கள் சுகாதாரத்திற்கு எவ்வளவு கெடுதி என்றும் கட்சிப்பிரதி கட்சிகளால் பொதுஜன அமைதிக்கு எவ்வளவு பங்கம் என்றும் நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

உதாரணமாக ஈரோட்டில் 3 மாரியம்மன்கள் உண்டு. இவைகள் கட்சி யில்லாமல் நடந்த காலமே அருமை. தவிர ஒவ்வொரு கோவிலும் ஊருக்குள் வீடுகளுக்கு மத்தியில் இருக்கின்றது. உற்சவ காலத்தில் இரவு எல்லாம் தப்புக்கொட்டுவது அக்கம் பக்கத்திய ஜனங்களுக்கு தூக்கம் இல்லாமல் செய்துவிடுகிறது. இவற்றுள் ஒன்று குழந்தைகள் பெண்கள் ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் இருக்கிறது. இதற்குப் பெரிய மாரியம்மன் என்று பெயர். இந்த கோவிலில் தப்பட்டை அடிப்பதால் ஆஸ்பத்திரி

வியாதியஸ்தர்களுக்கு அதிக தொல்லை உண்டு. ஆதலால் இந்த வருஷம் ஆஸ்பத்திரி நிர்வாகஸ்தர் சர்க்காருக்கு விண்ணப்பம் போட்டு இரவு பத்து மணிக்கு மேல் கோவிலில் தப்புக் கொட்டக்கூடாது என்ற உத்திரவை கோவில் அதிகாரிகளுக்கு சார்வு செய்திருப்பதாய்த் தெரிகின்றது. இந்தப் பெரிய மாரி இந்த உத்திரவு போட்டவர்களையும் கேட்டவர் களையும் என்ன செய்யுமென்பது இனிமேல் பார்க்கக் கூடிய விஷயமானாலும் இந்த உத்திரவை நாம் இப்போது மனமார வரவேற்கின்றோம்.

**போலீசுக்கு ஒரு வார்த்தை**

கடைசியாக போலீசுக்கு ஒரு வார்த்தை. இந்த பண்டிகையை உத்தே சித்து வாலிபர்களில் பலர் பலவித ஆபாசமான வேஷம் போட்டு பொது ஜனங்களை பணம் கொடுக்கும்படி தொந்திரவு செய்வதும் குடித்து விட்டு கண்டபடி தப்புக் கொட்டிக்கொண்டு ஆபாசமான வார்த்தைகளைப் பேசிக் கொண்டு திரிவதுமான காரியங்களை போலீசார் கவனித்து நியூ சென்சுக்கு சார்ஜ் செய்வதன் மூலம் இக்காரியங்களைச் செய்தால் அதனாலும் வாலிபர்களுக்கு பல நன்மைகள் ஏற்படும் என்றும் இப்படிச் செய்வதையும் மனமார வரவேற்போம் என்றும் தெரிவித்துக்கொள்ளு கிறோம்.

தோழர் பெரியார், குடி அரசு - 02.04.1933

**மதமும், கடவுளும் மனிதனை முட்டாளாக்கும் கருவிகள்**

மனிதனுக்குள் கடவுளைப் புகுத்துவது மனிதனை முட்டாளாக்கும் டானிக் (வைட்டமின் சத்து) ஆகும். இதை இன்று பார்ப்பனர்கள், சங்கராச்சாரிகள் கடவுள் பிரசாரம் செய்வதில் எடுத்துக் கொள்ளும் முயற்சியில் இருந்தே தெரிந்து கொள்ளலாம்.

கடவுள் மனித நலத்துக்காகக் கண்டு பிடித்த சாதனம் அல்ல. மனிதனை முட்டாளாக்குவதற்குப் பயன்படுத்தும் சாதனமேயாகும். சூரியனை, சந்திரனை நெருப்பை, நீரை, காற்றை, கல்லை, மண்ணை எந்த மனிதனும் கண்டுப்பிடிக்கவில்லை. அவற்றின் பெயர்களைத்தான் மனிதன் தெரிந்து கொண்டான். இவற்றிற்கு விளக்கம் தேவை இல்லை. காரண காரியங்கள் தேவையில்லை. மனிதன் என்றால் இவைகளை அறிந்தே ஆகவேண்டும். இவற்றின் பலனை அனுபவித்தே ஆக வேண்டும்.

ஆனால், கடவுள் அப்படி அல்ல; ஒருவன் சொல்லி அதுவும் சொல்லுவது மாத்திரமல்ல, நம்பும்படி செய்து, நம்பும்படி செய்வது மாத்திரமல்ல, நம்பும்படி கட்டாயப்படுத்தி மனித மூளைக்குள் புகுத்தியாக வேண்டும். இந்தக் கதி சர்வ சக்தியுள்ள "கடவுளுக்கு" ஏற்பட்டது பரிதாபம்! மகா பரிதாபம்!

கடவுள் கதை ஒரு முட்டாளுக்குத் தோன்றிய தோற்றம். இது உலக அறிவையே பாழாக்கிவிட்டது. அதாவது சிறு குழந்தை கையில் கிடைத்த நெருப்புப்பந்தம் வீட்டையே, ஊரையே எரித்து சாம்பலாக்கியது என்பது போல் கடவுள் எண்ணம் அறிவையே கொன்று விட்டது என்று சொல்லலாம். கடவுள் என்பது "பிடிக்குப்பிடி நமசிவாயம், (நமசிவாயம் என்றால், இங்கு ஒன்றும் இல்லை; சூனியம் என்றுதான் பொருள்)

அது "கடவுள்" என்றால் ஒரு "சக்தி," "சக்தி கூட அல்ல;" "ஒரு காரணம்" "காரணப் பொருள்கூட அல்ல" அப்படி நினைப்பது, நினைத்துக் கொள்வது மனிதனுக்கு ஒரு "சாந்தி" என்பதாக கா.சு.வும் ( ஆ.டு .பிள்ளை), திரு.வி.க.வும் சொன்ன விளக்கம் - இதை பழைய "குடிஅரசு" இதழில் காணலாம். ஆனாலும் இவர்கள் விக்கிரக பூசையும், பட (உருவ) பூசையும் செய்து வந்தார்கள். கடைசியாக மாற்றிக் கொண்டார்கள்.

மனிதனுக்கு எதற்காக கடவுள் தேவைப் பட்டது என்பது எனக்கு இன்னமும் விளங்க வில்லை. அதிலும், கடவுளை நம்பும் எவனும் அதன் சர்வ சக்தியில் நம்பிக்கை வைப்பதே இல்லை. எவனும் சம்பிரதாயத்திற்காக "கடவுள் செயல்" என்கிறானே தவிர, காரியத்தில் மனிதன் செயல் என்றும், இயற்கை என்றும், அகஸ்மாத், தற்சம்பவம், ஆக்சிடெண்ட் என்றும் தான் முடிவு செய்து கொண்டவனாகிறான். சர்வம் கடவுள் செயல் என்று சொல்லுகின்ற எவனும் சர்வத்திற்கும் தற்காப்பு செய்து கொள்ளாமல் இருப்பதில்லை. சர்வம் கடவுள் செயலாயிருக்கும் போது நாஸ்திகன் - கடவுள் இல்லை என்பவன் எப்படித் தோன்றினான் என்பது பற்றிச் சிந்திப்பதில்லை.

மற்றும் சர்வத்திலும் வியாபகமாக இருக்கிற கடவுள் மக்களுக்கு ஏன் தான் இருப்பதாக, தன்னைத் தானாகத் தெரிந்து கொள்ளச் செய்ய முடியவில்லை என்பதை சிந்திக்கவே மாட்டேன் என்கிறான். கிருஸ்து பாதிரி இந்தக் கேள்விக்குப் பதிலாக "கடவுள் மனிதனுக்கு அறிவைக் கொடுத்து விட்டான்; அந்த அறிவைக் கொண்டு கடவுளைத் தெரிந்து கொள்ள வேண்டியது மனிதன் கடமை" என்று சொல்லிவிட்டார்.

உன் அறிவுக்கு எட்டிய கடவுள் ஏன் என் அறிவுக்கு எட்டவில்லை? என்று கேட்டதற்கு, "பாப ஜன்மங்களுக்கு எட்டாது" என்று சொல்லிவிட்டார். அந்த பாபஜன்மங்களை யார் படைத்தது? படைத்தது கடவுளானால் பாபஜன்மங்களை ஏன் படைத்தார்? கடவுள் பாபஜன்மங்களைப் படைக்கவில்லையானால், பாபஜன்மங்களைப் படைத்தது யார்? என்று கேட்டேன். "சாத்தான் படைத்தான்" என்றும், மற்றும் அவருக்கே புரியாத எதை எதையோ யோசித்துப் பேசினார்.

இஸ்லாத்தின் கதியும் இப்படித்தான். இந்துவின் கதியே மும்மூர்த்திகள் ஓங்காளி, மாரி, காத்தவராயன், மதுரை வீரன், கருப்பண்ணன், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சமாதி, கல்லுகள், படங்கள், பட்சிகள், மிருகங்கள், மரங்கள், சாணி (மூட்டை உருவ), உருண்டைகள், செத்துப்போன

மனிதர்கள் முதலிய எத்தனையோ பண்டங்கள் கடவுள்களாக வணங்கத்தக்கவைகளாகவும் இருந்து வருகின்றன. இவைகளை ஏன் சொல்லுகிறேன் என்றால் ஒரு சர்வ சக்தியுள்ள கடவுளுக்குத் தன்னைப்பற்றித் தெரிவித்துக் கொள்ள - தன் உருவத்தை விளக்க சக்தியில்லை என்பதைக் காட்டத்தான்.

பிறகு - முன்ஜென்மம் - பின் ஜென்மம், கருமம், விதி, நரகம், சொர்க்கம், வைகுண்டம், கைலாயம் இப்படி இன்னும் பல பைத்தியக்காரனுக்குக் கள் ஊற்றினது போல் உளறல் மேல் உளறல்கள்.

மனிதனுக்குப் பிறகு முதல் சாவுவரை எதத்னையோ துன்பமும், தொல்லையும், இருக்க இந்தக் கடவுள் கருமம் மோட்ச - நரகத் தொல்லைகள் ஒருபுறம் மனிதனைச் சித்திரவதை செய்கிறது. மனிதன் (ஜீவ கோடிகள்) பிறப்புக்கும், வாழ்க்கைக்கும், சாவுக்கும் இடையில் அனுபவிக்கும் இன்பம், துன்பம், கவலை, தொல்லை முதலிய காரியங்களுக்கு அவசியம் என்ன? காரணம் என்ன? என்பதை எவனாலும் இதுவரை தெரிந்து கொள்ள முடியவில்லையே! இத்தனைக்கும் மனிதன் கழுதை, குதிரை, நாய், நரி, எருமை, யானை, புலி, சிங்கம், ஈ, எறும்பு முதலான எண்ணிறந்த ஜீவராசிகளைவிட அதிகமான அறிவு (பகுத்தறிவு) படைத்தவனாவான்.

இந்தப் பகுத்தறிவின் பயனால்தான் மற்ற ஜீவப்பிராணிகளுக்கு இல்லாத தொல்லையை மனிதன் அனுபவிக்கிறான். காரணம் இந்தப் பாழாய்ப்போன கடவுளால் தான் அதிகத் தொல்லை என்பேன். "உள்ளத்தைப் பங்கிட்டு உண்பது," "உழைப்பைப் பங்கிட்டுச் செய்வது" என்ற நிலை ஏற்பட்டால் கடவுளுக்கு, வேலையோ, அவசியமோ இருக்காது. இப்போது கையில் வலுத்தவன் காரியமாகவும், அயோக்கியன் ஆதிக்கமாகவும் இருப்பதால், மனிதன் அறிவு இருந்தும் தொல்லைக்கும் துன்பத்திற்கும் ஆளாகிறான் - அடிமையாக வாழ்கிறான்.

இனி ஒரு அய்ம்பது ஆண்டுக்குள் மனிதனுக்கு சராசரி வயது 100 ஆகப் போகிறது. இது உறுதி. இப்பொழுதே பல நாடுகளில் சராசரி மனித வயது 67- முதல் 74- வரை இருந்து வருகிறது. நமது நாட்டில் 1950- ல் சராசரி வயது 32- ஆக இருந்தது. இன்று 50- ஆக ஆகிவிட்டது. இதற்குக் காரணம் 1940- ல் படித்த மக்கள் நம்நாட்டில் 100- க்கு 9- பேராக இருந்தவர்கள் காமராசர் முயற்சியால் 100- க்கு 50- பேராக ஆனதுதான். அதோடு கூடவே, "கடவுளும்," "கடவுள் செயலும்" வெகுதூரம் குறைந்து மறைந்து வருவதும் தான் என்று சொல்லுவேன்.

கடவுள் மறைய மறைய மனிதனுக்கு அறிவு வளரும். சுதந்திரம் அதிகமாகும். நமது பெண்களுக்குப் அந்த பாப ஜன்மங்களை யார் படைத்தது? படைத்தது கடவுளானால் பூரண சுதந்திரம் இருக்குமானால் - வாழ்வில் சுயேச்சையும், சமத்துவமும் ஏற்படுதமானால், மனிதன் அறிவும், ஆயுளும் எல்லை இல்லாமல் வளர்ந்து கொண்டே போகும்.

முதலில் கடவுள் எண்ணம் மறையட்டும். இன்னும் நம்நாட்டு ஆட்சியாளர்களுக்கு (உண்மையான) தி.மு.க. காரருக்கு கடவுள் நம்பிக்கை கிடையாது. அவர்கள் (தி.மு.க.காரர்) இனியும் இரண்டு லட்சம் மெம்பர்களைச் சேர்க்க வேண்டும். பிறகு இவர்களை அசைக்க எந்த மாஜிகளாலும் முடியாது. இது தான் கடவுள் இரகசியம்.

தோழர் பெரியார் விடுதலை 03.11.1970

**சுகாதார வாழ்வு!**

நமது மக்களின் சராசரி வயது 24; வெள்ளைக்காரரின் சராசரி வயது 45. இதற்குக் காரணம் என்ன? சுகாதாரத்தினால் என்ன பலனிருக்கின்றது என்பதே நமக்குத் தெரியாது. “எல்லாம் கடவுள் செயல்” என்கின்ற ஒரே ஒரு அறிவுதான் உண்டு. நமக்குக் ‘காலரா’வந்தால் ‘ஓங்காளியம்மன்’ குற்றமென்று பொங்கல் வைக்கவும்; வேல் மிரவணை செய்யவும் தான் முயற்சி செய்வோம். வைசூரி வந்தால் மாரியம்மன் குற்றமென்று மாரியாயிக்கு தயிர் அபிஷேகமும், இளநீர் அபிஷேகமும் தான் செய்வோம். வயிற்றுவலி வந்தால் திருப்பதி பொன்றாமத்தையனுக்கு வேண்டுதல் செய்வோம். நரம்புச் சிலந்தி வந்தால் சிலந்திராயனுக்கு அபிஷேகம் செய்வோம். நம் சங்கதிதானிப்படி என்றால், குழந்தைகளுக்குக் காயலா வந்தால் ‘பாலாரிஷ்டம்’என்போம்; கிரக தோஷமென்போம்; செத்துவிட்டால் விதி மூண்டு விட்டது என்போம். ஆகவே இந்த மாதிரி வழிகளில் தான் நமது புத்திகள் போகுமேயல்லாமல் ஏன் வியாதி வந்தது! ஆகாரத்திலாவது, பானத்திலாவது, காற்றிலாவது என்ன கெடுதி ஏற்பட்டது? சரீரத்தில் என்ன கோளாறு இருக்கின்றது? என்கின்ற விஷயங்களில் கவலை செலுத்தும்படியான அறிவோ, படிப்போ நமக்குக் கிடையாது.

நமது நாட்டு மக்கள் தங்கள் வீட்டுக் குப்பை களை பக்கத்து வீட்டுக்கு முன்புறமாய்க் கொண்டு போய்க் கொட்டுவதே வழக்கம்; பக்கத்து வீட்டுக் காரன் நமது வீட்டுக்கு முன்புறத்தில் கொண்டுவந்து கொட்டி விட்டுப் போவது வழக்கம். நமது குழந்தைகளுக்குப் பொது வீதிகளேதான் கக்கூசுகள்.

- தோழர் பெரியார், குடிஅரசு, 21.09.1930)

“இப்போது இந்த கோடைகாலப் பருவத்தில் தமிழ்நாட்டில் எங்கும் மாரியம்மன் பண்டிகை என்பதாக ஒரு பண்டிகை நடந்து வருகிறது. மாரியம்மன் கடவுள் - கிராம தேவதை என்று பெயர் இருந்தாலும், அது ஆரியக் கதைப்படி, ஜமதக்கினி முனிவரின் மனைவி ரேணுகாதேவி, மாரி ஆகிவிட்டாள். இந்த மாரி இல்லாத கிராமமே தமிழ்நாட்டில் இல்லை. மாரி, கிராம தேவதையாதலால், பாமர மக்கள் எல்லோருக்கும் கடவுளாகிவிட்டாள்.”

- தோழர் பெரியார், விடுதலை 25.3.1960

ஒரே கடவுள் என்று சொல்லுகின்ற அல்லாசாமியின் உற்சவமும் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது. ஆனால் இந்த மாரி, கருப்பன், காத்த வராயன் என்று சொல்லப்பட்ட ’கீழ்த்தர பரிவார

தேவதைகள்' என்று சொல்லப்படும் சாமிகளின் பக்தர்கள் செய்யும் ஆர்ப்பாட்டம் இப்போது அளவு கிடையாது. இந்த 'தேவதைகளை' வணங்குவதும் இவைகளுக்கு உற்சவம் செய்வதும் கீழ் மக்களாயிருப்பவர்களது செய்கை என்று அனேக சைவ வைணவ பண்டிதர்கள் எழுதி இருக்கின்றார்கள். அன்றியும் மாரி என்றால் என்ன அது எப்படிப்பட்ட தெய்வம் அதன் கதை என்ன என்பது யாருக்காவது தெரியுமா? அது அறிவுள்ள மக்களால் ஒப்புக் கொள்ளக் கூடியதா? என்று பார்த்தால் அது கடைசியில் சைபராகத்தான் முடியும்.

இம் மாதிரி அர்த்தமற்றதும் அனாகரீக மானதும் காட்டுமிராண்டித்தனமானதுமான காரியங்களை மதத்தின் பேரால், கடவுள்களின் பேரால் சற்றும் மான வெட்கமில்லாமல் செய்து கொண்டிருக்கின்ற மக்கள் நம்மை நாஸ்திக மென்றும், மத தூஷணை என்றும், கடவுள் தூஷணை என்றும் சொல்லுவது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. இந்த லட்சணத்தில் இந்த மாரியாயி என்கின்ற சாமிகள் ஒரு ஊருக்கு இரண்டு மூன்று இருந்துகொண்டு ஏககாலத்தில் உற்சவம் செய்து சிறுபிள்ளைகளின் புத்தியை மூடமாக்கி அவர்களையும் காட்டுமிராண்டிகள் போல குதிக்கும்படி செய்வது மிகவும் அக்கிரமமான காரியமாகும். இதற்கு வியாபாரிகள் என்று சொல்லப்படுவோர்கள் கடைகடைக்கு 10-ம் 5-ம் கொடுத்து இதை வளர்ப்பது என்பது அதி மூடத்தனமும் அக்கிரமுமான காரியமாகும்.

மற்றும் இப்படிப்பட்ட காரியங்கள் பொது ஜனங்கள் சுகாதாரத்திற்கு எவ்வளவு கெடுதி என்றும் கட்சி, பிரதிக் கட்சிகளால் பொதுஜன அமைதிக்கு எவ்வளவு பங்கம் என்றும் நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.:"

-தோழர் பெரியார், குடி அரசு 02.04.1933

**சிங்கப்பூரில் பெரியார்**

பொதுவாக பூரண மது விலக்கு முடியா தென்றும் சிறப்பாக நூற்றுக்குத் தொண்ணூறு மக்களாகிய பாமர மக்களுக்குள் சிறிதுகூட முடியாதென்றும் இந்துக்களுடைய கடவுள்களில் பாமர மக்கள் கடவுள்களாகிய முருகன், காட்டேரி, கருப்பன், வீரன், முனி யாண்டி, காளி, பராசக்தி முதலாகிய கடவுள்களும் மற்றும் பல பார்ப்பன கடவுள்களும் யாகம் சாந்தி முதலிய வைதீகச் சடங்குகளுக்கு வழிபடும் இந்துக்களில் மதுவை கட்டாய வஸ்துவாக கொண்டிருக்கின்றது என்றும் அனேகம்பேருக்கு மதுபானம் மதசம்பிரதாயத்திலும் மரியாதை சம்பிரதாயத் திலும் கட்டாய வஸ்துவாக கருதப்பட்டு வருகின்றது என்றும் அதனாலேயே தான் மதுவிலக்குக்குமிதக்குடி (டெம்பரன்ஸ்) என்றும் பேர் ஏற்பட்டதென்றும் இதில் நம்பிக்கை உள்ள சமூகத்திற்கு மதுவிலக்கு என்பது சுலபசாத்தியமல்ல என்பதே தமது அபிப்பிராயம்.

மலாய் நாட்டில் உள்ள தோட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கள்ளுக்கடையும் கள்ளுள் வைத்து நைவேத்தியம் செய்ய ஒவ்வொரு சாமி கோவிலும் இந்து மக்கள் சம்மதத்தின் பேரிலேயே கட்டப்பட்டிருப்பதாக கேள்விப்பட்டதாகவும் அக்கோவில்களை யெல்லாம் இடித்து அச்சாமி களையெல்லாம் ஒழித்தாலொழிய மதுவிலக்கைப் பற்றி பேசுவது யோக்கியமாகாது. இப்படியே அனேகமான ஒழுக்கமற்ற காரியங்கள் மதத்தின் பேராலும் சாமியின் பேராலும் மக்களுள் புகுத்தப்பட்டிருக்கிறது. அதனாலேயே தான் நமது ஒழுக்கமும் முன்னேற்றமும் தடைப்பட்டு வருகின்றது. ஆதலால் அதை ஒழிக்கவேண்டு மென்றால் முதலில் அதற்கு அஸ்திவாரத்தைக் கண்டுபிடித்து அது ஏதுவானாலும் அதை இடித்தெறிய தயாராகவேண்டும்.

தோழர் பெரியார், குடி அரசு - 02.02.1930

கல்வியைக் கடவுளாக மதித்து அதற்காக கோடிக்கணக்காய்ப் பணம் செலவு செய்து வரும் நாட்டில் ஆண்களில் 100-க்கு 10 பேர் கூட பெண்களில் 1000-க்கு 10 பேர் கூட படித்தவர்கள் இல்லையானால் உண்மையிலேயே கல்வி என்பதாக ஒரு கடவுள் இருந்து நமது பூஜையை ஏற்றுக் கொண்டு வருகின்றது என்று நம்புகின்றீர்களா? காளி, கருப்பன், வீரன் என்று வீரத்தன்மைக்குக் கூடக் கடவுள்களைச் சிருஷ்டித்து அதை வணங்கி வரும் மக்கள் துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டவுடன் காய்ச்சல் வருவதானால் ஒரு வீரக்கடவுள் இருந்து பூஜைகளை ஏற்கின்றது என்று நம்புகின்றீர்களா?

வியாதிகளையெல்லாம் தெய்வமாகக் கும்பிட்டு, அவற்றிற்கு கோவில், பூஜை, உற்சவம் செய்து வந்தும் நமது நாட்டில் வியாதிகளும் சாவுக் கணக்குகளும் மற்ற நாட்டாரை எல்லாம்விட ரெட்டிப்பாய் இருந்து வருகின்றது. இந்த வியாதி தெய்வங்கள் என்பவைகள் உண்மையிலேயே நமது பூஜை, உத்சவம், செலவு ஆகியவைகளை ஏற்றுக் கொண்டது உண்மை யானால் இப்படி நடக்குமா? என்று கேட்கின்றோம்.

மற்றும் இதுபோலவே, தொட்டதற்கெல்லாம் கடவுளை ஏற்படுத்தி அதற்குப் பூஜை, உத்சவம் செய்வதில் நமது புத்தியும், பணமும் நேரமும், ஊக்கமும் பாழாகின்றதேயல்லாமல் காரியத்தில் ஏதாவது கடுகளவு பயனுண்டா? என்று கேட்கின்றேன்.

- தோழர் பெரியார்,
குடி அரசு 24.03.1929



# புத்த மதத்தின் அழிவுக்குக் காரணம் குலதெய்வ வழிபாடுகளே!

**தோழர் அம்பேத்கர்**

பிராமணர்கள் சமுதாயத்தை நான்கு பகுதிகளாக, வர்ணங்களாக, பிரித்தனர். பிராமணர்கள், ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்ற பிரிவுகள் அவை. இது சமுதாயத்தை நான்கு வர்ணங்களாகப் (ஜாதிகளாக) பிரித்துச் சமுதாயத்தில் பெரிய ஏற்றத் தாழ்வுகளை உண்டு பண்ணியது. பிராமணர்கள். பிரம்மாவின் வாயிலிருந்து சூத்திரர்கள் அவரது கால்களிலிருந்தும் பிறந்தனர் என்று அவர்கள் சொன்னார்கள்.

புத்த மதம் தோன்றிய பின்னர் சூத்திரர்கள் ஆட்சிக்கு வந்ததை இந்திய வரலாறு வெளிப்படுத்துகிறது. இது ஜனநாயகமும் சோஷலிச பாணி சமுதாயமும் இந்தியாவில் தோன்றுவதற்கு உண்மையாகவே வழிவகுத்தது. இத்தகைய உயர்ந்த இடத்தை பெற்றிருந்த புத்தமதம் எப்படி இந்தியாவிலிருந்து மறைந்தது என்பது புரியாத புதிர்.

கி.மு. 274க்கு முன்னால் புத்த மதம் எப்படி இருந்தது என்பதைக் காட்ட எந்த ஆதாரமும் நம்மிடம் இல்லை. இருந்த போதிலும் அசோகரின் ஆட்சிக் காலத்தில் புகழின் உச்சியில் அது இருந்தது. இத்தகைய பிரபலமான மாபெரும் மதம் மறைந்து போனது ஒரு வேதனையான விஷயம் மௌரிய வம்சத்தின் கடைசி மன்னன் அவரது தலைமைத் தளபதியாலேயே கொல்லப்பட்ட பின் புத்த மதத்துக்குப் பெரிய எதிர்ப்புத் தோன்றியதாகத் தெரிகிறது. பிராமணர்கள் தங்கள் மதத்தைக் காத்துக் கொள்ள அவர்களுக்குக் கிடைத்த சட்டப் பூர்வ சம்பவம் இது.

ஆனால் இந்தச் சம்பவத்துக்கு வரலாற்றாசிரியர்கள் தகுந்த முக்கியத்துவம் கொடுக்கவில்லை. புத்த மத இலக்கியங்களை நான் படித்துப் பார்த்த போது, புத்தரின் சீடர்களில் 90 சதம் பேர் பிராமணர்கள் என்று கண்டேன். பிராமணர்கள் புத்தரிடம் விவாதம் நடத்தவும் வாதம் புரியவும் வந்தனர். அவர்கள் வாதத்தில் தோற்றபோது புத்தருக்கு ஆதரவாளர்களாக மாறினர். இறுதியில் புத்த மதத்தை ஏற்றுக்கொண்டனர். புத்த மத இலக்கியங்கள் இத்தகைய பல சம்பவங்களை நமக்கு எடுத்துச் சொல்கின்றன.



இவ்வாறாக, பிராமணர்கள் பெரும்பாலாரின் மத்தியிலே தழைத்துச் செழித்திருந்த புத்த மதம் எப்படி பிராமணர்களாலேயே அழிக்கப்பட்டது என்பது புரியவில்லை. இதற்குப் பிரதானமான காரணம் குலதெய்வ வழிபாடுதான் என்று நான் நினைக்கிறேன். இந்தியாவில் கிராம தெய்வம், தேசிய தெய்வம் ஆகியவை தவிர, குடும்ப தெய்வங்கள் இருக்கின்றன. பிராமணர்கள் மூலம் இந்தத் தெய்வங்கள் வழிபாடு செய்யப்படுகின்றன. இந்த தெய்வங்களுக்குப் பூசை செய்வதற்காகச் செல்கின்ற பூசாரிகள் இராணிகளின் மூலமாக அரசாங்க விஷயங்களில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கினர்.

புத்த மதத்தைத் தழுவிய அசோகர் இந்தப் பழக்கத்தை ஒழித்து இக்கடவுளர்களின் சிலைகளையும் அகற்றிவிட்டார். “ஞானம் பெற்றவரான புத்தரை நான் வழிபடுவதால் வேறு தெய்வங்களை வழிபடத் தேவையில்லை” என்று அசோகர் சொன்னார். அசோகரின் இந்தச் செய்கையால் அநியாயமாக பெற்று வந்த தமது வாழ்க்கை வருமானத்தை இழந்த பிராமணர்கள் கோபமுற்றனர். தமது இந்த இழப்புக்கு அவர்கள் பழிவாங்க உறுதி கொண்டனர்.

குலபூஜை முறை ஒழித்துக் கட்டப்பட்டதால் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்த பிராமணர்கள், ஆலோசகர்களாக மட்டுமே இருப்பது என்ற தமது கொள்கையை விட்டுவிட்டு ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர். இவர்களது நலம் விரும்பிகளான க்ஷத்திரியர்களுடன் சேர்ந்து, புத்த மதத்துக்கு எதிராகப் பிராமணர் - க்ஷத்திரியக் கூட்டணியை உருவாக்கினர். பிராமணியம் மேல் நிலைக்கு வந்ததால் புத்த மதம் வீழ்ச்சியுற அது ஒரு காரணமாயிற்று.

- இலங்கை கொழும்புவில் 1950 ஆம் ஆண்டு மே 25 முதல் ஜூன் 6 வரை நடைபெற்ற பௌத்தர்களின் உலகத் தோழமை மாநாட்டில் ஜூன் 6 ல் தோழர் அம்பேத்கர் ஆற்றிய உரைகளின் சுருக்கம்.

-முன் அட்டை உள்பக்க தொடர்ச்சி

**நமது முன்னோர்கள்களான குலதெய்வங்களைப் பார்ப்பனர்கள் கைப்பற்றி விட்டார்கள் என்று நீங்களே கூறுகிறீர்கள். அப்படியானால் அந்தத் தெய்வங்கள் பார்ப்பனர் அல்லாத நம் குலத்தின் முன்னோர்கள் தானே? அவர்களை வணங்குவதன் அடிப்படையில் திருமணங்களை நடத்திக்கொள்வது எந்த வகையில் தவறாகும்?**

நாம் வணங்குவது, பார்ப்பனத் தெய்வமோ, தமிழ்த் தேசியஇனத் தெய்வமோ, திராவிடர் மரபினத் தெய்வமோ எதுவாக இருந்தாலும் அந்தத் தெய்வங்கள் முழுக்க முழுக்க ஜாதிக்கு ஒன்றாகப் பிரிக்கப் பட்டுள்ளன. ஜாதிக்குள்ளேயே பல உட் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரே ஜாதிக் குள்ளேயே பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து திருமணங்கள் நடந்து வருவதற்கு அடிப்படைக் கருவிகளாகக் இருக்கின்றன. அகமணமுறையின் அஸ்திரவாரங்களாக உள்ளன. அந்த அஸ்தி வாரத்தை அடித்து நொறுக்க வேண்டியது ஜாதி, மத ஒழிப்புச்சிந்தனை உள்ளவர்களின் முதல் கடமை.

**பல ஜாதிகள் ஒன்றாகக் கும்பிடும் குலதெய்வங்கள்கூட இருக்கின்றனவே?**

பல ஜாதிகள் ஒன்றாகக் கும்பிட்டால், அது குலதெய்வம் என்ற வரையறைக்குள் எப்படி வரும்? அப்படி இருந்தால் அது நாட்டார் தெய்வம் அல்லது பொதுத் தெய்வம் அல்லது கிராமதெய்வம் என்று கூறலாம்.

**மூங்கிலணைக்காமாட்சி அம்மன் என்ற தெய்வம் பல ஜாதிகளுக்கும் குல தெய்வமாகவே இருக்கிறது. கன்னடச் செட்டியார், தெலுங்கு நாயக்கர், தேவர், வன்னியர் என பலருக்கும் குல தெய்வமாக இருக்கிறது. அந்த வழிபாட்டை எப்படி ஜாதிவழிப்பட்ட வழிபாடு என்று கூறமுடியும்?**

வன்னியர் ஜாதியில் காமாட்சி அம்மனைக் குலதெய்வமாக வணங்குபவர்களுக்கு, கருப்புச்சாமி என்ற குலதெய்வத்தை வணங்குபவர்கள் மாமன், மச்சான் முறையாக வருவார்கள். எடுத்துக்காட்டாக, வன்னியர் ஜாதியில் உள்ள கருப்புச்சாமியை வணங்கும் ஒருவர், நாயக்கர் சமுதாயத்தில் காமாட்சி அம்மனை வணங்கும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய முடியுமா? கள்ளர் சமுதாயத்தில் சோனைக் கருப்புவை வணங்கும் ஒருவர் பார்ப்பன இனத்தில் காமாட்சி அம்மனை வணங்கும் பார்ப்பனப் பெண்ணைத் திருமணம் செய்ய முடியுமா? எனவே, பல ஜாதிகள் ஒன்றாக ஒரு தெய்வத்தைக் குலதெய்வ மாக வணங்குவதாகக் கூறுவது தவறு. அவை பொதுத் தெய்வங்கள் அல்லது நாட்டார் தெய்வங்கள் என்ற நிலையில் உள்ளவைதான்.

இதுபோல பலஜாதிகள் வணங்கும் மூங்கிலணைக் காமாட்சி, சோனை முத்தையா போன்ற தெய்வங்களின் கோவில்களில் பிடிமண் எடுத்துக்கொண்டுபோய், அவரவர் வசிக்கும் ஊர்களில் வைத்து, அங்கு சிறிய அளவில் ஒரு கோவிலைக்கட்டி வழிபட்டு வருகின்றனர்.

எந்த ஜாதி பிடிமண் எடுத்துப் போய் எந்த ஊரில் வைத்துக் கும்பிடுகிறதோ, அந்தப் பகுதியில் அந்த ஜாதிக்கு அது குலதெய்வமாக இருக்கிறது. மேலோட்டமாகப் பொதுத்தெய்வமாக அறியப் பட்டாலும், அது ஜாதித்தெய்வமாக மாற்றப்பட்டு வணங்கப்படுகிறது.

**அப்படியானால், இது தெய்வத்தின் குற்றமோ, வழி பாட்டு முறையின் குற்றமோ அல்ல. மனிதர்களின் குற்றம் தானே? மனிதர்களைத் திருத்தினால் போதுமே? எதற்காக வழிபாட்டு முறையையே அழிக்க வேண்டும்?**

ஜாதி என்றால் என்ன? அது செங்கல் சுவரா? கற்கோட்டையா? இரும்புக் கோட்டையா? எதாவது ஊரில் பாதுகாக்கப்பட்டு இருக்கிறதா? வேறு ஏதாவது ஒரு தனிவடிவத்தில் அது இயங்குகிறதா? அப்படி இருந்தால் அதைத் தேடிப்போய் அழித்து விட்டு வரலாம்.

ஜாதி ஒரு மனநிலை. ஒரு கருத்து. ஒரு கருதுகோள். அந்த மனநிலையை உருவாக்கும் எவையாக இருந்தாலும் - அந்த மனநிலையை நினைவுபடுத்தும் எவையாக இருந்தாலும் - அந்த மனநிலையைப் பயிற்றுவிக்கும் - நடைமுறைப் படுத்தும் எவையாக இருந்தாலும் அவை அனைத் தையும் அழிக்காமல் அந்த மனநிலை எப்படி மாறும்? மறையும்? எனவே, ஜாதியை நினைவூட்டும், நடைமுறைப்படுத்தும், பயிற்றுவிக்கும், பயன் படுத்தும் எவையாக இருந்தாலும் அவற்றின் அழிவுதான் ஜாதியின் அழிவு.

**குலதெய்வங்கள் அழிந்துவிட்டால், எதன் அடிப்படையில் திருமணங்களை முடிவு செய்வது? யார் பங்காளி முறை? யார் மாமன் முறை என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?**

முதற்கட்டமாக, தாழ்த்தப்பட்டவர்கள் அனை வருமே பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மாமன் மச்சான் முறை என்று வைத்துக்கொள்ளலாம். அதில்கூட ஜாதிப் பெயரெல்லாம் பார்க்காமல், எஸ்.சி, எஸ்.டி, பி.சி, எம்.பி.சி என்று நான்கு பிரிவுகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு - பி.சி, எம்.பி.சி பட்டியலில் உள்ள எல்லோரும் எஸ்.சி, எஸ்.டி பட்டியலில் உள்ள மக்களுடன் பெண் எடுப்பது, பெண் கொடுப்பது என கொள்வினை, கொடுப்பினைகளை நடத்திக்கொள்ளலாம். காலப் போக்கில் இந்தப் பிரிவுகளும் மாறி அப்போதைக்கு எது அறிவியல்பூர்வமான முறையோ அதைச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளட்டும்.

திருமண உறவுகளை ஜாதி கடந்து நடத்து வோம். அகமணமுறையை அழிப்போம். ஆரோக்கிய மான தலைமுறையை உருவாக்குவோம் என்ற சிந்தனைகளைக் கொண்டவர்களுக்குக் குலதெய்வங் கள் தேவையில்லை. தனக்கு ஜாதி அவசியம் வேண்டும். அதுவும் மற்ற ஜாதிகளை ஆதிக்கம் செய்துகொண்டு இருக்க வேண்டும் என்ற சிந்தனை கொண்டவர்கள் குலதெய்வங்களைக் காப்பாற்றவே முனைவார்கள்.

ஜாதி ஒழிப்பில் அக்கறை கொண்டோர் அனைவரும் வருக.



# ஜாதி-தாலி-மொழி-சடங்குகள் கடந்த

## திருமண வரவேற்பு

இணையர்:

**சோ.திராவிடராணி**

காட்டாறு தொகுப்புக்குழு

**செ.குமார்**

வருவாய் ஆய்வாளர்

தலைமை:

பொள்ளாச்சி தோழர் சி.விஜயராகவன்

இடம்: கருந்திணை இல்லம்,
காளிவேலாம்பட்டி, பல்லடம்
நாள்: 04.06.2017 ஞாயிறு மாலை 5

தோழமையுடன்
காட்டாறு குழு & கருந்திணை

தோழர்களுக்கு வணக்கம். வருகின்ற புதிய குரல் 10 வது சந்திப்பு குற்றாலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மே 26,27,28 ஆகிய நாட்களில் நடைபெறஉள்ளது. வழக்கம்போல் மூன்றாவது நாள் சுற்றுலா நாளாக இருக்கும். பங்கேற்க விரும்புபவர்கள் முன்கூட்டியே தங்கள் வரவைப் பதிவு செய்யும்படிக் கேட்டு கொள்கிறோம். நபர் ஒருவருக்கு மூன்றுநாள் உணவு , தங்கு மிடம், சுற்றுலா அனைத்திற்குமான செலவு களுக்கு ரூபாய் 2000 வரை எதிர்பார்க்கப் படுகிறது.

முன்பணம் செலுத்த:
P.MURUGANANDAM, SB A/C NO.452592795,
INDIAN BANK, NERUJI NAGAR BRANCH,
DINDIGUL. IFSC CODE:IDIB000D038.
பணம் செலுத்தும் தோழர்கள், செலுத்திய விவரங்களைக் கீழ்க்கண்ட செல் எண்ணுக்குத் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

தோழமையுடன்,
திண்டுக்கல் விஜி
94862 27822,
94897 03989




Owner and Publisher by : S.Vijayaragavan +91 99762 56821
Consulting Editor: C.Ragavan
# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com